**<u>சு.ஜெ.ந.தி.எண் 454/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 12.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.496/2012 **பொருள் எண்.01**

**<u>சென்னை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வறுமையில் வாழும் முதியோர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வறுமைக்கோட்டு எண் வழங்க அனுமதி.</u>**

சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதத்தில் சென்னை மாநகராட்சி எல்லலைக்கு உட்பட்ட ஐந்து வட்டாட்சியர் அலுவலகங்களின் எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் 796 முதியோர்கள் மற்றும் 257 விதவைகளுக்குமாக மொத்தம் 1053 பயனாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் வறுமை நிலையை கண்டறிந்து அவர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்க மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மூலமாக மத்திய அரசின் இந்திரா காந்தி தேசிய முதியோர் மற்றும் விதவை ஓய்வூதிய திட்ட நிதியிலிருந்து 1053 பயனாளிகளுக்கு ஓய்வூதியம் வழங்க தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

அவ்வாறு ஐந்து வட்டாட்சியர் அவர்களால் ஆகஸ்டு 2012 மற்றும் செப்டம்பர் 2012 மாதங்களில் கண்டறியப்பட்ட முதியோர்கள் பற்றிய விவரம் கீழ் வருமாறு.

| வ. எண் | வட்டாட்சியர்அலுவலகப் பெயர் | ஆகஸ்ட் 2012 | | செப்டம்பர் 2012 | | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | | முதியோர் | விதவை | முதியோர் | விதவை | |
| 1 | எழும்பூர்–நுங்கம்பாக்கம் | 10 | 13 | 26 | 14 | 63 |
| 2 | கோட்டை–தண்டையார்பேட்டை | 62 | 31 | –– | 65 | 158 |
| 3 | மாம்பலம்–கிண்டி | 228 | 77 | 69 | 57 | 431 |
| 4 | மைலாப்பூர்–திருவல்லிக்கேணி | 108 | –– | 112 | –– | 220 |
| 5 | புரசைவாக்கம்–பெரம்பூர் | 166 | –– | 15 | –– | 181 |
| | மொத்தம் | 574 | 121 | 222 | 136 | 1053 |

இந்திரா காந்தி தேசிய முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் இதுவரை 2,30,455முதியோர்களுக்கு வறுமைக்கோட்டு எண் வழங்கி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக மேலே குறிப்பிட்டுள்ள 1053 முதியோர்களுக்கு வறுமைக்கோட்டு எண் 2,30,456 முதல் 2,31,508 வரை வறுமைக்கோட்டு எண் வழங்கப்பட வேண்டும்.

எனவே, மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 796 முதியோர்கள் மற்றும் 257 விதவைகளுக்குமாக மொத்தம் 1053 பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டு எண் 2,30,456 முதல் 2,31,508 வரை வறுமைக்கோட்டு எண் வழங்க நிலைக்குழு(கல்வி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘16.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.72/2012, நாள் 16.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண். பி3/18134/2012**
**ஆணையர் அவர்களின் 16.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.497/2012 **பொருள் எண்.02**

**அரசாணையின்படி திருவேங்கட சாமி தெரு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் ஏற்கனவே பயிலும் 1 முதல் 5ம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தொடக்கப்பள்ளியாக பிரித்து செயல்பட மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.**

அரசாணை நிலை எண்.172ன் படி, கீழ்க்காண் சென்னை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 01 | செ.ந.நி.பள்ளி திருவேங்கடசாமி, புளியந்தோப்பு, வார்டு எண்.73 புதிய மண்டலம் – 6 |
| 02 | செ.ந.நி.பள்ளி கண்ணம்மாபேட்டை, வார்டு எண்.141, புதிய மண்டலம் – 10 |

மேற்காண் தரம் உயர்த்தப்பட்ட இரு உயர்நிலைப் பள்ளிகளிலும் தலைமை ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

திருவேங்கட சாமி தெரு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதால் 1 முதல் 5 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி தொடக்கப் பள்ளியாக செயல்பட நிலையிறக்கம் செய்து சென்னை தொடக்கப் பள்ளி திருவேங்கட சாமி தெரு என பிரித்து செயல்படுவதற்கு மன்றத்தின் பின்னேற்பாணைக்குட்பட்டு ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

இதன் தொடர்பாக மன்றத்திற்கு கீழ்க்காண் விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

- ❖ உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் உயர்நிலைப் பள்ளிக்கென ஒதுக்கப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் ஊதியம் பெறப்பட வேண்டும்.
- ❖ உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் 6 முதல் 10 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், 1 முதல் 5 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி தொடக்கப் பள்ளியாகவும் செயல்படுதல் வேண்டும்.

எனவே,

திருவேங்கட சாமி தெரு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதால் 1 முதல் 5 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி தொடக்கப் பள்ளியாக செயல்பட நிலையிறக்கம் செய்து சென்னை தொடக்கப் பள்ளி திருவேங்கட சாமி தெரு என பிரித்து செயல்படுவதற்கு நிலைக்குழு (கல்வி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘16.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.74/2012, நாள்.16.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு(கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>க.து.ந.க.எண். பி3/18134/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 16.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.498/2012 **பொருள் எண்.03**

**<u>அரசாணையின்படி கண்ணம்மாபேட்டை நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் ஏற்கனவே பயிலும் 1 முதல் 5ம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை தொடக்கப்பள்ளியாக பிரித்து செயல்பட மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி</u>**

அரசாணை நிலை எண்.172ன்படி, கீழ்க்காண் சென்னை நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 01 | செ.ந.நி.பள்ளி திருவேங்கடசாமி, புளியந்தோப்பு, வார்டு எண்.73 புதிய மண்டலம் – 6 |
| 02 | செ.ந.நி.பள்ளி கண்ணம்மாபேட்டை, வார்டு எண்.141, புதிய மண்டலம் – 10 |

மேற்காண் தரம் உயர்த்தப்பட்ட இரு உயர்நிலைப் பள்ளிகளிலும் தலைமை ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

கண்ணம்மாபேட்டை நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதால் 1 முதல் 5 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி தொடக்கப் பள்ளியாக செயல்பட நிலையிறக்கம் செய்து சென்னை தொடக்கப் பள்ளி கண்ணம்மாப்பேட்டை என பிரித்து செயல்படுவதற்கு மன்றத்தின் பின்னேற்பாணைக்குட்பட்டு ஆணையரின் ஆணை பெறப்பட்டது.

இதன் தொடர்பாக மன்றத்திற்கு கீழ்க்காண் விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

- ❖ உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் உயர்நிலைப் பள்ளிக்கென ஒதுக்கப்பட்டுள்ள கணக்குத் தலைப்பின் கீழ் ஊதியம் பெறப்பட வேண்டும்.
- ❖ உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்ட பின்னர் 6 முதல் 10 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும் 1 முதல் 5 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி தொடக்கப் பள்ளியாகவும் செயல் படுதல் வேண்டும்.

எனவே,

கண்ணம்மாபேட்டை நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டதால் 1 முதல் 5 வரையுள்ள வகுப்பு மாணவர்கள் பயிலும் பள்ளி தொடக்கப் பள்ளியாக செயல்பட நிலையிறக்கம் செய்து சென்னை தொடக்கப் பள்ளி கண்ணம்மாப்பேட்டை என பிரித்து செயல்படுவதற்கு நிலைக்குழு (கல்வி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“16.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தின் தீர்மான எண்.73/2012, நாள் 16.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

<u>ம.அ2.ந.க.எண்.பி2/1099/2012</u>
<u>ஆணையர் அவர்களின் 16.08.2012 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.499/2012 **பொருள் எண்.04**

<u>தானப்பத்திரம்</u>

சென்னை மாநகராட்சி, மண்டலம்—2ல் திரு. எஸ்.வி. மாணிக்கம் அவர்கள் சர்வே எண்.120/1A1A மற்றும் 120/1A1Bல் வடசென்னை பதிவு மாவட்டம், ரெட்ஹில்ஸ் உபபதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், தற்போது (மாதவரம் வட்டம்) மாத்தூர் கிராமத்தில் உள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு ஒப்புதல் வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

31.08.2010 நாளிட்ட 1530 என்ற எண்ணுள்ள 2010 ஆண்டின் பத்திரப்படி ஷெட்யூலில் குறிப்பிட்ட நிலத்தினை திரு. எஸ்.வி. மாணிக்கம் வாங்கியுள்ளார்.

<u>சொத்து விவரம்</u>

வட சென்னை பதிவு மாவட்டம், ரெட்ஹில்ஸ் உபபதிவு மாவட்டம், திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம் தற்போது (மாதவரம் வட்டம்) மாத்தூர் கிராமத்தில் அடங்கிய புதிய சர்வே எண்.120/1A1Aல் அடங்கிய பூரா விஸ்திரணம் ஏக்கர் 0.27 1/2 செண்ட் நிலம். இதற்கு பட்டா எண்.1991 மற்றும் புதிய சர்வே எண். 120/1A1B ல் அடங்கிய பூரா வீஸ்திரணம் ஏக்கர் 0.27 1/2 செண்ட் நிலம் இதற்கு பட்டா எண். 1992 ஆக மொத்தம் 0.55 செண்ட் நிலம் (2226 சதுர மீட்டர்) அதில் சாலைப்பகுதி 480 சதுர மீட்டர்.

மேற்கண்ட மனைப்பிரிவு ஒப்புதல் பெற வேண்டி சாலைகளின் எல்லைகள், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் வரையறுக்கப்பட்டு சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது. நிலம் சம்மந்தமாக ஆய்வு செய்யப்பட்டு திரு.எஸ்.வி.மாணிக்கம் அந்நிலத்தின் உரிமையாளர் என்று சரிபார்க்கப்பட்டது. விண்ணப்பதாரர் சாலைகளை ஒப்படைக்கும் பொருட்டு தானப்பத்திரம் அளித்துள்ளார்.

அச்சாலைகளை மேம்படுத்துவதற்கு உத்தேச அபிவிருத்தி கட்டணமாக கீழ்கண்டவாறு மனுதாரர் செலுத்த வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 01) | சாலைகளை மேம்படுத்த கட்டணம் | :ரூ. 3,14,648/— |
| 02) | தெருவிளக்குகள் அமைக்க கட்டணம் | :<u>ரூ. 48,840/—</u> |
| | மொத்த உத்தேச அபிவிருத்தி கட்டணத் தொகை | <u>ரூ. 3,63,488/—</u> |

இத்தொகையை செலுத்துவதற்கு மனுதாரர் ஒப்புதல் கொடுத்துள்ளார்.

எனவே, கீழ்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் வரையறுக்கப்பட்ட சாலை பகுதி மனுதாரர் திரு. எஸ். வி. மாணிக்கம் அவர்களிடமிருந்து தானப் பத்திரம் மூலம் பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலைகள் மற்றும் தெரு விளக்கு அமைப்பதற்கு தோராய அபிவிருத்தி கட்டணமாக ரூ.3,63,488/— நில உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. நில உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் சாலைகளுக்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழை'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

''ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.11.2012 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 16.11.2012 அன்று தீர்மான எண்.23/2012—ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மஅ.5 ந.க.எண்.இ4/1088 A/12**
**ஆணையர் அவர்களின் 22.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.500/2012 **பொருள் எண்.05**

**தானப்பத்திரம்**

திரு. பரம்சந்த்தாஸ் மற்றும் சோட்டா தாஸ், வார்டு – 59,எண்.98, ராசப்ப செட்டி தெரு, பார்க் டவுன், குடியிருப்பு இடத்திற்கு கட்டிட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய வி.ஓ.சி சாலை " சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II"ன் மூலம் இச்சாலையை24.25 மீட்டர் அகலத்திலிருந்து 27.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 1.37 மீட்டர் அகலத்திற்கு இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்மந்தமாக கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 1.37 மீ அகலத்திற்கு 28.04 மீட்டர் நீளத்திற்கும், splay portion-ம் சேர்த்து மொத்தம் 39.59ச.மீ பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–5ல் பரிந்துரை செய்து (தீர்மான எண்.29) 17.04.2012 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது சம்பந்தமாக கோப்பு நகரமைப்பு பிரிவுக்கு அனுப்பிய போது, இந்த வி.ஓ.சி சாலையானது நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமானது எனவும், எனவே, சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் இடத்தினை நெடுஞ்சாலைத்துறையிடமே ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் நெடுஞ்சாலைத் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

உதவி கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) அவர்களின் கடிதத்தில் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்கும் மாநகராட்சியினால் நிலம் Taken over செய்யப்பட வேண்டும் எனவும், அதன்பின் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்ட பின்பு வழங்க Completion Certificateயுடன் வருவாய்த்துறை ஆவணங்களில் உரிய பெயர் மாற்றம் செய்து ஆக்கிரமிப்பு ஏதும் இல்லாமல் நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்க கருத்துரு பெறப்பட்டது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற கீழ்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கட்டட உரிமையாளர் திரு. பரம்சந்த் தாஸ் மற்றும் சோட்டா தாஸ் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 39.59ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.25,000/– கட்டட உரிமையாளரிடம் "ஆணையர் சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு "வளர்ச்சி உரிமை சான்றிதழ்" சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்,
4. கட்டிடம் கட்டி முடித்தப்பின் சாலை விரிவாக்கத்திற்காக தானமாக பெற்ற 39.59ச.மீ நிலத்தினை நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கவும்.

"ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.11.2012 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 16.11.2012 அன்று தீர்மான எண்.22/2012–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>ம.அ.5.ந.க.எண்.இ4/1434/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 20.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.501/2012 **பொருள் எண்.06**

**<u>தானப்பத்திரம்</u>**

திரு. எம்.எஸ். யோகீஸ் மற்றும் நான்கு நபர்கள் வார்டு–61, எண்.502/2, பாந்தியன் சாலை, எழும்பூர், வியாபாரஸ்தலத்துடன் கூடிய குடியிருப்பு இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை “ சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II” ன் மூலம் இச்சாலையை 22.00மீட்டர் அகலத்திலிருந்து 24.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 1.00 மீட்டர் மற்றும் 3.00 மீட்டர் அகலமுள்ள இடத்தினை தானபத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்பந்தமாக கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 11.53 மீ அகலத்திற்கு 21.57 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–5ல் பரிந்துரை செய்து (தீர்மான எண்.28) 17.04.2012 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற கீழ்க்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கட்டட உரிமையாளர் திரு. எம்.எஸ். யோகீஸ் மற்றும் நான்கு நபர்கள் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 21.57 ச.மீ. நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.14,000/– கட்டட உரிமையாளரிடம் “ஆணையர் சென்னை மாநகராட்சி என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு “வளர்ச்சி உரிமை சான்றிதழ்” சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

“14.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.18/2012, நாள் 14.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.5.ந.க.எண்.இ4/ 1088 /2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 12.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.502/2012 **பொருள் எண்.07**

**<u>தானப்பத்திரம்</u>**

திரு. வி. சிவகாமிநாதன் அவர்கள் வார்டு – 62, அருணாச்சலம் சாலையில் பழைய கதவு எண்.57/3, புதிய கதவு எண்.88 வியாபாரஸ்தலத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். இந்த சாலையானது சென்னை நகர வளர்ச்சி குழுமம் விரிவான மேம்படுத்தும் வரைப்படத்தின்படி (D.D.P)ன்படி, 3 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் விண்ணப்பதாரரின் மனையில் 1.5 மீட்டர் அகலத்திற்கு மற்றும் 13.275 மீட்டர் நீளத்திற்கும் ஆக 19.91 சதுர மீட்டர் இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும். இது குறித்து விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்டு மேற்படி இடத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைக்க ஒப்புதல் அளித்துள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி இடத்தினை தானபத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்ள மண்டலம்–5 வார்டு குழுவின் பரிந்துரை அளித்துள்ளது.

எனவே, கீழ்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மண்டலம்–5, வார்டு–62, அருணாச்சலம் சாலையில் பழைய கதவு எண்.57/3, புதிய கதவு எண்.88, R.S.No. 311/15, 311/21, 311/24, மற்றும் 311/30, பிளாக் எண்.7, சிந்தாதிரிப்பேட்டை கிராமத்தில் 1.5 மீட்டர் அகலத்திற்கு மற்றும் 13.275 மீட்டர் நீளத்திற்கும் ஆக 19.91 சதுர மீட்டர் இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தின் சாலை விரிவாக்க பணிக்காக ஆகும் செலவை மனுதாரரிடமிருந்து வசூல் செய்யவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ‘‘வளர்ச்சி உரிமம் சான்றிதழ்’’ சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

‘‘14.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.19/2012, நாள்.14.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.6. ந.க.எண்.டி6/12053/2012**
**ஆணையர் அவர்களின் 12.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.503/2012 **பொருள் எண்.08**

**தானப்பத்திரம்**

மனுதாரர் டாக்டர். என். பாஸ்கர் மற்றும் என். நந்தினி குமாரி, பழைய எண்.109, புதிய கதவு எண்.259, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை–82 என்ற முகவரியில் குடியிருப்பு நோக்கத்திற்கான கட்டிடம் கட்ட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

சென்னை நகர வளர்ச்சி குழுமம் விரிவான மேம்படுத்தும் வரைப்படத்தின்படி இரண்டாம் முழுமை திட்டத்தின் வளர்ச்சி விதிமுறை 26(22)ன்படி சாலை அகலப்படுத்துவதற்கு உள்ளாட்சி அமைப்புக்கு பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரத்தின் மூலம் திட்ட அனுமதி வழங்குவதற்கு முன்பே ஒப்படைப்பு செய்ய வேண்டும் என்றுள்ளது. எனவே, பெரவள்ளூரில் உள்ள பேப்பர் மில்ஸ் ரோடு சராசரியாக 18.0 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மனையை ஒட்டி அமைந்துள்ள பேப்பர் மில்ஸ் காலையின் அகலம் 15.33 மீட்டர், விண்ணப்பதாரரின் மனையில் 8.13 ச.மீ (1.22மீ + 1.45மீ / 2 X 6.10மீ) பரப்பு நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளது. இது குறித்து விண்ணப்பதாரர்களான டாக்டர்.என். பாஸ்கர் மற்றும் என். நந்தினி குமாரி ஆகியோர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது.

மண்டலம்–6, பகுதி–16, கோட்டம்–66, பழைய கதவு எண்.109, புதிய கதவு எண்.259, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை–82 என்ற முகவரியில் உள்ள தங்களது மனையில் சாலை விரிவாக்கத்திற்காக பேப்பர் மில்ஸ் சாலையை ஒட்டி 8.13 ச.மீ பரப்பு நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைப்பதற்கு வேண்டி தானப்பத்திரம் அளித்துள்ளார்கள். மேலும் அவர்கள் வழங்கிய தானபத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–6ல் பரிந்துரை செய்து (தீர்மான எண்.20, நாள்.15.10.2012) தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே, சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி இடத்தினை தானப்பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்ள கீழ்க்கண்ட1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மண்டலம்–, பகுதி–16, கோட்டம்–66, பழைய கதவு எண்.109, புதிய கதவு எண்.259, பேப்பர் மில்ஸ் ரோடு, பெரவள்ளூர், சென்னை–82 என்ற முகவரியில் உள்ள T.S.No.8, Block No.24, பெரவள்ளூர் கிராமம், புரசைவாக்கம்–பெரம்பூர் தாலுக்காவில் பேப்பர் மில்ஸ் சாலையை ஒட்டி 8.13 ச.மீ பரப்பு நிலத்தினை (1.22மீ + 1.45மீ / 2 X 6.10மீ) தானப்பத்திரம் மூலம் சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்ளவும்,
1. மேற்படி இடத்தில் சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.15,000/– (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மனுதாரரிடமிருந்து “ஆணையர், சென்னை மாநகராட்சி” என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
2. அவ்வாறு பெறப்படும் சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்த பிறகு, அந்நிலத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Development Right certificate) மனுதாரருக்கு வழங்க பரிந்துரை செய்யவும்.

“ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.11.2012 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 16.11.2012 அன்று தீர்மான எண்.25/2012–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.ந.க.எண்.டி8/0167/2012**
**ஆணையர் அவர்களின் 30.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.504/2012 **பொருள் எண்.09**

**தானப்பத்திரம்**

திருவாளர் ஸ்ரீரோஷ் உடமைகள் (த) நிறுவனம் சார்பில் கோட்டம்–103, புதிய ஆவடி சாலையில் கதவு எண்.97 (பழைய எண்.41) வியாபார ஸ்தலத்துடன் கூடிய குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்காக திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளார். அதில் சென்னை நகர வளர்ச்சி குழுமம் மேம்படுத்தும் வரைப்படத்தின்படி (D.D.P) புதிய ஆவடி சாலையில் 18.0 மீட்டர் அகலத்திற்கு சாலை விரிவுப்படுத்தும் உத்தேசம் உள்ள காரணத்தினால் விண்ணப்பதாரரின் மனையின் 2.80 மீட்டர் அகலத்திற்கு 18.30 மீட்டர் நீளத்திற்கும் 51.24 சதுர மீட்டர் பரப்பு இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக சென்னை மாநகராட்சியில் ஒப்படைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து விண்ணப்பதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டு விண்ணப்பதாரர் அவர்கள் மேற்படி நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானபத்திரம் மூலம் ஒப்படைப்பு செய்திட ஒப்புதல் அளித்துள்ளார்.

சாலை விரிவாக்கத்திற்காக மேற்படி நிலத்தினை தானப்பத்திரம் மூலமாக சென்னை மாநகராட்சி பெற்று கொள்ள 8வது வார்டு குழுவின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

எனவே, கீழ்க்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. கோட்டம்–103, புதிய ஆவடி சாலையில் R.S.No.91/26, Block No.09 எழும்பூர் நுங்கம்பாக்கம் கிராமத்தில் 2.80 மீ அகலமும் 18.30 மீ நீளம் வரையுள்ள 51.24 ச.மீ நிலத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,
2. மேற்படி இடத்தினை சாலை விரிவாக்க பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.61,500/– (ரூபாய் அறுபத்தொராயிரத்து ஐநூறு மட்டும்) மனுதாரரிடமிருந்து வசூல் செய்திடவும்,
3. மனை உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்''(Development Rights Certificate) சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

''14.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.20/2012, நாள்.14.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.10 ந.க.எண்.8121/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 22.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.505/2012 **பொருள் எண்.10**

**<u>தானப்பத்திரம்</u>**

திரு. ராமசந்திரன் மற்றும் திருமதி. பார்வதி ராமசந்திரன், கதவு எண்.89/230, ரெங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை–24 என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் IIன் மூலம் இச்சாலையை 13.30 மீட்டர் அகலத்திலிருந்து 18.00 மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 2.40 மீட்டர் அகலமுள்ள இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்மந்தமாக கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 29 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும், அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–10ல் பரிந்துரை செய்து (தீர்மான எண்.596) 20.07.2012 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற கீழ்க்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

2. கட்டட உரிமையாளர் திரு. ராமசந்திரன் மற்றும் திருமதி. பார்வதி ராமசந்திரன் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 29 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
3. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.16,501/–யை கட்டட உரிமையாளரிடம் ''ஆணையர், சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழ்''யை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்

''ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.11.2012 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 16.11.2012 அன்று தீர்மான எண்.24/2012–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.10.ந.க.எண்.அ1 /7291/ 2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.506/2012 **பொருள் எண்.11**

**<u>தானப்பத்திரம்</u>**

திரு. ஏ.பி. ரமேஷ், கதவு எண்.22, புதிய கதவு எண்.37, லேக்வியூ ரோடு, மேற்கு மாம்பலம், சென்னை–33, என்ற இடத்திற்கு கட்டட அனுமதி வேண்டி சென்னை மாநகராட்சி, மண்டலம்–10ல் விண்ணப்பித்துள்ளார். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம்–II''ன் மூலம் இச்சாலையை 9.00மீட்டர் அகலத்திலிருந்து 18.00மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக 4.57மீட்டர் அகலமுள்ள இடத்தினை தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்மந்தமாக கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் 4.57மீட்டர் அகலத்திற்கு 55.71 ச.மீ பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–10ல் பரிந்துரை செய்து (தீர்மானம் எண்.423) 21.06.2012 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற கீழ்கண்ட 1 முதல் 3வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு(நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.'

1. கட்டட உரிமையாளர் திரு.ஏ.பி.ரமேஷ் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் 55.71 ச.மீ நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்
2. தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.32,000/–யை கட்டட உரிமையாளரிடம் ''ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்
3. கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு ''வளர்ச்சி உரிமை சான்றிதழை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

''14.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.17/2012, நாள்.14.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.14.ந.க.எண்.6938/2012**
**ஆணையர் அவர்களின் 02.11. 2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.507/2012 **பொருள் எண்.12**

**தானப்பத்திரம்**

திரு. கிருஷ்ணமூர்த்தி மற்றும் மூவர், மண்டலம் 14, வார்டு எண். 188, பள்ளிக்கரனை கிராமம், சர்வே எண். 67/3, 67/4, 67/6, 67/7பி மற்றும் 68/3எ1எ2 பகுதியில் பள்ளிக்கூடம் கட்ட விண்ணப்பித்துள்ளார்.

மேற்படி மனு ஆய்வு செய்யப்பட்டதில் மனுதாரர் நிலத்திற்கு பிரதான சாலையிலிருந்து 9 மீ அகல தனியார் (மனுதாரருக்கு சொந்தமான) பாதை இருப்பது தெரிய வருகிறது. மேலும், மனுதாரர் தனது 18.10.2012 நாளிட்ட கடிதத்தில் உத்திதேசிக்கப்பட்டுள்ள பள்ளிக்கூடத்திற்கு செல்லும் பாதையை 15மீ நீளம் 9 மீ அகலம் கொண்ட சாலையாக மாநகராட்சி வசம் ஒப்படைக்க விருப்பம் தெரிவித்து தானப்பத்திரத்தை இணைத்துள்ளார். இது தொடர்பாக சாலைக்காக தரப்படவுள்ள 135.0 ச.மீ நிலத்தினை எடுத்துக் கொள்வதற்குண்டான தானப்பத்திரத்திற்கு ஒப்புதலும் மற்றும் மேற்படி நிலத்தை சாலையாக மாற்றுவதற்கு உண்டான அபிவிருத்திக் கட்டணத்தை வசூலித்து சாலை அமைத்தல் மற்றும் பிற நடவடிக்கைகளை மாநகராட்சி மன்றம் வழியாக சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919, மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற, கிராமப்புற அமைப்பு சட்ட விதிகளின்படி மேற்கொள்ளவும் நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘14.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தின் தீர்மான எண்.21/2012, நாள் 14.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.10.ந.க.எண்.அ1/8900/2012**
**ஆணையர் அவர்களின் 04.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.508/2012 **பொருள் எண்.13**

**புதிய போக் சாலையில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் மயான பூமி முன்பக்க மதில் சுவர் இடிக்க அனுமதி**

| வார்டு – 141 | மண்டலம்–10 |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | புதிய போக் சாலையில் உள்ள பொது கழிப்பிடம் மற்றும் மயான பூமி முன் பக்க மதில் சுவர். |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | மண்டலம்–10 (பழைய மண்டலம்–8)<br>சுமார் 20 வருடங்களுக்கு முன்பு |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு தளம் வாரியாக | தரை தளம் – 17.50 x 4.50 ச.மீ |
| இந்த கட்டிடம் அமைந்துள்ள இடத்தின் பரப்பளவு | 78.75 ச.மீ |
| இந்த கட்டிடம் இப்போது பயன்பாட்டில் உள்ளதா | பயன்பாட்டில் இல்லை. |
| தற்போதைய புத்தக மதிப்பு | ஏதுமில்லை |
| அந்த கட்டிடம் இடித்ததற்கு பின்பு அவ்விடம் எந்த மாதிரியான பயன்பாட்டிற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது | சாலை அகலப்படுத்தும் பணிக்காக. |
| கட்டிடத்தை இடிப்பதற்கான காரணம் | சாலையை அகலப்படுத்தும் பணிக்காக. |
| இக்கட்டிடத்தை இடிப்பதற்கு பரிந்துரை செய்தது யார் ? | மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) |
| வார்டு குழு தீர்மான எண் மற்றும் நாள். | 10வது மண்டல வார்டு குழு தீர்மான எண்.424/2012, நாள்.21.06.2012. |

எனவே, வார்டு–141ல் பகுதி–30 புதிய போக் சாலையில் உள்ள பொதுக் கழிப்பிடம் மற்றும் மயான பூமி முன் பக்க சுவர் இடிப்பதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘15.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.46 /2012 நாள் 15.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (பணிகள்) மூலம் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘19.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்)வின் கூட்டத்தின் தீர்மான எண். 286/2012 நாள் 19.11.2012–ன்படி நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.க.எண். பி1/3891/2012**
**ஆணையர் அவர்களின் 19.11.12 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.509/2012 **பொருள் எண்.14**

**மதிப்பீடு ஒப்புதல்**

| வார்டு எண். 118 மற்றும் 119 | : | மண்டலம் – 9 |
|---|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | : | பேருந்து தட சாலையான கதிட்ரல் சாலை, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை மற்றும் டி.டி.கே.சாலை ஆகிய சாலைகளை இணைக்கும் சந்திப்பில் – சந்திப்பு மேம்படுத்தும் பணி |
| பணி மேற்கொள்ளவிருக்கும் துறை | : | பேருந்து சாலைகள் துறை |
| மதிப்பீட்டுத் தொகை | : | ரூ.183.40 இலட்சங்கள் |
| விலைப்பட்டி ஆண்டு | : | 2012 – 2013 |
| நிதியின் மூலத்தன்மை | : | மூலதன பணி |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். நாள். | : | 9வது மண்டல வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்படும். |

மேற்குறிப்பிட்டுள்ள பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 1,83,40,000/–க்கான, 2012–2013 ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி 1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி78(பி)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி(ம)நிதி)ன் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.295/2012 நாள் 19.11.2012–ன்படி நிலைக்குழு (பணிகள் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 348/2012 நாள் 21.11.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.12.ந.க.எண்.இ1/1081 (4C)/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 19.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.510/2012 **பொருள் எண்.15**

**<u>மண்டலம் 12 – சிப்பம் –4C 'சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்' சென்னை விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திரு. K.சுப்ரமணி அவர்களுக்கு ரூ.1,46,74,124/–க்கு பணியினை வழங்க அனுமதி.</u>**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலலமச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு பார்வை (2)இல் கண்டுள்ள அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் ஆலந்தூர் மண்டலத்தில், (மண்டலம்–12) 26.78 கி.மீ. நீளமுள்ள 106 சாலைகளில் ரூ.55.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

<u>சிப்பம் 1 – 22 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 22 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.840.69 இலட்சங்கள்

<u>சிப்பம் 2 – 31 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 31 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.842.37 இலட்சங்கள்

<u>சிப்பம் 3 – 17 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 17 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.877.80 இலட்சங்கள்

<u>சிப்பம் 4 – 16 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 16 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.949.59 இலட்சங்கள்

<u>சிப்பம் 5 – 15 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 15 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.824.65 இலட்சங்கள்

<u>சிப்பம் 6 – 3 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 3 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.910.92 இலட்சங்கள்

மேற்கண்ட 6 சிப்பங்களில் சிப்பம் 4ஐ தவிர மீதமுள்ள அனைத்து சிப்பங்களும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் முடிவுற்றுள்ளது. மேற்கண்ட சிப்பம் 4 ஆனது மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறை வெற்றிபெறாத காரணத்தினால் நான்காவது முறையாக சிப்பம் 4(A) மற்றும் 4(B) என கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி இரு பிரிவுகளாக கோரப்பட்டது. இதில் 4(A) மட்டும்

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு உரிய அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்சமயம் பணி நடைபெற்று வருகிறது. இதில் **4(B)**க்கு எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படாத நிலையில் மேற்கண்ட சிப்பம் **4(B)**ஐ மீண்டும் ஐந்தாவது முறையாக **07.09.2012** அன்று சிப்பம் **4(C)** மற்றும் **4(D)** என இரு பிரிவுகளாக கோரப்பட்டது.

சிப்பம் **4(C) – 16** ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் **12**ல் உள்ள **16** சாலைகளை உரிய மழைநீர் வடிகால்வாய் அடங்கிய ஒருங்கிணைந்த சாலை வளர்ச்சி திட்டப்பணிகள் தோராய மதிப்பு ரூ.**122.29** இலட்சங்கள். (ராம் நகர் இரண்டாவது பிரதான சாலையில் மட்டும் மழைநீர் கால்வாய் கட்டுதல்)

மேற்படி ஐந்தாவது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியும் ஒப்பந்ததாரர் எவரிடமிருந்தும் பெறப்படாத நிலையில் மீண்டும் மேற்கண்ட சிப்பம் **4(C)** பணிகளை ஆறாவது முறையாக **12.10.2012** அன்று ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்த அறிவிப்பு **04.10.2012** அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான **12.10.2012** அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**சிப்பம்–4C**

1. திரு.K.துருவாசலு
2. திரு.K.சுப்ரமணி

**சிப்பம் 4C**

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2011–2012ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. K.சுப்ரமணி | 12229420.15 | 14797524/– | (+) 21% |

சிப்பம்–**4C**க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு. K.சுப்ரமணி அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு. K.சுப்ரமணி அவர்கள் **17.10.2012** நாளிட்ட கடிதத்தில் ரூ.**14674124/–** ஒப்பத் தொகையில் இப்பணியினை மேற்கொள்ள இசைவு தெரிவித்துள்ளார். எனவே திரு. K.சுப்ரமணி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**14674124/–** ஆகும். இவ்வொப்பத்தொகையானது **2011–12**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 20% விழுக்காடு அதிகமாகும். **2012–2013**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி (+) 7.8% ஆகும். சந்தை விலை ரூ.**16846674.14** உடன் ஒப்பிடுகையில் **(–) 12.90%** விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் **12** அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு. K.சுப்ரமணி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.**14674124/–** ஆகும். குறைந்த பணிக்காலமான **6** மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2. இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3. **2011–2012**ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உட்புற சாலைகளுக்கான ஒப்பங்கள் கோரப்பட்டன. இதற்கான மதிப்பீடுகள் **2010–2011** ஆம் ஆண்டில் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டவையாகும். ஆனால் பணிகள் **2011–2012** ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருந்ததாலும், **2011–2012** ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியல் **2010–2011**ஆம் ஆண்டின் விலைவிவரப்பட்டியலைவிட **14** முதல் **15** விழுக்காடு வரை அதிகமாக இருந்ததாலும் ஒப்பந்தங்கள் **2010–2011** ஆண்டு

விலைப்பட்டியலை விட (+) **12.00%** அதிகமாக அளிக்கப்பட்டது. இது போன்றே இவ்வாண்டிலும் **2012–2013**ஆம் ஆண்டின் விலைப்பட்டியல் **2011–2012** ஆம் ஆண்டின் விலைப்பட்டியலைவிட குறைந்தது **12** முதல் **15** விழுக்காடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. இவ்வொப்பத்தொகையானது **2011–12**ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) **20%** விழுக்காடு அதிகமாகும். **2012–2013**ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி (+) **7.8%** ஆகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் **(–) 12.90%** விழுக்காடு குறைவாகும்.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என **29.10.2007** நாளிட்ட தீர்மான எண்.**512/2007**ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திரு. K.சுப்ரமணி அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.**14674124/–** **2011–12**ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+)**20%** அதிகம் மற்றும் சந்தை விலையைவிட **(–)12.90%** குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்.4Cக்கு குறைந்த ஒப்பத்ததாரரான திரு.K.சுப்ரமணி அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.**14674124/–**க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு. K.சுப்ரமணி அவர்களுக்கு **2011–12**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) **20%** அதிகமான ஒப்பத்தொகை ரூ.**14674124/–**க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**19.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **299/2012** நாள் **19.11.2012**–ன் படி இதற்கு வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**21.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **355/2012** நாள் **21.11.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.12.ந.க.எண்.இ1/1081 (4D)/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 19.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.511/2012 **பொருள் எண்.16**

**<u>மண்டலம் 12 – சிப்பம் –4D 'சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம்' சென்னை விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் – ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டது குறைந்த ஒப்பந்ததாரரான திரு. K.சுப்ரமணி அவர்களுக்கு ரூ.43223113/–க்கு பணியினை வழங்க அனுமதி</u>**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ''சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்'' என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள சாலைகள் 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களில் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு பார்வை (2)இல் கண்டுள்ள அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் ஆலந்தூர் மண்டலத்தில், (மண்டலம்–12) 26.78 கி.மீ. நீளமுள்ள 106 சாலைகளில் ரூ.55.31 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

<u>சிப்பம் 1 – 22 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 22 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.840.69 இலட்சங்கள்

<u>சிப்பம் 2 – 31 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 31 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.842.37 இலட்சங்கள்

<u>சிப்பம் 3 – 17 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 17 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.877.80 இலட்சங்கள்

<u>சிப்பம் 4 – 16 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 16 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.949.59 இலட்சங்கள்

<u>சிப்பம் 5 – 15 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 15 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.824.65 இலட்சங்கள்

<u>சிப்பம் 6 – 3 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 3 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி. தோராய மதிப்பு ரூ.910.92 இலட்சங்கள்

மேற்கண்ட 6 சிப்பங்களில் சிப்பம் 4ஐ தவிர மீதமுள்ள அனைத்து சிப்பங்களும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் முடிவுற்றுள்ளது. மேற்கண்ட சிப்பம் 4 ஆனது மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறை வெற்றிபெறாத காரணத்தினால் நான்காவது முறையாக சிப்பம் 4(A) மற்றும் 4(B) என கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி இரு பிரிவுகளாக கோரப்பட்டது. இதில் 4(A) மட்டும்

ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு உரிய அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தற்சமயம் பணி நடைபெற்று வருகிறது. இதில் 4(B)க்கு எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளிகளும் பெறப்படாத நிலையில் மேற்கண்ட சிப்பம் 4(B)ஐ மீண்டும் ஐந்தாவது முறையாக 07.09.2012 அன்று சிப்பம் 4(C) மற்றும் 4(D) என இரு பிரிவுகளாக கோரப்பட்டது.

<u>சிப்பம் 4(D) – 16 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்</u>

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம் 12ல் உள்ள 16 சாலைகளுக்கு நடைபாதைகள் மற்றும் கேபிள் பதிப்பதற்கான குழாய் (DUCT) ஆகியவை அடங்கிய ஒருங்கிணைந்த சாலை வளர்ச்சி திட்டப்பணிகள் தோராய மதிப்பு ரூ.360.22 இலட்சங்கள்.

மேற்படி ஐந்தாவது முறையாக கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியும் ஒப்பந்ததாரர் எவரிடமிருந்தும் பெறப்படாத நிலையில் மீண்டும் மேற்கண்ட 4(D) பணிகளை ஆறாவது முறையாக 12.10.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஒப்பந்த அறிவிப்பு 04.10.2012 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரில் பிரசுரிக்கப்பட்டது. தகவல் தொழில்நுட்ப முறையிலும் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 12.10.2012 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கான தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு,

**<u>சிப்பம்</u>–4D**

1. திரு.K.துருவாசலு
2. திரு.K.சுப்ரமணி

**<u>சிப்பம்</u>** <u>4D</u>

| வ.எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2011–2012ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திரு. K.சுப்ரமணி | 36021767.50 | 44389113.00 | (+) 23.23% |

சிப்பம்–4Dக்கான குறைந்த ஒப்பந்ததாரர் திரு. K.சுப்ரமணி அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திரு. K.சுப்ரமணி அவர்கள் 17.10.2012 நாளிட்ட கடிதத்தில் ரூ.43223113/– ஒப்பத் தொகையில் இப்பணியினை மேற்கொள்ள இசைவு தெரிவித்துள்ளார். எனவே திரு. K.சுப்ரமணி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.43223113/– ஆகும். இவ்வொப்பத்தொகையானது 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 20% விழுக்காடு அதிகமாகும். 2012–2013ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி (+) 8.4% ஆகும். சந்தை விலை ரூ.50598727.44 உடன் ஒப்பிடுகையில் (–) 14.60% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர் 12 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திரு. K.சுப்ரமணி அவர்களின் ஒப்பத்தொகை ரூ.43223113/– ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2. இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3. 2011–2012ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உட்புற சாலைகளுக்கான ஒப்பங்கள் கோரப்பட்டன. இதற்கான மதிப்பீடுகள் 2010–2011 ஆம் ஆண்டில் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டவையாகும். ஆனால் பணிகள் 2011–2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருந்ததாலும், 2011–2012 ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியல் 2010–2011ஆம் ஆண்டின் விலைவிவரப்பட்டியலைவிட 14 முதல் 15 விழுக்காடு வரை அதிகமாக இருந்ததாலும் ஒப்பந்தங்கள் 2010–2011 ஆண்டு

விலைப்பட்டியலை விட (+) 12.00% அதிகமாக அளிக்கப்பட்டது. இது போன்றே இவ்வாண்டிலும் 2012–2013ஆம் ஆண்டின் விலைப்பட்டியல் 2011–2012 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலைவிட குறைந்தது 12 முதல் 15 விழுக்காடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4. இவ்வொப்பத்தொகையானது 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 20% விழுக்காடு அதிகமாகும். 2012–2013ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி (+) 8.4% ஆகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 14.60% விழுக்காடு குறைவாகும்.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திரு. K.சுப்ரமணி அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.43223113/– 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) 20% அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (–) 14.60% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்.4Dக்கு குறைந்த ஒப்பத்தாரரான திரு. K.சுப்ரமணி அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.43223113/–க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திரு.K.சுப்ரமணி அவர்களுக்கு 2011–12ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) 20% அதிகமான ஒப்பத்தொகை ரூ.43223113/–க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 298/2012 நாள் 19.11.2012–ன் படி இதற்கு வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 356/2012 நாள் 21.11.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.நீ.வ.து.ந.க.எண்.பி5/1897/2009</u>**
**<u>ஆணையர் அவர்களின் 15.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.512/2012 **பொருள் எண்.17**

**<u>ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத்திட்டம் – சிப்பம் 2 – ஓட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதி கால்வாய் மற்றும் மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்கட்டுப்பாடு ஒப்பம் – பணி கால நீட்டிப்பு வழங்க அனுமதி</u>**

சென்னை மாநகரில் 2870 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலைகள் உள்ளன. அதில் 944 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்டும் மழைநீர் வடிகால்வாய்கள் உள்ளன. சென்னை மாநகரம் சமதள நிலப்பகுதியாக இருப்பதாலும் மற்றும் மழைநீர் வடிகால்வாய்கள் பழைமை வாய்ந்ததாக இருப்பதாலும் போதிய நீளத்திற்கு மழைநீர் வடிகால்வாய்கள் இல்லையாதலாலும் மழைக்காலங்களில் சாலைகளில் மழைநீர் தேங்குவது வழக்கமாக இருந்து வருகிறது.

சாலைகளில் மழைநீர் தேங்குவதை தவிர்க்கும் வகையில் சென்னை மாநகராட்சி பொதுப்பணித்துறையுடன் இணைந்து விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசால் ஜவஹர்லால் நேரு தேசிய நகரப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் அனுமதி பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் வடக்கு, மத்திய, கிழக்கு, தெற்கு ஆகிய 4 நீர்த்தேக்கப் பகுதிகளாக பிரித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மழைநீர் தேங்குவதை பெருமளவு குறைப்பதற்கான ஒருங்கிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் பிரதான அம்சங்களும் மற்றும் செலவினங்களும் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | நீர்த்தேக்கப் பகுதியின் பெயர் | சென்னை மாநகராட்சி தொகை ரூ. (கோடியில்) | பொதுப் பணித்துறை தொகை ரூ. (கோடியில்) | அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. (கோடியில்) | CSMC, JNNURM, GOI அனுமதி வழங்கிய நாள் |
|---|---|---|---|---|---|
| 1 | வடக்கு | 277.17 | 82.69 | 359.86 | 19.12.2008 |
| 2 | மத்திய | 261.11 | 83.89 | 345.00 | 29.12.2008 |
| 3 | கிழக்கு | 140.40 | 303.67 | 444.07 | 14.01.2009 |
| 4 | தெற்கு | 136.20 | 162.78 | 298.98 | 22.01.2009 |
| | **மொத்தம்** | **814.88** | **633.03** | **1447.91 (அ) 1448.00** | |

திட்ட அறிக்கையின்படி, மூன்று ஆண்டுகளில் படிப்படியாகக் கால்வாய் மேம்பாட்டுப் பணிகளும், மழைநீர் வடிகால்வாய் பணிகளும் இந்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும். அனுமதிக்கப்பட்ட மொத்தத் தொகையில் மத்திய அரசு பங்கு 35 விழுக்காடு, மாநில அரசு பங்கு 15 விழுக்காடு மற்றும் சென்னை மாநகராட்சி பங்கு 50 விழுக்காடுகளாகும்.

மேலும் சென்னை மாநகராட்சிக்கு ஒதுக்கப்பட்ட தொகையான ரூ. 814.88 கோடி தொகைக்கு அரசின் நிர்வாக அனுமதி 06.07.2009 அன்று பெறப்பட்டு 12 நீர்த்தேக்கப் பகுதிகளுக்கு, ரூ.774.60 கோடி தொகைக்கான ஒப்பந்தங்கள் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு 12 நீர்ப்பிடிப்புப் பகுதிகளிலும் பணிகள் நடைபெறுகிறது. இப்பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுபாட்டிற்கும் ஒப்பங்கள் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெறுகிறது.

அதன்படி, சிப்பம் 2 ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் தொகுப்பு பணிகளுக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தரக்காட்டுப்பாட்டிற்கு திருவாளர்கள் சா்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் நிறுவனத்திற்கு 04.01.2011 அன்று பணி ஒப்புகை ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. பணி முடிவடையும் காலம் 20 மாதங்கள், அதாவது 03.09.2012ற்குள் பணி முடிக்கப்பட வேண்டும்.

ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள கடிதத்தில், ஓட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மற்றும் நீர்தேக்கப்பணிகள் உள்ள பகுதியில் போக்குவரத்து

இடையூறுகள், சில இடங்களில் மழைநீர் வடிகால்வாயில் குடிநீர் குழாய் இணைப்பு, மழைநீர் வடிகால்வாய் பகுதிகளில் மின்சார கம்பிவடங்களும் மற்றும் இணைப்பு பெட்டிகளின் இடையூறுகள் மற்றும் மணல் தட்டுபாடு ஆகியவற்றினால், ஒட்டேரி நல்லா கால்வாய் நீர்ப்பிடிப்பு பகுதியில் பணிகள் முடிவடையாமல் நடைபெற்று வருகிறது என்றும் தற்சமயம் வரை தங்கள் நிறுவனம் தொடர்ச்சியாக சில பிரச்சனைகள் எதிர்கொள்ள வேண்டியது இருப்பதாக கீழ்வருமாறு தெரிவித்துள்ளனர்.

(1) பொறியாளர்களுக்கு ஆண்டு ஊதிய உயர்வு 5% வழங்குதல்,
(2) பெட்ரோல் மற்றும் டீசல் விலை சராசரியாக 10% இந்த காலத்திற்குள் உயர்ந்துள்ளது,
(3) பணியமைப்புக்கான செலவினம் 10% அதிகரித்துள்ளது,
(4) அரசு துறைகளில் பொதுவாக பிடித்தம் செய்யும் சேவை வரி 12.36%
(5) மேற்கூறிய காரணங்களினால் தங்கள் நிறுவனம் ஒரு வருடத்திற்கு 6% அதிகரித்துள்ளது எனவும்,

மேற்கூறிய காரணங்களினால் இப்பணிகள் செப்டம்பர்' 2012ல் முதல் மார்ச்' 2013 வரை கால நீட்டிப்பு வழங்க கோரியுள்ளனர்.

சென்னை வானிலை ஆராய்ச்சி மையத்தில் பதிவான ஜூன் 2010 முதல் டிசம்பர் 2010 வரையிலான தினசரி மழையளவு விவரம் பெறப்பட்டுள்ளது. இதனால் கடந்த ஆகஸ்ட் 2010 முதல் டிசம்பர் 2010 வரை 5 மாதங்கள் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவில்லை மற்றும் மார்ச் 2011 முதல் மே 2011 வரை தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை விதி அமுல்படுத்தியதால் 3 மாதங்களுக்கு பணி மேற்கொள்ளப்படவில்லை. மேலும், செப்டம்பர் 2011 முதல் அக்டோபர் 2011 வரை சென்னை மாநகர உள்ளாட்சி தேர்தல் விதி அமுல்படுத்தியதால்2 மாதங்களுக்கு பணி மேற்கொள்ளப்படவில்லை.

மேற்கூறிய காரணங்களால் சுமார் ஆறு மாத காலங்கள் பணிகள் நடைபெறுவதில் தாமதம் ஏற்பட்டதால் பணிகள் நிறைவேற்ற வேண்டிய கால அளவுகள் (Mile Stone) எட்டப்படவில்லை. ஒப்ப விதியின் கீழ், பணிகள் மேற்கொள்ளப்பட முடியாததால், பருவ மழை முடிந்த பின் பணி ஆணை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடத்தை மற்றும் உள்ளாட்சி தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்திய காரணத்தினால் ஆறு மாத காலங்கள் பணியிழப்பு ஏற்பட்டதால் திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு 03.09.2012 முதல் ஆறு மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு வழங்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, திருவாளர்கள் சர்ட்விகேசன் இன்ஜினியர்ஸ் இண்டர்நேசனல் லிமிடெட் அவர்களுக்கு மேற்கூறிப்பிட்ட இனத்திற்கு ஒப்ப விதிகளின் கீழ், சிப்பம் 2 ஒட்டேரி நல்லா நீர்ப்பிடிப்பு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் நீர்வழிக்கால்வாய் மேம்படுத்தும் பணிக்கு மூன்றாம் நபர் தர உறுதி மற்றும் தர கட்டுப்பாட்டிற்கு மேலும், ஆறு மாத காலம் பணி நீட்டிப்பு வழங்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''19.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 296/2012 நாள் 19.11.2012—ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 351/2012 நாள் 21.11.2012—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>இ.பொ.து.ந.க.எண்.எம்1/1306 A/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 19.11.2012 நாளிட்ட குறிப்பு.</u>**

தீர்மான எண்.513/2012 **பொருள் எண்.18**

**<u>கழிவு செய்யும் நிலையிலுள்ள பழைய வாகனங்களுக்கு பதிலாக 40 எண்ணிக்கைகளில் புதிய கனரக டிப்பர் வகை வாகனங்கள் கொள்முதல் செய்தல்</u>**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் **2012–2013**ம் நிதியாண்டு அறிக்கையை **12.03.2012** அன்று சமர்ப்பிக்கையில், இயந்திரப் பொறியியல் துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி–**57**ல் **40** எண்ணிக்கைகள் கனரக டிப்பர் லாரிகள், ஏற்கனவே கழிவு செய்யப்படும் நிலையில் ஓடிக்கொண்டிருக்கும் டிப்பர் லாரிகளுக்கு பதிலாக கொள்முதல் செய்து பயன்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்கள்.

இக்கொள்முதலுக்கு ஒப்பம் கோரி முடிவெடுக்க ஆணையர் அவர்களின் அனுமதி **24.03.2012** அன்று பெறப்பட்டது.

இக்கொள்முதலுக்கான முந்தைய ஒப்பம் **11.05.2012** அன்று திறக்கப்பட்டது. இவ்வொப்பத்தில் **4** ஒப்பதாரர்கள் பங்கேற்றனர். **3** ஒப்பதாரர்கள் B.S.III வகை வாகனங்களையும் ஒரு ஒப்பதாரர் B.S.IV வகை வாகனங்களையும் குறிப்பிட்டிருந்தனர்.

தற்சமயம், சென்னை உள்பட **13** மாநகரங்களில் B.S.IV வகை வாகனங்கள் மட்டுமே நிரந்தரப் பதிவு செய்யமுடியும். ஆகவே B.S.IV வகை வாகனங்களை குறிப்பிட்ட ஒப்பதாரர் திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் அவர்களின் நிதிஒப்பம் மட்டுமே திறக்க உத்தேசிக்கப்பட்டது. இந்நிலையில் அந்நிறுவனம் B.S.IV வகை வாகனங்கள் தயாரித்து வெளிச் சந்தைக்கு வர குறைந்தது **6** மாதங்களாவது ஆகும் என கடிதம் அளித்தனர். ஆகவே B.S.III வகை மற்றும் B.S.IV வகை வாகனங்கள் குறிப்பிட்ட அனைத்து ஒப்பதாரர்களின் நிதி ஒப்பங்களையும் திறக்க முடிவெடுக்கப்பட்டு, நிதி ஒப்பங்கள் திறக்கப்பட்டன. பின்னர் B.S.III வகை வாகனங்களை வழங்க குறைந்த விலையாக ரூ. **14,30,000/–** ( வாகனம் ஒன்றுக்கு ) என்று அளித்த திருவாளர்கள். சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனம் (அசோக் லேலண்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்) அவர்களை பரிந்துரைக்கும்பொருட்டு இக்கோப்பு ஒப்பக்குழுவிற்கு **11.09.2012** அன்று சமர்ப்பிக்கப்பட்டது.

B.S.III வகை மற்றும் B.S.IV வகை வாகனங்கள் குறிப்பிடப்பட்ட வெவ்வேறு வகை இரு ஒப்பங்களையும், ஒருங்கே ஒப்பு நோக்கப்பட்டதால், ஒப்பக்குழு இவ்வொப்பத்தை நிராகரித்தது. தற்சமயம் நிரந்தரப் பதிவு செய்யப்படும் B.S.IV வகை வாகனங்கள் தயாரிப்பு நிலையிலேயே உள்ளது என்றும் இவ்வாகனங்கள் வெளிச்சந்தைக்கு வர குறைந்தது **6** மாதங்களாவது ஆகும் என திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் அவர்கள் அளித்த கடிதத்தினை கருத்தில் கொண்டு, விரிவாக்கப்பட்ட பகுதிகளில் கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணிகள் துரிதப்படுத்த இவ்வாகனங்கள் மிக அவசரமாக தேவைப்படும் சூழ்நிலையை கருத்தில் கொண்டும் B.S.III வகை வாகனங்களை சென்னையில் நிரந்தரப் பதிவு செய்ய அரசிடமிருந்து சிறப்பு அனுமதி பெற ஆவன செய்யவும் மற்றும் B.S.III வகை வாகனங்களையே வழங்கும்பொருட்டு மறு ஒப்பம் கோரவும், ஒப்பக்குழு பரிந்துரைத்தது.

இதுகுறித்து, ஆங்கில நாளிதழ், தமிழ் நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர், ஆகியவற்றில் **40** எண்ணிக்கைகள் B.S.III வகை வாகனங்கள் கொள்முதல் செய்யும்பொருட்டு ஒப்ப அறிவிப்பு அறிவிக்கப்பட்டது. மேலும், இவ்வொப்ப படிவங்கள் இலவச பதிவு இறக்கம் செய்து கொள்ளும்பொருட்டு, கணினியில் ஏற்றம் செய்யப்பட்டன.

இவ்வொப்பம் **28.09.2012** அன்று திறக்கப்பட்டது. ஒப்பத்தில் **3** ஒப்பத்தாரர்கள் முறையே **1.** திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம், **2.** திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ், (திருவாளர்கள் வி.இ. கமர்ஷியல் தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்) **3.** A.C.T.India (திருவாளர்கள். டாடா வாகன தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட

விற்பனையாளர்) ஆகியோர் பங்கேற்றனர். ஒப்பத்தில் பங்கேற்ற 3 நிறுவனங்களும் ஒப்ப வைப்பு தொகையை செலுத்தியும் தகுதி சான்றிதழ்கள் இணைத்தும் ஒப்பத்தில் தகுதி பெற்றனர்.

இம் மூன்று நிறுவன ஒப்பங்களும், ஒப்ப சீராய்வு குழுவினால், தகுதியானவை என சான்றளிக்கப்பட்டபின் ஒப்ப விலைப்புள்ளிகள் (Financial Bids) 05.10.2012 அன்று திறக்கப்பட்டன. இந் நிறுவனங்கள் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகளை அளித்துள்ளார்கள்.

| S. No. | Details | Qty. | Rate / vehicle Rs. | | |
|---|---|---|---|---|---|
| | | | **M/s.ACT India** | **M/s.Vaishnavi Motors** | **M/s.Ashok Leyland Ltd.** |
| 01. | Supply of fully built HCV Tipper Vehicles for debris clearance purposes as per specification (inclusive of all Taxes, Entry tax, Levies, Transit insurance, Transpor- tation charges with temporary registration) | 40 Nos. | Model: LPK 1613 – BS III – 3625 WB TATA<br>15,60,000 | Model: Terra 16 – BS III – 3450 WB - Eicher<br>14,31,000 | **Model: 1616 XL – BS III – 3607 WB – Ashok Leyland**<br>**13,90,000** |
| | Total for 40 Nos. | | 6,24,00,000 | 5,72,40,000 | **5,56,00,000** |

மேற்கண்ட ஒப்ப நோக்குப் பட்டியலின்படி, திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் அவர்கள் ஒரு கனரக டிப்பர் வாகனம் Model ..1616XL, ரூ. 13,90,000/– வீதம் 40 எண்ணிக்கைகள் கனரக டிப்பர் வானங்களுக்கான மொத்தம் ரூ.5,56,00,000/– என குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ளனர். அவர்களிடம் மேலும் விலைக்குறைப்பு செய்யும்படி கேட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால், அவர்கள் தங்களது 07.10.2012 தேதியிட்ட கடிதம் வாயிலாக, ஏற்கனவே தாங்கள் குறைந்த விலை அளித்துள்ளதாகவும், இதற்கு மேல் தங்களால் விலைக்குறைப்பு செய்ய இயலாது என்றும், குறிப்பிட்டுள்ளனர்.

இதனிடையே B.S.III Emission norms கொண்ட கனரக டிப்பர் வாகனங்களை சென்னை மாநகரில் நிரந்தர பதிவு செய்ய அரசிடமிருந்து சிறப்பு அனுமதி 22.10.2012 தேதியிட்ட கடிதம் மூலம் பெறப்பட்டது.

இதற்கு முன்னர் 30.12.2011 அன்று கோரப்பட்ட ஒப்பத்தின் மூலம், வாகனம் ஒன்றுக்கு ரூ.14,95,000/– என குறைந்த விலை அளித்த திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்திடமிருந்து 15 எண்ணிக்கைகள் கனரக வாகனங்கள், 1.6 மி.மீ எவர் சில்வர் தகடுகள் பின்புறப் பகுதியில் வேயப்பட்டு பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த முறை 11.05.2012 அன்று திறக்கப்பட்டு ஒப்பக்குழுவால் நிராகரிக்கப்பட்ட ஒப்பத்தில் B.S.III வகை வாகனங்கள் குறிப்பிட்டு வழங்க திருவாளர்கள். சுந்தரம் மோட்டார்ஸ் நிறுவனம் (திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட விற்பனையாளர்கள்) அவர்கள் குறைந்த விலையாக வாகனம் ஒன்றுக்கு ரூ. 14,30,000/– எனக் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்விலையினை, தற்போதைய ஒப்பத்தின் மூலம் பெறப்பட்ட வாகனம் ஒன்றின் இறுதி விலையான ரூ. 13,90,000/–த்தோடு ஒப்பு நோக்கும்போது ரூ. 40,000/– குறைவாகவே உள்ளது என்பதை கருத்தில் கொண்டு இக்கொள்முதல் ஒப்புக்குழுவின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

14.11.2012 அன்று நடைபெற்ற ஒப்பக்குழு கூட்டத்தில் இக்கோப்பு பரிசீலிக்கப்பட்டு இக்கொள்முதல் பரிந்துரைக்கப்பட்டது.

ஆகவே, கனரக டிப்பர் வாகனம் ஒன்றின் விலை ரூ.13,90,000/– வீதம் 40 எண்ணிக்கை கனரக டிப்பர் லாரிகளின் மொத்த தொகை ரூ. 5,56,00,000/– (ரூபாய் ஐந்து கோடியே ஐம்பத்து ஆறு

இலட்சங்கள்) ஆகும். இச்செலவினத்தை இயந்திரப் பொறியியல் துறை 2012–2013க்கு ஒதுக்கப்படும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாகனங்களுக்கான நிரந்தரப்பதிவு தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் காப்பீடு ஆகியவைகளை திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் மேற்கொண்டபின் அதற்கான உரிய செலவு சீட்டுகளை ஒப்படைக்கும் பட்சத்தில் அத்தொகையை அவர்களுக்கு ஒப்ப விதிகளின்படி திருப்பி வழங்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வொப்பத்தின் செல்லத்தக்க காலம் 26.12.2012 வரை ஆகும்.

எனவே,

1. மன்றத்தின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கிக் கோரப்பட்ட இவ்வொப்பத்திற்கு அனுமதி கோரவும்,
2. இவ்வொப்பத்தில் குறைந்த விலைப்புள்ளி அளித்த வாகன உற்பத்தியாளரான திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்திடமிருந்து (Model 1616XL BS III Emission norms ) கனரக டிப்பர் வாகனம் ஒன்றுக்கு ரூ. 13,90,000/– வீதம் 40 எண்ணிக்கைகளின் மொத்த தொகையாக ரூ. 5,56,00,000/–க்கு கொள்முதல் செய்யவும்,
3. முதல் இனம் ஏற்கப்படின், திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்தினருக்கு பணியாணை வழங்கவும்,
4. திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவீகிதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
5. வாகனங்கள் நிரந்தர பதிவு செய்து சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பின் மொத்த கொள்முதல் விலையில் 90 சதவிகிதம் காசோலையாக வழங்கவும்,
6. எஞ்சியுள்ள வாகன மொத்த தொகையின் 10 சதவிகித தொகையை, வாகனம் இயக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு வாகன செயல்திறன் திருப்திகர சான்றிதழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டபின் வழங்கவும்,
7. வாகனங்களின் நிரந்தரப் பதிவு, தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் காப்பீடு ஆகியவைகளை மேற்கொண்டபின், இவைகளுக்கான உரிய செலவு சீட்டுகள் திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டபின்,அத்தொகை திருப்பி வழங்கவும்,
8. மேற்கண்ட இச்செலவினத் தொகையை இயந்திரப் பொறியியல் துறை 2012–2013க்கு ஒதுக்கப்படும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,
9. இக்கொள்முதல் செய்யப்பட்டவுடன் அரசு விதிகளின்படி கழிவு செய்யும் நிலையில் இயக்கத்தில் உள்ள 40 எண்ணிக்கை கனரக டிப்பர் லாரிகளை கழிவு செய்ய தனியாக தொடர் நடவடிக்கை எடுக்கவும்,

இனம் 1 முதல் 9 வரை ஏற்கப்படின் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''19.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 293/2012 நாள் 19.11.2012–ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 349/2012 நாள் 21.11.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1308 A/2011**
**ஆணையாளர் அவர்களின் 19.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.514/2012 **பொருள் எண்.19**

**புதியதாக 5 எண்ணிக்கைகள் 9 K.L. கனஅளவு கொண்ட கனரக தண்ணீர் டேங்கர் வாகனங்கள் கொள்முதல் செய்தல்**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012–2013 ஆம் நிதியாண்டு அறிக்கையை 12.3.2012 அன்று சமர்ப்பிக்கையில், இயந்திர பொறியியல் துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி –57C –ல் 5 எண்ணிக்கைகள் கனரக தண்ணீர் லாரிகள் (HCV Water Tankers of capacity 9 K.L.) ஏற்கனவே கழிவு செய்யப்பட்ட மற்றும் கழிவு செய்யப்படும் நிலையில் ஓடி கொண்டிருக்கும் தண்ணீர் லாரிகளுக்கு பதிலாக கொள்முதல் செய்து பயன்படுத்தப்படும் என அறிவித்திருந்தார்கள்.

10 வருட ஓட்டம் மற்றும் 2.5 இலட்சம் கிலோ மீட்டர் துாரத்திற்கு மேல் ஓடிக் கொண்டிருக்கும் வாகனங்களை கழிவு செய்யலாம் என்ற அரசு விதிகளின்படி கீழ்கண்ட கனரக தண்ணீர் லாரிகள் கழிவு செய்யும் நிலையில் உள்ளன.

| வரிசை எண். | வாகன பதிவு எண் மற்றும் வாகன மாதிரி | தயாரிப்பு வருடம் |
|---|---|---|
| 1. | TMH 962 – Ashok Leyland | 1984 |
| 2. | TMH 9296 – Ashok Leyland | 1986 |
| 3. | TN04 G 0017 – Ashok Leyland | 1989 |
| 4. | TN04 B 2515 – Ashok Leyland | 1993 |
| 5. | TN04 B 2912 – Ashok Leyland | 1990 |

தற்சமயம் மேலும் திறமையான இயக்கத்திற்கு உள்ளாக்கப்பட முடியாத நிலையிலும், அவ்வாறு உள்ளாக்கப்பட்டால் அதிக செலவினங்களுடன் இயக்கப்பட்டு பயன்பாட்டில் இருக்கும் இவ்வித தண்ணீர் லாரிகள் உடனேயே கழிவு செய்யப்பட வேண்டிய நிலையில் உள்ளன.

ஆகவே, இதற்கு மாற்றாக புதிய கனரக தண்ணீர் லாரிகள் கொள்முதல் செய்ய வேண்டி ஒப்பம் கோர ஆணையரின் அனுமதி 24.3.2012 அன்று பெறப்பட்டுள்ளது.

முதலில் 11.05.2012 அன்று ஒப்பம் கோரி திறக்கப்பட்டது. அவ்வொப்பத்தில் 2 ஒப்பதாரர்கள் முறையே 1. திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ் மற்றும் 2. திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ் அவர்கள் இந்த ஒப்பத்தில் B.S. III வகை Emission norms கொண்ட வாகனங்களையும், திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் அவர்கள், B.S. IV வகை Emission norms கொண்ட வாகனங்களையும், குறிப்பிட்டிருந்தனர். தற்சமயம், சென்னை உட்பட 13 மாநகரங்களில், B.S. IV வகை Emission norms கொண்ட வாகனங்களை மட்டுமே நிரந்தர பதிவு செய்ய முடியும் என்ற காரணத்தினால், B.S. III வகை Emission norms கொண்ட வாகனங்களை குறிப்பிட்டிருந்த, திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ் அவர்கள் சமர்ப்பித்திருந்த ஒப்பம் கருதுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை.

ஆகவே, தகுதிப்பெற்ற ஒரே ஒப்பதாரர் திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் அவர்களின் நிதி ஒப்பம் 29.06.2012 அன்று திறக்கப்பட்டது. B.S. IV வகை Emission norms கொண்ட கனரக தண்ணீர் லாரிகளை வழங்க ஒரு வாகனம் ரூ. 21,23,036/– வீதம் 5 எண்ணிக்கைகள் தண்ணீர் லாரிகள் வழங்க மொத்தமாக ரூ.1,06,15,180/– ஆகும் என குறிப்பிட்டிருந்தனர்.

மேலும் விலை குறைப்பு செய்ய வேண்டி திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்தினர் அவர்கள் அழைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள் தங்களது 17.8.2012 தேதியிட்ட கடிதம் மூலம் BS IV வகை Emission norms கொண்ட வாகனங்கள், இன்னும் தயாரிப்பு நிலையிலேயே உள்ளதாலும், தயாரிக்கப்பட்டு வெளி சந்தைக்குவர குறைந்தது 6 முதல் 8 மாதங்கள் ஆகும் எனவும், தெரிவித்திருந்தனர்.

இவ்வாகனங்கள் அவசரமாக சென்னை மாநகராட்சிக்கு தேவைப்படுவதால், இவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டு, B.S. III வகை Emission norms கொண்ட வாகனங்களை கொள்முதல் செய்து நிரந்தர பதிவு செய்ய அரசு ஆணை எதிர்நோக்கி மறு ஒப்பம் கோரப்பட்டது.

இதன்படி ஒப்ப திறப்பு நாள் **28.9.2012** என ஆங்கில நாளிதழ், தமிழ் நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி மலரில் இவ்வொப்பத்திற்கான விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது. மேலும் கணினியிலிருந்து இலவச இறக்கம் செய்து கொள்ளும் பொருட்டு ஒப்பப்படிவங்கள் ஏற்றம் செய்யப்பட்டன.

ஒப்பதிறப்பு நாளான **28.9.2012** அன்று **2** ஒப்பங்கள், திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ் மற்றும் திருவாளர்கள். அசோக் லேலண்டு ஆகியோரிடமிருந்து பெறப்பட்டன. அவ்விரு ஒப்பங்களும் தொழில்நுட்ப ரீதியாக சரிபார்க்கப்பட்டு பின்னர் நிதி ஒப்பங்கள் **4.10.2012** அன்று திறக்கப்பட்டன. அவர்கள் குறிப்பிட்டிருந்த விலைகள் பின்வருமாறு:

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை | திருவாளர்கள் வைஷ்ணவி மோட்டர்ஸ் | | திருவாளர்கள் அசோக் லேலண்டு லிமிடெட் | |
|---|---|---|---|---|---|---|
| | | | விலை ரூ. | தொகை ரூ. | விலை ரூ. | தொகை ரூ. |
| **1.** | கனரக சேசிஸ் மேல் ஏறப்பெற செய்த **9** K.L. கனஅளவு கொண்ட தண்ணீர் லாரிகள் வழங்க (நுழைவு வரி, தீர்வை, இடைவழிக் காப்பீடு, போக்குவரத்து செலவு மற்றும் தற்காலிக வாகனப் பதிவு உட்பட) | 5 | 16,74,000 | 83,70,000 | 15,85,264 | 79,26,320 |
| | வாகன தயாரிப்பு மாதிரி | – | 20.16 BS-III on 4300 WB | | 1616 IL – Fully built BS-III on 4330 WB | |

மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலின்படி, திருவாளர்கள் அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் ஒரு எண்ணிக்கை ரூ.**15,85,264/–** வீதம் **5** எண்ணிக்கைகள் கனரக தண்ணீர் லாரிகள் (Chassis Model 1616 IL – Fully built BS-III on 4330 WB வழங்க ரூ.**79,26,320/–** என குறைந்த விலையாகக் குறிப்பிட்டுள்ளார்கள் என்பது தெரியவருகிறது.

திருவாளர்கள் அசோக் லேலண்டு நிறுவனம் அளித்த விலையிலிருந்து மேலும் விலைக் குறைப்பு கோரி பேச்சு வார்த்தைக்கு அழைக்கப்பட்டனர். அவர்களும் தங்களது **07.10.2012** தேதியிட்ட கடிதம் மூலமாக தாங்கள் ஏற்கனவே ஒப்பத்தில் குறைந்த விலை அளித்துள்ளதாகவும், இதற்கு மேல் தங்களால் குறைக்க இயலாது எனவும் தெரிவித்திருந்தனர்.

மேலும் அவர்கள் தாங்கள் ஒப்பத்தில் குறிப்பிட்ட விலையின் விரிவான விவரங்களைக் கீழ்கண்டவாறு அளித்துள்ளனர்:–

| **வ.எண்** | **விவரம்** | **விலை (ரூ.)** |
|---|---|---|
| **1.** | சேசிஸ் – Model 1616 IL – BS-III on 4330 WB | **9,75,801** |
| **2.** | கேபின் வடிவமைத்தல் | **68,209** |
| **3.** | **9000** லி. தண்ணீர் டேங்கர் வடிவமைத்தல் | **2,62,500** |
| **4.** | **10** குதிரை சக்தி திறன் கொண்ட பம்பு + என்ஜின் + ஹோஸ் குழாய் மற்றும் இதர உதிரி பாகங்கள் | **78,000** |
| | **மொத்தம்** | **13,84,510** |
| | VAT வரி **14.5%** | **2,00,754** |
| | **ஆக மொத்தம்** | **15,85,264** |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டியலில் வரிசை எண் **1** ல் சுட்டிகாட்டப்பட்டுள்ள சேசிஸின் விலை, D.G.S. & D – அரசால் அங்கீகரிக்கப்பட்ட விலை ஆகையால் இவ்விலையை பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிட்டுள்ளபடி, கேபின் விலை, 9000 லி. தண்ணீர் டேங்கர் வடிவமைப்பு, 10 குதிரை சக்தி திறன் கொண்ட பம்பு + என்ஜின் + ஹோஸ் குழாய் மற்றும் இதர உதிரி பாகங்கள் ஆகியவற்றிற்கான செலவினையும் தனித்தனியே குறிப்பிட்ட விலைப்புள்ளியினை திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனம் அவர்கள், முன்னனி வடிவமைப்பாளரிடமிருந்து (Leading Fabricator) பெற்று அளித்துள்ளனர். ஆகவே முழுவதாக கட்டப்பட்ட ஒரு தண்ணீர் லாரியின் விலை அனைத்து வரிகளுடன் சேர்த்து திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் மொத்த விலையாக ரூ.15,85,264/— எனக் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் 2008ல் இதே வகை கனரக தண்ணீர் லாரி ஒன்று ரூ. 12,60,000/— வீதம் 3 கனரக லாரிகள் சென்னை மாநகராட்சியால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவ்விலையினை தற்போதைய விலையோடு ஒப்புநோக்கும்போது, தற்போதைய விலையானது 25 % அதிகமாக உள்ளது. கடந்த 4 ஆண்டுகளில் ஏற்பட்ட எரிபொருள் விலையேற்றம், உதிரி பாகங்கள் மற்றும் தொழிலாளர் சம்பளம் ஆகிய விலையேற்றம் ஆகியவைகளை கருத்தில் கொண்டு இக்கொள்முதலை பரிந்துரைக்கலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

தற்சமயம், சென்னை உட்பட 13 மாநகரங்களில், B.S. IV வகை Emission norms கொண்ட வாகனங்களை மட்டுமே நிரந்தர பதிவு செய்ய முடியும் என்ற காரணத்தினால், B.S. III வகை Emission norms கொண்ட வாகனங்களை நிரந்தரப் பதிவு செய்ய அரசிடமிருந்து 22.10.2012 தேதியிட்ட கடிதம் மூலம் சிறப்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

ஆகவே, 9 K.L. கன அளவு கொண்ட கனரக தண்ணீர் லாரி ஒன்றின் விலை ரூ.15,85,264/— வீதம் 5 எண்ணிக்கை தண்ணீர் லாரிகளின் மொத்த தொகை ரூ.79,26,320/— ஆகும். இச்செலவினத்தை இயந்திர பொறியியல் துறை—2012—2013 க்கு ஒதுக்கப்படும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. இவ்வொப்பத்தின் செல்லத்தக்க காலம் 26.12.2012 வரை ஆகும்.

மேற்கண்ட குறிப்பு ஏற்கப்படின் இவ்வாகனங்கள் சென்னை வட்டார போக்குவரத்து அலுவலகங்களில் நிரந்தர பதிவு செய்ய, அதற்கான சிறப்பு உத்தரவு அரசிடமிருந்து பெறும் பட்சத்தில், கீழ்கண்ட இனங்களின் மீது அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே,

1. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி கோரப்பட்ட இவ்வொப்பத்திற்கு மன்ற அனுமதி வழங்கவும்,
2. இவ்வொப்பத்தில் குறைந்த விலை அளித்த ஒப்பதாரர் திருவாளர்கள் அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் (கேபின் + சேசிஸ்) Chassis Model 1616 IL – Fully built BS-III on 4330 WB சேசிஸின் மேல் பொருத்தப்பட்ட 9 K.L. கனஅளவு கொண்ட கனரக தண்ணீர் டேங்கர் வாகனம் ஒன்றுக்கு ரூ.15,85,264/— வீதம் 5 எண்ணிக்கைகள் வழங்க குறிப்பிட்டிருந்த மொத்த தொகையான ரூ.79,26,320/— க்கு கொள்முதல் செய்யவும்,
3. முதல் இனம் ஏற்கப்படின், திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்தினருக்கு பணியாணை வழங்கவும்,
4. திருவாளர்கள். அசோக் லேலண்டு நிறுவனத்திடமிருந்து ஒப்ப மொத்த தொகையில் 2 சதவிகிதம் பாதுகாப்பு தொகையாக வங்கி உத்தரவாதம் பெற்றுக் கொண்டு உடன்படிக்கை செய்து கொள்ளவும்,
5. வாகனங்கள் நிரந்தர பதிவு செய்து ஆணையர் அவர்களின் பெயரில் விலைப்பட்டி அளித்து சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட பின் மொத்த கொள்முதல் விலையில் 90 சதவிகிதம் காசோலையாக வழங்கவும்,
6. எஞ்சியுள்ள வாகன மொத்த தொகையின் 10 சதவிகித தொகையை, வாகனம் இயக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு வாகன செயல்திறன் திருப்திகர சான்றிதழ் உரிய அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்டபின் வழங்கவும்,
7. வாகனங்களின் நிரந்தரப் பதிவு, தகுதி சான்றிதழ், சாலை வரி, மற்றும் காப்பீடு ஆகியவைகளை மேற்கொண்டபின், இவைகளுக்கான உரிய செலவு சீட்டுகள் திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டபின், அத்தொகையை திருப்பி வழங்கவும்,

8. மேற்கண்ட இச்செலவினத் தொகையை இயந்திர பொறியியல் துறை—**2012—2013**—க்கு ஒதுக்கப்படும் மூலதன நிதியிலிருந்து வழங்கவும்,
9. இக்கொள்முதல் செய்யப்பட்டவுடன், அரசு விதிகளின்படி கழிவு செய்யும் நிலையில் இயக்கத்தில் உள்ள கீழ்கண்ட கனரக தண்ணீர் லாரிகளை கழிவு செய்ய தனியாக தொடர் நடவடிக்கை எடுக்கவும்,

| வரிசை எண். | வாகன பதிவு எண் மற்றும் வாகன மாதிரி | தயாரிப்பு வருடம் |
|---|---|---|
| **1.** | TMH 962 – Ashok Leyland | **1984** |
| **2.** | TMH 9296 – Ashok Leyland | **1986** |
| **3.** | TN04 G 0017 – Ashok Leyland | **1989** |
| **4.** | TN04 B 2515 – Ashok Leyland | **1993** |
| **5.** | TN04 B 2912 – Ashok Leyland | **1990** |

மேற்படி **1** முதல் **9** வரை உள்ள இனங்கள் ஏற்பின் நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு ( வரிவிதிப்பு (ம) நிதி ) மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''**19.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **294/2012** நாள் **19.11.2012**—ன்படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''**21.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **350/2012** நாள் **21.11.2012**—ன்படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.4.ந.க.எண்.பி2/5661/2012**
**ஆணையர் அவர்களின் 10.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.515/2012 **பொருள் எண்.20**

**மண்டலம்—4, பகுதி—9 முதல் 11 வரை, வார்டு—34 முதல் 48 வரை தினக்கூலி சம்பள அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்ததாரர் திருவாளர்.கே.கந்தன் அவர்களுக்கு பணி உத்தரவு வழங்க அனுமதி.**

பணியின் பெயர்

| வ. எண் | வார்டு எண் | பணி/சாலையின்பெயர் | பணியின்விவரம் | மதிப்பீட்டுத் தொகை இலட்சம் |
|---|---|---|---|---|
| 1 | 34 முதல் 48 வரை | 227 பணியாளர்களை கொண்டு வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரித்தல், சாலைகளை பெருக்குதல் ஆகிய பணிகளை தினக்கூலி சம்பளம் அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளுதல் ( ஒரு வருடத்திற்கு) | தினக்கூலி சம்பளம் அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்ளுதல் | ரூ194.71/— |

| | | |
|---|---|---|
| 2 | மதிப்பீட்டின் எண்./குழுவின்/ மன்றத்தின் தீர்மான எண்./ நாள் | ஆணையாளர் அவர்களின் ஆணை நாள் .10/9/2012 |
| 3 | திட்டக் குறியீட்டு எண். | பொருந்தாது |
| 4 | ஒப்புதல் பெற்ற மதீப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக்கொள்ளப்பட்ட ஆண்டு. | ரூ. 194.71 இலட்சம் 2012 – 2013ம் ஆண்டின் விலை விவரப்படி |
| | அ) பணியின் செலவினம் | ரூ. 194,70,925/— |
| | ஆ) மேற்பார்வை செலவினம் | ரூ. --- |
| | இ) சில்லரை மேற்பார்வை செலவு | ரூ. --- |
| | ஈ) மற்ற எதிர்பாரா செலவு | ரூ. --- |
| | உ) மின்சாராம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் | ரூ. --- |
| | மொத்தம் | ரூ. 194,70,925/— |
| 5 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் | சென்னை மாநகராட்சி செய்தி மலர் 04/10/2012 |
| 6 | ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | 04/10/2012 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 08/10/2012 |
| 8 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளில் இருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும். | இல்லை தலைமை பொறியாளர் (பொது) அவர்களின் ஆணை நாள் 29.09.2012 |
| 9 | பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா அ)வரவு செலவு திட்டத் தலைப்பு | வருவாய் நிதியின்கீழ் |
| 10 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 07/01/2013 |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்தப்புள்ளிகளாக குறைந்த ஒப்பந்தகால அறிவிப்பு மூலம் கோரப்பட்டது அவை பின்வருமாறு.
இ—டெண்டர் முறையில் 2 ஒப்பங்கள் பெறப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி நாளான **08/10/2012** அன்று கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் முன்னிலையில் தொழில் நுட்ப ஆவணங்கள்திறக்கப்பட்டது அதன் விவரம் கீழ் வருமாறு.

திருவாளர்.கே.கந்தன் மற்றும் திருவாளர்.ராணி லாஜஸ்ட்க் மூவர்ஸ் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளனர். மேற்கண்ட பணிக்கு இரண்டு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதால் முதலில் தொழில் நுட்ப உறை திறக்கப்பட்டதில் திருவாளர்.கே.கந்தன் அவர்கள் கீழ்கண்ட ஆவணங்களை இணைத்துள்ளார்

**2009–2010**ஆம் ஆண்டில் ரூ**4.67**க்கு பணிபுரிந்துள்ளார்

**2010–2011**ஆம் ஆண்டில் ரூ**6.04**க்கு பணிபுரிந்துள்ளார்

**2011–2012**ஆம் ஆண்டில் ரூ**10.29**க்கு பணிபுரிந்துள்ளார்

**2012–2013**ஆம் ஆண்டில் ரூ**133.87**க்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

திருவாளர்.ராணி லாஜஸ்ட்க் மூவர்ஸ் அவர்கள் கீழ்கண்ட ஆவணங்களை இணைத்துள்ளார்

**2010–2011**ஆம் ஆண்டில் இனைக்கப்படவில்லை

**2011–2012**ஆம் ஆண்டில் இனைக்கப்படவில்லை

**2012–2013**ஆம் ஆண்டில் ரூ**20.56**க்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

ஒப்பந்த விதி எண் **4**(iv)படி கடந்த மூன்று நிதியாண்டில் ஏதாவது ஒரு நிதியாண்டில் ஒப்பந்ததாரர் ஒரு கோடிக்கு பணிகள் முடிக்கப்படவேண்டும் ஆனால் மேற்கண்ட பணிக்கான ஒப்பந்ததாரர்களில் திருவாளர்.ராணி லாஜஸ்ட்க் மூவர்ஸ் அவர்கள் உரிய ஆவணங்கள் இணைக்காத காரணத்தால் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி நிராகரிக்கப்பட்டது. திருவாளர்.கே.கந்தன் அவர்கள் கடந்த மூன்றாண்டுகளில் **2012–2013**ஆம் ஆண்டில் ரூ**133.87** லட்சம் மதிப்பீட்டில் **17** பணிகள் எடுக்கப்பட்டு **10** பணிகள்ரூ.**44.63** இலட்சத்தில் முடிக்கப்பட்டு மீதமுள்ள **7** பணிகள் ரூ.**89.24** இலட்சத்தில் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

மேலும் இப்பணிக்கு இரண்டு முறை ஒப்பபுள்ளிகள் கோரியும் இதுவரை ஒப்பந்தபுள்ளிகள் எதுவும் பெறப்படாத நிலையில் மூன்றாம் முறைதான் இரண்டு ஒப்பப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. மேற்கண்ட சூழ்நிலையில் ஒரு ஒப்பப்புள்ளி நிராகரிக்கப்பட்ட நிலையில் மீதமுள்ள ஒரு ஒப்பந்தப்புள்ளி துப்புரவு பணியின் அவசர அவசியம் மற்றும் தன்மை கருதி திருவாளர்.கே.கந்தன் அவர்கள் ஏற்கனவே வார்டு **36,37,44,45** மற்றும் **46** ல் நல்ல முறையில் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், அன்னார் **2012–2013**ஆம் நிதியாண்டுகளில் ரூ**133.87** லட்சம் மதிப்பீட்டிலாக பணிகளை மேற்கொள்ளப்பட்டு வருவதால் தேவையான தகுதியாக எடுத்து இந்த ஒப்பந்தப்புள்ளியை தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக ஏற்கலாம் என கருதப்படுகிறது

தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிக்கான நிதி ஆவணம் **08/10/2012** அன்று மாலை **3.30**மணிக்கு திறக்கப்பட்டதின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி ஒப்பீட்டு விபரம் கீழ்க்கண்டவாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேறறவர் பெயர் | பணியில் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை | 2012–2013விலை விகிதம் அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்.கே.கந்தன் | ரூ.235x227x365<br>ரூ. 1,94,70,925/– | ரூ.375x227x365<br>=ரூ.3,10,70,625/– | (+)59.57% அதிகம் |

மேற்கண்ட பணிக்கு குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் திருவாளர்.கே.கந்தன் அவர்கள் குறிப்பிட்டுள்ள ஒப்பப்புள்ளி தொகை ரூ. **3,10,70,625** என்பது அலுலவலக விலை விபரப்பட்டியலின் படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)**59.57%**அதிகமாகும். மேலும் விலை குறைப்பு தொடர்பாக உடனடியாக விலை குறைப்புக்கு அழைக்கப்பட்டதில் குறைந்த தொகைக்கான ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் ஏற்கனவே வழங்கிய ஒப்பப்புள்ளி தொகையான ரூ.**375/–** லிருந்து குறைத்து ரூ **350/–**க்கு பணியை செய்ய **9.10.2012** நாளிட்ட கடிதத்தில் சம்மதம் தெரிவித்திருந்தார் இதன் அடிப்படையில் ஒப்பப்புள்ளி தொகையானது (ரூ.**350**x**227**x**365** =ரூ.**2,89,99,250/–**) என்பது மதிப்பீட்டைவிட (+) **48.93%** அதிகமாகும்.

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் வழங்கிய ஒப்பப்புள்ளி தொகை அதிகம் என்பதால் இரண்டாம் முறை பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் ஏற்கனவே சம்மதித்து வழங்கிய ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ**350/–** இருந்து குறைத்து ரூ **325/–**க்கு பணியை செய்ய

10.10.2012 நாளிட்ட கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்பப்புள்ளி தொகையானது (ரூ.325x227x365) =ரூ.2,69,27,875/— என்பது மதிப்பீட்டைவிட (+)38.29% அதிகமாகும். மூன்றாம் முறை பேச்சுவார்த்தைக்கு அழைக்கப்பட்டதில், ஒப்பந்ததாரர் இரண்டாம் முறை சம்மதித்து வழங்கிய ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ325/— இருந்து குறைத்து ரூ.300/—க்கு பணியை செய்ய 06/11/2012 நாளிட்ட கடிதத்தில் சம்மதம் தெரிவித்துள்ளார். அதன் அடிப்படையில் ஒப்பப்புள்ளி தொகையானது (ரூ.300x227x365)=ரூ.2,48,56,500/— என்பது மதிப்பீட்டைவிட (+)27.65% அதிகமாகும்.

இப்பணி துப்புரவு பணி என்பதாலும் தற்போது வெளிச்சந்தையில் குறைந்த ஊதியத்திற்கு பணியாளர்கள் கிடைப்பதில் மிகுந்த சிரமம் உள்ளதாலும் துப்புரவு பணி செய்ய வேண்டியதின் அவசியம் மற்றும் அவசரம் கருதி ஒப்பந்ததாரர் விலை குறைவு செய்து வழங்கிய ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் ஒப்பப்புள்ளி தொகையை ஏற்கலாம் என கருதப்படுகிறது.

எனவே, இப்பணிக்கான பணி உத்தரவை பேச்சுவார்த்தைக்கு பின் திரு.கே.கந்தன் அவர்களுக்கு அலுவலக விலை விபரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+)27.65% கூடுதலான ஒப்பத்தொகை ரூ.2,48,56,500/—க்கு வழங்கவும், மற்றும் அவசர, அவசியம் மற்றும் பணியின் தன்மை கருதி மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு பணிக்கான பணியானை வழங்கியமைக்கு, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 பிரிவு 7(1) மற்றும் 7(2)ன் படி நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண்.289/2012 நாள் 19.11.2012—ன் படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண்.346/2012 நாள்.21.11.2012—ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.5.ந.க.எண்.இ2/6085/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 8.11.12 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.516/2012 **பொருள் எண்.21**

**<u>ஒப்பம் – 2012–13 – மண்டலம்–5, பகுதி–12,13 மற்றும் 14, வார்டு–49 முதல் 63 வரையில் துப்புரவு பணிபுரிய 261 பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் ஒரு வருடத்திற்கு துப்புரவு பணி மேற்கொள்ள ஒப்பம் அளிக்கப்பட்டது – மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

1) பணியின் விவரம்:–

| வ. எண். | வார்டு எண். | பணியின் விவரம் | கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் படி பணியின் மதிப்பு ரூபாய் |
|---|---|---|---|
| 1 | 49,50,51,52,53,54,55,56,57,58,59,60,61, 62 மற்றும் 63 | வார்டு–49 முதல் 63 வரையில் துப்புரவு பணிபுரிய 261 பணியாளர்களை தினக்கூலி சம்பளம் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பணி அளித்தல் | 2,23,87,275.00 |

| | | | |
|---|---|---|---|
| 2) | மதிப்பீட்டின் எண், குழுவின்/மன்றத்தின் : தீர்மான எண். / நாள் | : | ஆணையர் அவர்களின் ஆணை நாள்–10.09.2012 |
| 3) | திட்ட குறியீட்டு எண். | : | பொருந்தாது |
| 4) | ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு | : | 2012–2013 |
| | அ) பணியின் செலவினம் | : | ரூ.2,23,87,275.00 |
| | ஆ) மேற்பார்வை செலவு | : | ரூ. – |
| | இ) சில்லரை மேற்பார்வை செலவு | : | ரூ. – |
| | ஈ) மற்ற எதிர்பாரா செலவு | : | ரூ. – |
| | உ) பணி தர செலவு | : | ரூ. – |
| | மொத்தம் | : | ரூ.2,23,87,275.00 |
| 5) | எந்தெந்த பத்திரிகைகளில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டன/நாள் | : | ஒப்பந்தப்புள்ளி செய்தி தினமணி நாளிதழ் நாள் 23.09.2012. இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழ் நாள்–23.09.2012 |
| 6) | ஒப்பம் படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் | : | 25.09.2012. |
| 7) | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | : | 27.09.2012. |
| 8) | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா ? இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் | : | ஆணையர் அவர்களின் ஆணை நாள்–10.09.2012 |
| 9) | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | : | 26.12.2012 |

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை (Two Cover System) முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து ஒப்பந்த கால அறிவிப்பு மூலம் ஒப்பம் வரவேற்கப்பட்டது.
ஒப்ப நாளான 27.09.2012 அன்று இ–டெண்டர் முறையில் இரண்டு ஒப்பம் பெறப்பட்டது அவற்றின் விபரம்.

1) திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ்,

2) திரு. டி. குமார்,

<u>தொழில் நுட்பம் உறை</u>

பெறப்பட்ட இரண்டு ஒப்பத்தில் தொழில் நுட்ப உறையின் ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் இரண்டு இவ்வொப்பங்கள் தகுதி வாய்ந்ததாகும்.

<u>விலை குறித்த உறை</u>

ஒப்பந்ததாரர் விலை உறை ஆவணங்கள் 29.09.2012 அன்று மாலை 3.30 மணிக்கு திறக்கப்பட்டு அவற்றின் அலகு விலை அடிப்படையில் கணக்கிடப்பட்ட மொத்த தொகையின் விபரம்.

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் | பரிந்துரைக்கப்–பட்டுள்ள பணியின் மதிப்பு (ரூ.) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை (ரூ.) | ஒப்பந்ததாரர் அளித்துள்ள விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திருவாளர். அன்னை எர்த் மூவர்ஸ் | 2,23,87,275.00 | 3,62,00,700.00 | (+)61.70% அதிகம் |
| 2. | திரு. டி. குமார் | 2,23,87,275.00 | 3,60,10,170.00 | (+)60.85% அதிகம் |

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு அலுவலக விலைப்படி கணக்கீட்டு ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பெறப்பட்ட இரண்டு ஒப்பத்தில் திரு. டி. குமார், அவர்கள் குறைந்த ஒப்பந்ததாரர் ஆவார். அவர் அளித்த ஒப்பத் தொகை 2012–2013ஆம் ஆண்டின் விலை விகிதம் படி ரூ.3,60,10,170.00 (+)60.85% அதிகம் என்பதால் ஒப்பந்ததாரருடன் மூன்று முறை நேரில் அழைத்து விலைக் குறைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை இறுதியாக நடந்த 09.10.2012 அன்று நடத்தப்பட்டு, ரூ.3,04,84,800.00 (+)36.17% அதிகம் விலை குறைப்பு செய்ய இசைவு கடிதத்தின் மூலம் தெரிவித்துள்ளார்.

இதன்படி விலை குறைப்புக்கு பின் திரு. டி. குமார், அவர்களின் ஒப்பத் தொகை ரூ.3,04,84,800.00 (+)36.17% அதிகம் ஆகும்.

அலுவலக விலைபடி கணக்கீட்டு ஒப்பிடுகையில், ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள விலை (+)36.17% அதிகம் உள்ளது. அவசிய அவசரம் கருதி 01.10.2012 முதல் திரு. டி. குமார் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருவதற்கும் பின்னேற்பு ஆணை வேண்டப்படுகிறது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திரு. டி. குமார், அவர்களுக்கு ரூ.3,04,84,800.00க்கான (2012–13ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி ஒப்ப சதவீதம் (+)36.17% அதிகம் மதிப்புள்ள பணிகள் அளிக்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 விரிவு 7(1) மற்றும் 7(2)ன் படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘19.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். 288/2012 நாள் 19.11.2012–ன் படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 345 /2012 நாள் 21.11.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>ம.அ.6.ந.க.எண்.இ1/ 8678 /2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 09.11.12 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.517/2012 **பொருள் எண்.22**

**<u>ஒப்பம்– 2012–13 மண்டலம்–6, பகுதி–15,16 மற்றும் 17, வார்டு–64 முதல் 78 வரையில் துப்புரவு பணிபுரிய 154 பணியாளர்களை தினக்கூலி சம்பளம் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பணி அளித்தல் பணிக்காக ஒப்பம் பெறப்பட்டது பணி ஆணை வழங்கியமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி.</u>**

01. பணியின் பெயர்:–

| வ. எண் | வார்டு எண். | பணியின் விவரம் | கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளியின்படி பணியின் மதிப்பு ரூபாய் |
|---|---|---|---|
| 1. | 64 முதல் 78 வரை | வார்டு–64 முதல் 78 வரையில் துப்புரவு பணிபுரிய 154 பணியாளர்களை தினக்கூலி சம்பளம் அடிப்படையில் ஒரு வருடத்திற்கு பணி அளித்தல் | 1,32,10,000.00 |
| | | மொத்தம் | 1,32,10,000.00 |

02. மதிப்பீட்டின் எண்.குழுவின்/மன்றத்தின் தீர்மான எண்/ நாள் : ஆணையாளர் அவர்களின் ஒப்புதல் நாள்.10.09.2012
03. திட்ட குறியீட்டு எண் : பொருந்தாது
04. ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் தொகை அலுவலக விலைப்பட்டியல் எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு : 2012 – 2013

அ) பணியின் செலவினம் : ரூ. 1,32,10,000.00
ஆ) மேற்பார்வை செலவு : ரூ. –
இ) சிறுமேற்பார்வை செலவு : ரூ. –
ஈ) தரக்கட்டுப்பாடு செலவு : ரூ. –
உ) மற்றைய எதிர்பாரா செலவு : ரூ. –
மொத்தம் : ரூ. 1,32,10,000.00

05. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட நாள் : 25.09.2012
06. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் : 27.09.2012
07. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்றவிவரம் குறிப்பிடவும். : ஆணையாளர் அவர்களின் ஆணை நாள்.10.09.2012
08. ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : 26.12.2012 வரை

மேற்கண்ட ஒப்பம் இரண்டு உறை (Two Cover System) முறையில் தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து ஒப்பந்த கால அறிவிப்பு மூலம் ஒப்பம் வரவேற்கப்பட்டது.

ஒப்ப நாளான 27.09.2012 அன்று இ–டெண்டர் முறையில் ஒரு ஒப்பம் பெறப்பட்டது. அவற்றின் விவரம்

1. திரு. டி. குமார்

**<u>தொழில் நுட்ப உறை</u>**

பெறப்பட்ட ஒரு ஒப்பத்தில் தொழில் நுட்ப உறையின் ஆவணங்களை மதிப்பாய்வு செய்யப்பட்டதில் இவ்வொப்பம் தகுதி வாய்ந்ததாகும்.

<u>**விலை குறித்த உறை**</u>

ஒப்பந்ததாரர் விலை உறை ஆவணங்கள் **29.09.2012** அன்று மாலை **3.30** மணிக்கு திறக்கப்பட்டு அவற்றின் அலகு விலை அடிப்படையில் கணக்கிடப்பட்ட மொத்த தொகையின் விவரம்.

| வ. எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் (திருவாளர்கள்) | பரிந்துரைக்கப் பட்டுள்ள பணியின் மதிப்பு (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை ரூ. | ஒப்பந்ததாரர் அளித்துள்ள விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1. | திரு. டி. குமார் | **1,32,10,000.00** | **2,12,47,380.00** | (+) 60.84 **%** |

எனவே இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு அலுவலக விலைப்படி கணக்கிட்டு ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**09.** குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா **?** ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : **01.10.2012, 05.10.2012** மற்றும் **15.10.12**

**10.** இறுதி பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பத் தொகை ஒப்ப சதவீதம் : ரூ.**320/–** நபர் ஒன்றுக்கு ரூ.**1,79,87,200/–** (+) **36.16** % அதிகம்

மேற்கண்ட பணிக்கு பெறப்பட்ட ஒற்றை ஒப்பத்தில் திரு. டி. குமார் அவர்கள், அளித்த ஒப்ப விலை நபர் ஒன்றுக்கு ரூ.**378/–** ஆகும். இவ்விலையானது **2012–13**ஆம் ஆண்டில் ஒப்புதல் பெற்ற அலுவலக விலை ரூ.**1,32,10,000/–** ன்படி ஒப்பிடுகையில் இவரது ஒப்ப தொகை ரூ.**2,12,47,380/–** ஆகும். மற்றும் ஒப்ப சதவீதம் (+) **60.84**% ஆகும். மேலும் இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில் இவர் அளித்த இறுதி ஒப்ப விலை நபர் ஒன்றுக்கு ரூ.**320/–** ஆகும். இதன்படி கணக்கீடுகையில் இவரது இறுதி ஒப்ப தொகை ரூ.**1,79,87,200/–** (+) **36.16** % ஆகும்.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை திரு.டி.குமார் அவர்களுக்கு ரூ.**1,79,87,200/–** (ரூபாய் ஒரு கோடி எழுபத்தி ஒன்பது இலட்சத்து எண்பத்தி ஏழாயிரத்து இருநூறு மட்டும்) **2012–2013**ஆம் ஆண்டின் அலுவலக விலை விகிதப்படி ஒப்ப சதவீதம் (+) **36.16** % அதிகம் என்ற போதிலும், ஒற்றை ஒப்பத்தினை, பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி, மன்ற தீர்மானத்தை எதிர்நோக்கி உடனே வேலை தொடங்கும் வகையில் திரு.டி.குமார் அவர்களுக்கு ஒப்பம் அளிக்க, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7 (I) & (II)** ன்படி, .நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**19.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **290/2012** நாள் **19.11.2012–**ன் படி நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**21.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **347/2012** நாள் **21.11.2012–**ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.8.ந.க.எண்.பி2/8233/1/2011**
**ஆணையர் அவர்களின் 25.09.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.518/2012 **பொருள் எண்.23**

**ஒப்பம் – 2012–13 – மண்டலம்–8 – பகுதி –21,22 மற்றும் 23 – வார்டு– 94 முதல் 108 வரை தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் 98 தொழிலாளர்கள் அமர்த்தி 1 வருட காலத்திற்கு துப்புரவுப் பணி மேற்கொள்ள ஒப்பம் வழங்க அனுமதி.**

01. பணியின் பெயர்: மண்டலம்–8, பகுதி–21, 22 மற்றும் 23, வார்டு–94 முதல் 108 வரை) தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் 98 தொழிலாளர்கள் அமர்த்தி 1 வருட காலத்திற்கு துப்புரவுப் பணி மேற்கொள்ளுதல்.

| வ. எண். | வார்டு எண். | பணியின் தன்மை | மொத்த பணியாளர்கள் | மொத்த தொகை |
|---|---|---|---|---|
| 1 | 94 முதல் 108 வரை | தனியார் நிறுவனம் மூலம் தினக்கூலி அடிப்படையில் 98 தொழிலாளர்கள் அமர்த்தி 1 வருட காலத்திற்கு துப்புரவுப் பணி மேற்கொள்ளுதல் | 98 | 84,05,980.00 |
| | | | **மொத்தம்** | 84,05,980.00 |

02. மதிப்பீட்டின் எண்,/தீர்மான எண்/நாள் : பின்னர் பெறப்படும்
03. திட்ட குறியீட்டு எண் : பின்னர் பெறப்படும்
04. அலுவலக விலை எடுத்துக் கொள்ளப்பட்ட ஆண்டு: 2012 – 13
    அ) பணியின் செலவினம் : ரூ. 84,05,980.00
    ஆ) மேற்பார்வை செலவு : ரூ. –
    இ) சில்லரை மேற்பார்வை செலவு : ரூ. –
    ஈ) மற்ற எதிர்பாரா செலவு : ரூ. –
    உ) மின்சாரம், குடிநீர், கழிவுநீர் மற்ற பிற செலவினம் : ரூ. –

    மொத்தம் : ரூ. 84,05,980.00

05. எந்தெந்த பத்திரிகையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது / நாள் :
    1) சென்னை மாநகராட்சி செய்தி மடல் நாள் 14–09–2012
    2) E ஒப்பம் மூலம் சமர்ப்பிக்கும் முறை
    3) தினசரி நாளிதழ் டெக்கான் கிரானிகல் நாள் 13.9.2012
    4) தினசரி நாளிதழ் தினபூமி, நாள் 13.9.12

06. ஒப்ப படிவம் பெற குறிக்கப்பட்ட இறுதி நாள் : 18.9.2012

07. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் : 21.9.2012

08. ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா இல்லை எனில் உரிய அலுவலரின் ஒப்புதல் பெற்ற விவரம் குறிப்பிடவும் : இல்லை குறுகிய கால ஒப்பம்

09. எத்தனை ஒப்பங்கள் விற்பனை செய்யப்பட்டன : E- Tender
10. எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன ? : இரண்டு

**11.** ஒப்பத்தில் பங்கேற்றவர் விவரம்

| வ. எண். | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் **<u>திரு. / திருவாளர்கள்.</u>** | தொழில்நுட்ப ஒப்பத்தில் தேர்ச்சி பெற்றுள்ளனரா ? ஆம் (அ) இல்லை |
|---|---|---|
| **01.** | கே. கந்தன் | ஆம் |
| **02.** | ஈ. மாணிக்கம் | இல்லை |

**குறிப்பு :** **Two Cover System என்பதால் (வரிசை எண்.5) தொழில்நுட்ப ஒப்பத்தில் திரு. கே. கந்தன் ஒப்பந்ததாரர் தேர்ச்சி பெற்றனர்.**

| வ. எண் . | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் **<u>திரு. / திருவாளர்கள்.</u>** | பணியின் அலுவலக மதிப்பு ஒரு நபருக்கு ரூ. 235/– | ஒப்பந்ததாரின் ஒப்பத் தொகை (Price Bid) ஒரு நபருக்கு ரூ. 310/– | **2010–11**ம் ஆண்டு விலையோடு ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் விழுக்காடு அதிகம் / குறைவு |
|---|---|---|---|---|
| **01.** | கே. கந்தன் | **84,05,980.00** | **1,10,88,700/–** | (+)31.91% அதிகம் |

**12.** குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சு வார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் : ஆம் / **24.9.2012**

**13.** பேச்சுவார்த்தைக்குப்பின் இறுதிஒப்பத்தொகை / ஒப்ப சதவீதம் : **98,36,750/– / (+) 17.02%** ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 275 /– வீதம் 2012– 13 ஆம் ஆண்டுவிலை விவரப்படி

**15.** கூடுதல் பிணை வைப்புத் தொகை செலுத்தப்பட்ட விவரம் அ) கேட்பு காசோலை எண், நாள் வங்கியின் பெயர் : –

**16.** பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா ?
அ) வரவு செலவுத்திட்ட தலைப்பு :

**17.** ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் : **21.9.2012** முதல் **19–12–2012**

மேற்குறிப்பிட்ட பணிக்காக பெறப்பட்ட ஒப்பத்தில் பேச்சு வார்த்தைக்குப் பின் திரு. கே. கந்தன் அவர்கள் அளித்த ஒப்ப விழுக்காடு **2011–12** ஆண்டின் அலுவலக விலையை விட (+)17.02% அதிகம் ஆகும். இதன்படி அவர் அளித்த ஒப்பத் தொகை ரூ.**98,36,750.00** (ரூபாய் தொண்ணூற்றி எட்டாயிரத்து முப்பத்தராயிரத்து எழநூற்றி ஐம்பது மட்டும் ) ஆகும்.

மன்றத் தீர்மானத்தின்படி, (தீர்மான எண்.512/2007, நாள் 25–9–2007)

1. அடிப்படை இனங்கள் தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் பொருட்களின் சந்தை விலைகள் கொண்டு சந்தை விலை விவரப் பட்டியல் தயாரிப்பதற்கும், (Source – Builders Association of India – Southern Centre) இந்து நாளிதழில் வெளியிடப்பட்டது.
2. அவ்வாறு, தயாரிக்கப்பட்ட சந்தை விவரப்பட்டியல் கொண்டு, ஒப்பந்தங்கள் பெறப்படும் பொழுது, ஒப்பீடு (Comparison) செய்து அதற்கேற்றவாறு ஒப்பந்தங்களைக் கையாளவும்,
3. மேலும், சந்தை விலைகளின் மாற்றங்கள் நிகழும் பொழுது, அதற்கேற்றவாறு சந்தை விலை விவரப்பட்டியல் மாற்றியமைத்து ஒப்பீடு (Comparison) செய்து ஒப்பந்தங்களைக் கையாளவும் மன்றம் அனுமதி அளித்துள்ளது.

எனவே, இப்பணிகளின் தன்மையை (Nature of Work) கருத்தில் கொண்டு, அலுவலக விலைப்படி கணக்கிட்டு ஒப்பிட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பணியின் அலுவலக மதிப்பு : ரூ. **84,05,980.00**
ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை : ரூ. **98,36,750.00**
ஒப்பங்கள் பெறப்பட்ட நாள் : 21-09-2012

அலுவலக விலையோடு கணக்கிட்டு ஒப்பீடுகையில், தற்போதைய **2012–13** ஆண்டு அலுவலக விலையை விட **(+) 17.02** % அதிகமாக உள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தை குறைந்த விலைப்புள்ளி அளித்த திரு. கே. கந்தன் அவர்களுக்கு **ரூ. 98,36,750.00** க்கு **2010–11**ம் ஆண்டு அலுவலக விலையை விட **(+)17.02%** அதிகமாக பணிகள் அளிக்க, ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப் புள்ளிச் சட்டம் **1998** பிரிவு 7 **(1)** & **(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**19.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) வின் கூட்டத்தின் தீர்மான எண். **287/2012** நாள் **19.11.2012**–ன் படி இதற்கு வார்டு குழு தீர்மானம் பின்னர் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘**21.11.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். **344 /2012**, நாள் **21.11.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.க.கு.ந.க.எண்.அ8/3590/2012**
**ஆணையர் அவர்களின் 19.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.519/2012 **பொருள் எண்.24**

**பண்டிகை முன்பணம் உயர்த்தி வழங்கப்பட்டுள்ள அரசாணையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தியதற்கு பின்னேற்பு அனுமதி**

அரசாணை எண்.388 நிதித் (சம்பளம்) துறை, நாள். 06.11.2012 ல் பண்டிகை முன்பணம் ரூ.2000/–த்திலிருந்து ரூ.5000/– ஆக உயர்த்தி வழங்க உத்திரவிடப்பட்டுள்ளது. பண்டிகை முன்பணம் வழங்குவதிலும் அத்தொகையினை பிடித்தம் செய்வதிலும் தற்போதுள்ள நடைமுறையில் மாற்றம் ஏதுமில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ளவாறு இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் அரசு மாண்யம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் தகுதி உள்ள அலுவலர்களுக்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வரசாணை உடனடியாக நடைமுறைக்கு வருவதாகவும் அரசாணை வெளியிடப்பட்ட நாளுக்கு பின்னர் வரும் அனைத்து பண்டிகைகளுக்கும் பொருந்தும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வரசாணை சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கும் பொருந்தும் என்பதால் இவ்வரசாணைதனை சென்னை மாநகராட்சியில் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு நடைமுறைபடுத்த ஆணை பெறப்பட்டு அனைத்து மண்டல அலுவலகங்களுக்கும், துறைத்தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை எண்.388 நிதித் (சம்பளம்) துறை, நாள். 06.11.2012ஐ நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் பின்னேற்பிற்குட்பட்டு சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 354/2012 நாள் 21.11.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/0504/2012**
**ஆணையர் அவர்களின் 20.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.520/2012 **பொருள் எண்.25**

**அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து அப்பல்லோ ஆய்வகத்திற்கு குருதிக் குழாய் அமைக்க அனுமதி**

**25.07.2012** நாளிட்ட**294/2012** எண்ணிட்ட மன்றத் தீர்மானத்தில் அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து அதன் ஆய்வுக் கூடத்திற்கு சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள ஆடோஸ் பூங்கா வழியாக **20**அடி உயரத்தில் குருதிக் குழாய் அமைக்க உரிய விதி முறைகளைப் பின்பற்றி அப்பல்லோ மருத்துவமனைக்கு அனுமதி அளிக்க ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

**21.08.2012** நாளிட்ட அப்பல்லோ மருத்துவமனை தலைமைச் செயல் அலுவலரின் கடிதத்தில் பூங்காவிற்கு மேல் **20** அடி உயரத்தில் அமைக்க அனுமதி கோரப்பட்டுள்ள குருதிக் குழாயை தாங்க கூடிய அமைப்பின் அளவுகள் தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

**07.11.2012** மற்றும் **14.11.2012** நாளிட்ட அப்பல்லோ மருத்துவமனை தலைமைச் செயல் அலுவலரின் கடிதத்தில் மேற்படி திட்டம் மாற்றப்பட்டு தம் பொறியியல் குழுவால் தெரிவித்துள்ளபடி மேற்குறிப்பிடப்பட்டுள்ள குருதிக் குழாய் ஆடோஸ் சாலை பூங்கா வழியாக பூமிக்கு அடியில் அமைக்கப்படவுள்ளதாகவும் பூமிக்கு அடியில் எடுத்துச் செல்லவுள்ள அமைப்புகளின் வரைபடம் மற்றும் கட்டமைப்புகளின் அளவுகள் குறித்த விவரங்கள் தெரிவித்து குருதிக் குழாய் எடுத்துச் செல்ல அனுமதி அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

ஆடோஸ் சாலை பூங்கா வழியாக பூமிக்கு அடியில் இரு **10** அங்குலம் **(25** செ.மீட்டர்) விட்டமுள்ளள திண்காரைக்(concrete)குழாய்களை இணையாக பக்கவாட்டில் புதைத்து அவற்றுக்குள் **6** அங்குலம் **(15** செ.மீட்டர்) விட்டமுள்ள குருதிக் குழாயை செலுத்தி இத்திட்டம் நிறைவேற்றப்பட உள்ளதாகத் தெரிய வருகிறது. அங்ஙனம் செய்தால் சென்னை மாநகராட்சி ஆடோஸ் சாலை பூங்காவில் அத்திட்டம் இடம் பெறும் பரப்பு **2** x **0.049107** = **0.098214** ச.மீட்டர் ஆகும்.

தகவல் தொழில் நுட்பத் துறையின் **12.02.2001** ஆம் நாளிட்ட அரசாணை (பல்வகை) எண்.7ன்படி சென்னை மாநகராட்சியில் பல்வேறு சாலைகளில் கண்ணாடி இழை வடங்கள் பதிக்க **2010**ஆம் ஆண்டு முதல் தடவாடகை(track rent)யாக கிலோ மீட்டருக்கு ரூ.**9400/–**என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் இவ்வரசாணையில் மூன்றாண்டிற்கு ஒருமுறை இத்தடவாடகை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்றும், ஆண்டு தோறும் **10** விழுக்காடு தடவாடகை (track rent) உயர்த்தலாமெனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**19.06.2012** ஆம் நாளிட்ட **226/2012** எண்ணிட்ட மன்றத் தீர்மானத்தில் **2012** ஆம் ஆண்டு முதல் இத் தட வாடகையை கிலோ மீட்டருக்கு ரூ.**29500/–** என நிர்ணயிக்கலாமென அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளளது.

மேற்கண்டவாறு தட வாடகை நிர்ணயிக்கப்பட்டுள்ள கண்ணாடி இழைவடத்தின் விட்டம் கருதளவு **0.10** மீட்டரும் (**4** அங்குலம்) அதன் பரப்பளவு **0.007857** சதுர மீட்டரும் ஆகும். அப்பல்லோ மருத்துவமனை நிறுவனம் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ள குருதிக் குழாய் அமைப்பின் விட்டம் **2** x **0.25** மீட்டரும், அதன் பரப்பளவு **0.098214** சதுர மீட்டரும் ஆகும். அதாவது அப்பல்லோ மருத்துவமனை நிறுவனத்தின் மேற்படி குருதிக் குழாய் அமைப்பு கண்ணாடி இழை வடத்தின் பரப்பை விட (**0.098214** ÷ **0.007857**) **12.50** மடங்கு பெரியதாகும். அதன் அடிப்படையிலும் மன்றத் தீர்மான எண்.**226/2012** இன் அடிப்படையிலும் கணக்கிடும் போது மேற்காணும் அமைப்பிற்கான தடவாடகை ஆண்டுக்கு ரூ.**29500** x **12.50** x **0.069** கி.மீட்டர் (நீளம்) = 25444/– ஆகும்.

கண்ணாடி இழை வடம் சாலைக்கு அடியில் புதைக்கப்படுவதாகும். மேற்கண்ட நிறுவனத்தின் கோரிக்கை குருதிக் குழாய் அமைப்பு என்பதாலும் ஆடோஸ் சாலை பூங்கா வழியாக பூமிக்கு அடியில் செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாலும் இது ஒரு சிறப்பு நிகழ்வு என்பதால் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தட வாடகையில் **5** (ஐந்து) மடங்கு அதிகமாக (அதவாது ரூ.**25444** x **5** ) =

**1,27,220/–** ஆண்டு வாடகை நிர்ணயிக்கலாம் என கருதப்படுகிறது. ( இதனுடன் சேவை வரி செலுத்தப்பட வேண்டும்)

இந்த பணி முடிக்கப்பட்டபின் அளவீடுகளில் வேறுபாடுகள் தெரியவரின் தடவாடகைத் தொகை அதற்கேற்றாற் போல் மாற்றி அமைக்கப்படும்.

எனவே கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அப்பல்லோ மருத்துவமனைக்கு ஆடோஸ் சாலை பூங்கா வழியாக குழாய் மூலம் இரத்தம் மற்றும் இரத்த மாதிரிகள் எடுத்துச் செல்வதற்கான குருதிக் குழாய்களை பதிக்க அனுமதி வழங்க ஆணை வேண்டப்படுகிறது.

(அ) மேற்படி இடத்திற்காக நிர்ணயிக்கப்படும் வாடகையை சேவை வரியுடன் பணி துவங்கப்படுவதற்கு முன் ஓராண்டிற்கான வாடகையை முன்னதாக அளிக்கப்பட வேண்டும் மற்றும் ஒவ்வொரு ஆண்டும் கூடுதலாக 10 விழுக்காடு என்ற அளவில் முன் கூட்டியே ஒவ்வொரு நிதியாண்டின் துவக்கத்திலும் சேவை வரியுடன் செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) மூன்றாண்டுக்கொரு முறை தடவாடகை மறு நிர்ணயம் செய்யப்படும்

(இ) மேற்படி அனுமதி பூமிக்கடியில் குழாய் எடுத்துச் செல்ல மட்டுமே வழங்கப்படுகிறது.

(ஈ) பூங்காவில் குருதிக் குழாய் எடுத்துச் செல்லப்படும் பகுதியைத் தவிர பிற பகுதிகளுக்கு எந்த வித சேதமும் ஏற்படக் கூடாது.

(உ) குழாய் மூலம் எடுத்துச் செல்லப்படும் இரத்தம் மற்றும் இதர மாதிரிகளால் பொது மக்களின் சுற்றுச் சூழல் மற்றும் சுகாதாரத்திற்கு குந்தகமாக அமையக் கூடாது.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு நுங்கம்பாக்கம் கிராமம், தொகுதி எண்.19, நில அளவை எண்.108ல் சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான ஆடோஸ் சாலை பூங்கா வழியாக அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து வேலஸ் கார்டன் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனை ஆய்வுக்கூடத்திற்கு குழாய் மூலமாக இரத்தம் மற்றும் இதர மாதிரிகள் சென்னை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள பூங்காவின் அடியில் இரு 10 அங்குலம் (25செ.மீட்டர்) விட்டமுள்ள திண்காரைக்(concrete)குழாய்களை இணையாக பக்கவாட்டில் புதைத்து அவற்றுக்குள் 6 அங்குலம் (15 செ.மீட்டர்) விட்டமுள்ள குருதிக் குழாயை எடுத்துச் செல்வதற்கு 9வது வார்டு குழு பின்னேற்பு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 357/2012 நாள் 21.11.2012–ன்படி வார்டு குழு தீர்மானம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/06886/2012**
**ஆணையர் அவர்களின் 16.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.521/2012 **பொருள் எண்.26**

**வருவாய் துறை – க.எண்.72, வேளச்சேரி சாலை, கிண்டி, சென்னை – 32 என்ற விலாசத்தில் இயங்கும் ''ப்ளூ க்ராஸ் ஆப் இந்தியா'' நிறுவனத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க அனுமதி.**

''ப்ளூ க்ராஸ் ஆப் இந்தியா'' நிறுவனம், முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு அரசு அவர்களிடம் சமர்ப்பித்துள்ள கடிதத்தில் ''ப்ளூ க்ராஸ் ஆப் இந்தியா'' தொண்டு நிறுவனத்தின் சேவை மனப்பான்மையுடன்கூடிய செயல்பாடுகளுக்காகவும் ABC சென்டர், ஆம்புலன்ஸ் சேவை, நலிவுற்ற விலங்குகளை பாதுகாத்து பராமரிக்க தங்கும் வசதி மற்றும் பிற தொண்டு நடவடிக்கைகளுக்கான சேவைகளை மேற்கொள்ள தமிழக அரசால் 1992ஆம் ஆண்டில் காலிமனை ஒதுக்கப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் சென்னை மாநகராட்சியால் பிடிக்கப்பட்டு தங்கள் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும் தெரு நாய்களுக்கு, நோய் தடுப்பு ஊசி மற்றும் இனப்பெருக்க தடை அறுவை சிகிச்சைகள் போன்ற இலவச சேவைகள் தங்கள் நிறுவனத்தால் வழங்கப்படுவதாகவும், இதுவரை சுமார் 1 லட்சத்து 50 ஆயிரம் நாய்களுக்கு இனப்பெருக்கத் தடை அறுவை சிகிச்சை மற்றும் நோய் தடுப்பு சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் மற்றும் கடந்த 20 ஆண்டுகளாக சென்னை மாநகராட்சியால் ஒப்படைக்கப்படும் ஆதரவற்ற மற்றும் பறிமுதல் செய்யப்பட்டட கால்நடைகளை அவைகள் இறக்கும் வரை பராமரிப்பு சேவை வழங்கப்படுவதாகவும் இதனடிப்படையில் க.எண்.72, வேளச்சேரி சாலை, கிண்டி, சென்னை–32 என்ற விலாசத்தில் இயங்கும் மேற்படி சேவை மையத்திற்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்க ஒப்புதல் வழங்கும்படி கோரப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 101(C)ன்கீழ் பின்வரும் கட்டட வகைகள் மற்றும் காலியிடங்களுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

101(C) வறுமையுற்றோர் மற்றும் விலங்குகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் சேவை மனப்பான்மையுடன் செயல்பட பயன்படுத்தப்படும் கட்டடங்கள், மேலும் சேவை மனப்பான்மையுடன் இலாப நோக்கமின்றி செயல்படும் நிறுவனங்கள், ஆதரவற்றோருக்காக நடத்தப்படும் மையம், முதியோர் இல்லம், காது கேளாதோர் மற்றும் வாய்பேசாதோர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகள், ஆதரவற்ற முதியோர் மற்றும் பெண்களுக்கான புகலிடம் மற்றும் இது போன்ற இரக்க மனப்பான்மையுடன் சேவைபுரிய பயன்படுத்தப்படும் கட்டடங்கள் (''உதாரணமாக முற்றிலும் இலவசமாக வறியவர்களுக்காக நடத்தப்படும் கல்வி நிலையங்கள், திருமண மண்டபங்கள், தங்கும் விடுதிகள், சமுதாய நலகூடங்கள், ஆதரவற்றவர்களால் நடத்தப்படும் அனாதை இல்லங்கள்'') முதலான மன்றத்தினால் ஒப்புதல் வழங்கப்படும் இனங்கள்.

மேற்கூறிய ''ப்ளூ க்ராஸ் ஆப் இந்தியா'' நிறுவனமானது ஆதரவற்ற விலங்குகளின் புகலிட மையமாக சேவை மனப்பான்மையுடன் செயல்பட்டுவருவதன் அடிப்படையிலும் மற்றும் மேற்கூறிய சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919 பிரிவு 101(C)ன்கீழ் வரையறுக்கப்பட்டுள்ள விதிகளின் வழிமுறையினை அடிப்படையாகக் கொண்டும் க.எண்.72, வேளச்சேரி சாலை, கிண்டி, சென்னை–32 என்ற விலாசத்தில் இயங்கும் ''ப்ளூ க்ராஸ் ஆப் இந்தியா'' நிறுவனத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 353/2012 நாள் 21.11.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**க.து.ந.க.எண்.இ1/221/2012**
**ஆணையாளர் அவர்களின் 15.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.522/2012 **பொருள் எண்.27**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சியில் பணியாற்றும் திரு.J.ஸ்ரீராமுலு, செயற்பொறியாளர், கட்டடத்துறை (மாற்றுப்பணியில் பேருந்து சாலைகள் துறை) அவர்கள் 30.11.2012 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார்.

சென்னை மாநகராட்சியில், சர்வேயராக 01.06.1977 முதல் பணியில் சேர்ந்து 07.08.1979 முதல் இளநிலை பொறியாளராகவும், 14.05.1988 முதல் உதவி பொறியாளராக பதவி மாற்றத்திலும் 28.02.2000 முதல் உதவி செயற் பொறியாளராகவும், 28.02.2011 முதல் செயற் பொறியாளராகவும் தொடர்ந்து 35 ஆண்டுகள் பணியாற்றி வருகிறார். தனியருக்கு சர்வேயர் பதவியில் தகுதிகாண் பருவம் அங்கீகரிக்கப்பட்டு அனைத்து பதவிகளிலும் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் பணியாற்றிய துறை மற்றும் மண்டல அலுவலகங்களில் தணிக்கைத்தடைகள், நேர் செய்யப்படாத முன்பண நிலுவைகள் உள்ள விவரம் கோரப்பட்டதில் மழைநீர் வடிகால் துறையின் குறிப்பில், தற்போதுள்ள ஆவணங்களை சரிபார்த்ததில் தனியர் மீது தணிக்கைத்தடைகள் நிலுவையில் உள்ளது எனவும், நிதி இழப்பு மற்றும் முன்பணம் நிலுவையில் உள்ளது எனவும் தணிக்கை அறிக்கை 2007–2008, பத்தி எண்.58, செ. சீட்டு எண்.எ155/12.01.2000 ரூ.9500/– மற்றும் செ.சீட்டு எண்.எ35/12.07.2000 ரூ.7500/–நிலுவையில் உள்ளது எனவும், மேலும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கட்டடத்துறையின் குறிப்பில், தனியர் மீது தணிக்கை தடை பத்தி எண்.43/2001–2002ல் நிலுவையில் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதர துறை / மண்டலங்களில் இன்றைய தேதியில் நிலுவை இல்லை என ''இன்மை ''அறிக்கை பெறப்பட்டுள்ளது.

07.11.2012 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலரின் குறிப்பில், தனியர் மீது விழிப்பு குழுமத்தில் இன்றைய தேதியில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியர் வீடு கட்டும் முன்பணம் மற்றும் வாகன முன்பணம் ஏதும் சென்னை மாநகராட்சியில் பெறவில்லை என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது. மேலும் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில், தனியர் உறுப்பினராக இல்லை என்ற சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

தனியர் வகிக்கும் பதவி சென்னை மாநகராட்சி பணிப்பிரிவில் வகுப்பு–2ன் கீழ் வருவதால் தனியரை ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டும்.

எனவே, திரு.J. ஸ்ரீராமுலு, செயற்பொறியாளர், கட்டடத்துறை (மாற்றுப்பணியில் பேருந்து சாலைகள் துறை) அவர்களின் மீது தற்போது மழைநீர் வடிகால் துறை மற்றும் கட்டடத்துறையில் நிலுவையிலுள்ள தணிக்கைத்தடை மற்றும் முன்பண நிலுவைகளை நீக்கம் செய்ய வேண்டும் என்று தெரிவித்து மேலும் தணிக்கைத்தடைகள், முன்பண நிலுவைகள் ஏதும் இருப்பது பின்னர் தெரியவரின், தனியரை அதற்கு பொறுப்பாக்கி அதனை தனியரின் ஓய்வூதிய பணப்பயன்களில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 30.11.2012 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்க, நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது .''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.13.வ.து.ந.க.எண்.ஆர்2/ 413 /2012**
**ஆணையாளர் அவர்களின் 16.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.523/2012 **பொருள் எண்.28**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–13, வருவாய் துறையில், உதவி வருவாய் அலுவலராக பணிபுரியும் திரு. K.V. கோபாலகிருஷ்ணன் என்பவர் வரும் 30/11/2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற உள்ளார். தனியர் பிறந்த தேதி 15/11/1954 ஆகும்.

திரு. K.V. கோபாலகிருஷ்ணன், சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 08/11/1972 அன்று சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் மஸ்தூராக பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் 12/06/1981 முதல் களப்பணி உதவியாளராகவும், 12/10/1981 முதல் அடிப்படை சுகாதார பணியாளராகவும் பணியில் சேர்ந்துள்ளார். பின்னர் 13/03/1984 முதல் தட்டச்சராக பதவி உயர்வு பெற்றுள்ளார். அதன் பின்னர் 12/05/1994 முதல் உதவியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார், அதன் பின்னர் 06/09/2006 முதல் உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார் அதன் பின்னர் 25/06/2007 முதல் வரி மதிப்பீட்டாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தனியர் உதவி வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று 11/01/2010 முதல் பணிபுரிந்து வருகிறார், மன்ற தீர்மான எண் 553/09 நாள் 31/12/2009ன் படி தனியர் உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாளான 11/01/2010 முற்பகல் முதல் உதவி வருவாய் அலுவலராக பணியில் உறுதியாக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது மேலும் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.E2/12301/10 நாள்.24/06/2010ன் படி 11/01/2010 முற்பகல் முதல் உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. தனியர் வகிக்கும் உதவி வருவாய் அலுவலர் பதவி சென்னை மாநகராட்சி பணியமைப்பில் வகுப்பு 2ன் கீழ் வரும் பதவியாகும். அதனடிப்படையில் இவரை ஓய்வு பெற அனுமதிக்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

06/11/2012 நாளிட்ட சென்னை மாநகராட்சி விழிப்பு பணி அலுவலர் அவர்களது அறிக்கையில் இன்றைய தேதியில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி கூட்டுறவு சங்கத்திடமிருந்து தனியர் செலுத்த வேண்டிய தொகை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் 30.10.2012 அன்று பெறப்பட்டுள்ளது.

தனியர் சென்னை மாநகராட்சியில் பணியாற்றிய அனைத்து துறைகளிலிருந்தும் தணிக்கை தடை நேர்செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் குறித்து விவரம் கோரி, இன்மை அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது. மேலும் திரு. K.V. கோபாலகிருஷ்ணன் உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–13ல் பணிபுரிந்த காலமான 01.03.2010 முதல் இதுநாள் வரை அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை.

தனியரது பணிப்பதிவேடு முன்தணிக்கை செய்யும் பொருட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டு, துணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் கடிதம் மூமு எண் 3109/எ4/2012 நாள் 20/09/2012ன்படி முன் தணிக்கை சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

எனவே திரு. K.V.கோபாலகிருஷ்ணன் உதவி வருவாய் அலுவலர் மண்டலம்–13 அவர்களின் மீது தணிக்கை தடைகள் நேர்செய்யப்படாத முன்பணங்கள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியது ஏதும் பின்னர் தெரியவரின் தனியரை அதற்கு பொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படவிருக்கும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி 30/11/2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது .”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.9.ந.க.எண்.எச்1/134/2012**
**ஆணையாளர் அவர்களின் 21.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.524/2012 **பொருள் எண்.29**

**வயது முதிர்வு ஓய்வு அனுமதி**

டாக்டர்.எஸ்.சந்திரதாஸ், மருத்துவ அலுவலர் சுகாதாரத்துறை, மண்டலம்–9 அவர்கள் 31.12.2012ல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல இருக்கின்றார்.

டாக்டர்.எஸ். சந்திரதாஸ், மருத்துவ அலுவலர் அவர்கள் 20.06.1984 முதல் சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகிறார். தனியர் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்ட நாளான 20.06.1984 முதல் பணிவரன்முறைப் படுத்தப்பட்டுள்ளது. மேலும் மருத்துவ அலுவலர் பதவியில் 27.06.1986 முதல் தகுதிக் காண்பருவம் முடித்தவராகவும் அறிவித்து 05.03.1988 ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர். எஸ். சந்திரதாஸ், மருத்துவ அலுவலர் அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் 07.01.1996 முதல் தேர்வுநிலை ஊதியம் விகிதத்திலும், 27.08.2008 முதல் சிறப்பு நிலை ஊதிய விகிதத்திலும் ஊதிய நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகின்றது.

டாக்டர்.எஸ். சந்திரதாஸ், மருத்துவ அலுவலர் சுகாதாரத்துறை மண்டலம்–9 அவர்கள் வயது முதிர்வு ஓய்வு பெற வேண்டிய நாள் 31.12.2012, தனியர் மீது துறை ரீதியாக எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் குற்றவியல் நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. மேலும் தனியருக்கு சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கணக்கு முடிக்கப்பட்டுள்ளது.

டாக்டர்.எஸ். சந்திரதாஸ், மருத்துவ அலுவலர் சுகாதாரத்துறை, மண்டலம்–9 அவர்கள் 1990–ம் வருடம் முதுநிலை கல்வி எம்.எஸ்., தேர்வு தேர்ச்சி பெற்று பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

16.11.2012 நாளிட்ட பொதுத்துறை குறிப்பின்படி டாக்டர்.எஸ். சந்திரதாஸ், மருத்துவ அலுவலர், மண்டலம்–9 அவர்களின் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று விழிப்பு அலுவலரின் சான்று பெறப்பட்டுள்ளது.

07.05.2012 நாளிட்ட இயக்குநர், தொற்று நோய் மருத்துவமனை அவர்களின் 07.05.2012 நாளிட்ட குறிப்பில், தனியர் 20.06.1984 முதல் 24.03.1992 வரை தொற்று நோய் மருத்துவமனையில் பணிபுரிந்தார். தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பணம் நிலுவை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உதவி ஆணையர், மண்டலம்–6 அவர்களின் 17.01.2012 நாளிட்ட குறிப்பில் தனியர் மண்டலம்–6ல் பணிபுரிந்த காலமான 24.03.1992 முதல் 13.08.2007 வரை தனியர் மீது தணிக்கை தடை ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பணம் நிலுவை ஏதும் நிலுவை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்–10 அவர்களின் 10.05.2012 நாளிட்ட குறிப்பில் டாக்டர்.எஸ்.சந்திரதாஸ் அவர்கள் மண்டலம்–9 (புதிய மண்டலம்–10)ல் மருத்துவ அலுவலராக 14.08.2007 முதல் 19.02.2012 வரை பணிபுரிந்த காலத்தில் தனியர் மீது தனிப்பட்ட முறையிலோ / நிதி இழப்பிற்கு பொறுப்பாக்கத் தகுந்த வகையிலோ அல்லது ஈடு செய்ய வேண்டிய முன்பண நிலுவையாகவோ எந்த ஒரு தணிக்கைத் தடையும் இல்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது.

19.11.2012 நாளிட்ட மண்டல அலுவலர், மண்டலம்–9 அவர்களின் குறிப்பின்படி டாக்டர்.எஸ். சந்திரதாஸ் மருத்துவ அலுவலர் அவர்கள் 19.02.2012 முதல் இன்றைய தேதி வரை மண்டலம்–9ல் மருத்துவ அலுவலராக பணிபுரிந்த காலத்திற்குண்டான தணிக்கை அறிக்கை புத்தகங்கள் தணிக்கை ஆய்வாளரின் ஆய்வில் உள்ளது. தணிக்கை அறிக்கை புத்தகம் வெளியிட்ட பின்னர் இக்காலத்திற்குண்டான தணிக்கை தடை விபரங்கள் அளிக்க இயலும் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், தனியர் மீது எந்தவிதமான முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் ஏதும் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அரசாணை எண்.845/நிதி(அ)(ஓ) நாள்.19.10.1935 மற்றும் பிரிவு 918(P) தமிழ் நாடு ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதிய பணிப்பயன் தொகைகள் தவறானது என்று பின்னர் தெரியவரின் அத்தொகை முழுவதையும் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி விடுகிறேன் என்ற உறுதிமொழியும் ஓய்வூதிய படிவத்தில் தனியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை மண்டலம்–9ல் பணிபுரியும் டாக்டர்.எஸ். சந்திரதாஸ், மருத்துவ அலுவலர் அவர்கள் மீது நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது மற்றும் நீண்ட கால முன்பணம் நிலுவைகள் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரை பொறுப்பாக்கி அவரின் ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு டாக்டர்.எஸ். சந்திரதாஸ், மருத்துவ அலுவலர், சுகாதாரத்துறை மண்டலம்–9 அவர்களை 31.12.2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வில் செல்ல நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது .”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பொ.து.ந.க.எண்.ஈ2/28480/2010**
**ஆணையாளர் அவர்களின் 12.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.525/2012 **பொருள் எண்.30**

**பதவி மாற்றம்**

சென்னை மாநகராட்சியில் மன்றச்செயலாளராக பணிபுரிந்த திருமதி.பி. ரீட்டா, அவர்கள் **31.08.2010** அன்று பணி ஒய்வு பெற்றதை தொடர்ந்து மன்றச் செயலாளர் பதவியை நிரப்புவதற்கான தெரிவுப் பட்டியலுக்கு **(1)** திரு.பி.தயாளன், தேர்வு நிலை கால்நடை மருத்துவர் மற்றும் **(2)** திரு.பி.இராஜசேகர், கூடுதல் சட்ட அலுவலர் ஆகிய இருவர்களின் பெயர்கள் மட்டும் பரிசீலனை செய்யப்பட்டு, அதில் ஏற்கனவே திரு.பி.தயாளன், **31.01.2013**ல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல இருப்பதால், அவர் விருப்பமின்மை தெரிவித்ததாலும், திரு.பி.இராஜசேகர், கூடுதல் சட்ட அலுவலர் அவர்கள் ஏற்கனவே **2005**ஆம் ஆண்டில் மன்றச் செயலாளர் பொறுப்பு வகித்ததாலும், தற்பொழுது **01.09.2010** தேதியிலிருந்து எவ்வித கூடுதல் ஊதியமோ, பொறுப்பு ஊதியமோ பெறாமல் மன்றச் செயலாளர் பதவியில் பொறுப்பு அலுவலராக பணிபுரிந்து வருவதாலும், இவருடைய தகுதி மற்றும் அனுபவத்தை கருத்தில் கொண்டு விதிகளில் உரிய திருத்தம் செய்து மன்றச் செயலாளர் பதவியில் நியமனம் செய்ய ஆணை வழங்கும்படி அரசினை கோர மன்றத் தீர்மானம் எண்.**360/2011**, நாள்.**22.12.2011**ன் மூலமாக மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அத்தீர்மானத்தின் அடிப்படையில் மன்றச் செயலாளர் பதவியில் நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்குமாறு கோரி **10.06.2011** மற்றும் **28.12.2011** நாளிட்ட கடிதங்கள் மூலமாக அரசிற்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக அரசாணை(டி) எண்.**273**, ந.நி.ம.கு.வ.(மாந**3**)துறை, நாள்.**31.10.2012**ல் சென்னை மாநகராட்சி அலுவலர்கள் பணி விதிகள் **1975** விதி–**35**ன்படி, சென்னை மாநகராட்சி பொதுப் பணி விதிகள் **1970** விதி–**3**ஐ தளர்வு செய்து திரு.பி.இராஜசேகர், கூடுதல் சட்ட அலுவலர் அவர்களை மன்றச் செயலாளராக நியமனம் செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசு பிறப்பித்த ஆணையின்படி திரு.பி.இராஜசேகர், கூடுதல் சட்ட அலுவலர் அவர்களை அவர் பெற்று வரும் அதே ஊதிய நிலையில், மன்றத்துறையில் ரூ.**15600–39100** + தர ஊதியம் **5400** என்ற ஊதிய விகிதத்தில் மன்றச் செயலாளர் பதவியில் நியமனம் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது .’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.து.நக.எண்.சி2/6969/2011.**

**ஆணையாளர் அவர்களின் 24.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.526/2012 **பொருள் எண்.31**

**மருந்தாளுநர் ஒருவழி பணியிட மாறுதல் அனுமதி**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, பழைய மண்டலம்–1, கோட்டம்–10, எழில் நகர் மருந்தகத்தில் மருந்தாளுநராக பணிபுரிந்து வரும் திருமதி. தி. வெற்றிச்செல்வி, என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக திருநெல்வேலி மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் வேண்டி முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு மனு சமர்ப்பிக்கப்பட்டு, இம்மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுத்து மனுதாரருக்கு நேரடியாக தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சியர் சென்னை–1 அவர்களிடமிருந்து கடிதம் பெறப்பட்டது. இக்கடிதத்தின் மீது சென்னை மாநகராட்சி, முதன்மைச்செயலர் (ம) ஆணையர் அவர்களின் **26.12.2011** நாளிட்ட குறிப்பில் பரிந்துரை செய்துள்ளார்கள்.

திருநெல்வேலி மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் கோரும் தனியாரின் கோரிக்கை குறித்து நடவடிக்கை மேற்கொள்ள திருநெல்வேலி மாநகராட்சியில் மருந்தாளுநர் காலிப்பணியிடம் உள்ளதா என்றும் அவ்வாறு இருக்கும் பட்சத்தில் திருநெல்வேலி மாநகராட்சி தனியரை ஒரு வழி பணியிட மாறுதல் மூலம் ஈர்த்துக்கொள்ளும் பட்சத்தில் திருநெல்வேலி மாநகராட்சியின் மன்றத்தின் அனுமதி பெற்று சென்னை மாநகராட்சிக்கு அனுப்புமாறு **18.01.2012** நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனைத்தொடர்ந்து **12.04.2012** நாளிட்ட ஆணையர், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் கடிதத்தில் திருநெல்வேலி மாநகராட்சியில் மருந்தாளுநருக்கான **8** காலிப்பணியிடங்கள் இருப்பதாகவும், அதனால் சென்னை மாநகராட்சியிலிருந்து மருந்தாளுநர் ஒருவரை ஈர்த்துக்கொள்வது குறித்து திருநெல்வேலி மாநகராட்சி தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தனியரை ஈர்த்துக்கொள்ள இசைவு அளிக்கப்பட்டுள்ளது. (திருநெல்வேலி மாநகராட்சியின் மன்றத் தீர்மான எண்.**188/2012**, நாள்.**30.03.2012**)

மேலும், திருமதி. தி. வெற்றிச்செல்வி, மருந்தாளுநர் அவர்கள் மண்டலம்–4ல் **17.11.2009**ல் மருந்தாளுநராக பணியமர்வு பெற்று பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு மருந்தாளுநர் பதவியில் பணி வரன்முறை செய்தும், தகுதி காண் பருவம் முடித்தவராகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கை, தணிக்கைத்தடை, குற்றவியல் வழக்கு ஏதும் நிலுவையில் இல்லை நீண்ட நாள் முன்பணம் நிலுவைத்தொகை ஏதும் நிலுவையில் இல்லை என்றும் மண்டல சுகாதார அலுவலர்–4 அவர்களால் **17.08.2012** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. **08.05.2012** நாளிட்ட சிறப்பு அலுவலர் கடிதத்தில் தனியர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்று சான்று கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் இல்லை என விழிப்பு அலுவலரால் **02.05.2012** நாளிட்ட குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**13.07.1996** நாளிட்ட அரசு கடிதம் பத்தி – 4ல் தெரிவித்துள்ளபடி ஒரு மாநகராட்சியிலிருந்து மற்றொரு மாநகராட்சிக்கு மாற விரும்பினால் இரண்டு மாநகராட்சிகளும் தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் தனியரை எடுத்துக் கொள்ளும் மாநகராட்சி இதற்கான செயல் குறிப்புடன் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திருநெல்வேலி மாநகராட்சியின் மன்றத் தீர்மானத்தின்படி திருமதி. தி. வெற்றிச்செல்வி, மருந்தாளுநர் மண்டலம்–4 சென்னை மாநகராட்சி என்பவரை ஒரு வழி பணியிட மாறுதல் மூலம் திருநெல்வேலி மாநகராட்சிக்கு ஈர்த்துக்கொள்ள இசைவு அளித்துள்ளதின் அடிப்படையில் தனியரை சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத்துறையில் இருந்து ஒரு வழி பணியிட மாறுதல் மூலம் திருநெல்வேலி மாநகராட்சிக்கு பணியிட மாறுதல் செய்ய நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்பட்டது. **18.10.2012** நாளிட்ட நியமனக்குழு தீர்மான எண்.**276** நாள்.**18.10.2012**ல் இப்பொருள் குறித்து கூர்ந்தாய்வு செய்து பின்னர் முடிவெடுக்கலாம் என தீர்மானித்து இதனை நியமனக்கழுவால் ஒத்திவைக்கப்பட்டது.

மேற்கண்ட பொருள் குறித்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி மீண்டும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது .”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>மா.கு.ந.(ம).ம.கு.ந.எண்.எப்5/ 2111 /2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 21.10.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.527/2012 **பொருள் எண்.32**

**<u>சென்னை மாநகராட்சி ஒரு வழி பணியிட மாறுதல் அனுமதி</u>**

மதுரை மாநகராட்சியில் நகர சுகாதார செவிலியராக பணியாற்றி வரும் திருமதி.ஜி.செல்வி அவர்கள், தனது கணவர் மற்றும் குழந்தைகள் சென்னையில் வசித்து வருவதாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தனக்கு சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதல் கோரியதின் பேரில் மதுரை மாநகராட்சி மாமன்ற தீர்மானத்தில் குறிப்பு ஒப்புக்கொள்ளப்பட்டு மாமன்ற தீர்மான எண்.191/30.05.2012ன்படி நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் நகர சுகாதார செவிலியர் பதவியில் உள்ள 44 காலிப்பணியிடத்தில் மதுரை மாநகராட்சியிலிருந்து ஒருவழி பணியிட மாறுதல் கோரும் திருமதி.ஜி.செல்வி, நகர சுகாதார செவிலியர் அவர்களை கொண்டு நிரப்பலாம்.

மாநகராட்சியில் பணி செய்து வரும் பணியாளர்களை மற்றொரு மாநகராட்சிக்கு மாறுதல் செய்வதற்கான உத்தரவு அரசிடமிருந்து பெறப்பட வேண்டும். இதற்கான அறிவுரைகள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கடித எண்.27274/மா.ந3/96–1, நாள்.08.07.1996ல் தெரிவிக்கப்ட்டுள்ளது.

**<u>பணிமாறுதலுக்குண்டான நிபந்தனைகள் பின்வருமாறு.</u>**

1. இப்பணியாளர் மாறுதலுக்கு பிறகு சென்னை மாநகராட்சியில் தனது பதவிக்கான பணி மூப்பு பட்டியலில் கடைசியில் இடம் பெறுவார்
2. பணி செய்துவரும் மாநகராட்சியில் கடைசியாக பெற்று வந்த ஊதியத்துடன் நடைமுறையில் அவ்வப்போது வழங்கப்படும் படிகளையும் பெற அனுமதிக்கப்படுவார்.
3. பணியாளர் தனது சம்பளத்துடன் சென்னை மாநகராட்சி பணியாளர்களின் சம்பளத்தை ஒப்பிட்டு ஊதிய முரண்பாடு கோர இயலாது.
4. இப்பணியாளரின் பொது வைப்பு நிதி, குடும்ப நல சிறப்பு வைப்பு நிதி மற்றும் கூட்டு ஆயுள் காப்பீட்டு திட்டம் போன்றவைகள் முடிக்கப்பட்டு சென்னை மாநகராட்சி கணக்கிற்கு மாற்றப்பட வேண்டும்.
5. பணியாளர் பணி செய்து வரும் மாநகராட்சியில் பணிபுரிந்த நாட்களுக்கான ஒய்வூதியம் மற்றும் விடுப்பு கால சந்தா தொகை ஆகியவை கணக்கிட்டு சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட வேண்டும்.
6. பணியாளர்கள் தனது வேண்டுகோளின் அடிப்படையில் மாறுதல் கோருவதால் பயணப்படி மற்றும் பணியில் சேருவதற்கான பணியேற்பிடைக் காலம் ஏதும் வழங்கப்பட மாட்டாது.

மேற்தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுடன் திருமதி.ஜி.செல்வி, நகர சுகாதார செவிலியர் அவர்களை, மதுரை மாநகராட்சியிலிருந்து சென்னை மாநகராட்சிக்கு ஒருவழி பணியிட மாறுதலில் வர அனுமதிக்க, அரசின் ஒப்புதல் பெறுவதற்கு முன்மொழிவுகள் அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது .”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3 / 30984/ 1997</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 16.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.528/2012 **பொருள் எண்.33**

**<u>பணிநீட்டிப்பு</u>**

சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட **1896** பணியிடங்களுக்கு குறிப்பில் கண்டுள்ளவாறு அரசாணை (நிலை) எண்.**438** ந,நி.ம.கு.வ.து(மா.ந.3), நாள் **04.11.2011** ன்படி, பின்வருமாறு பின்னேற்பும், தொடர் நீட்டிப்பும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

(அ) குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **73** தற்காலிக பதவிகளை **01.10.1998** முதல் இப்பதவிகளை அரசின் அனுமதியின்றி தக்க வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பு மற்றும் **31.03.2012** வரையில் தொடர் நீட்டிப்பு.

(ஆ) குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள **1710** தற்காலிக பணியிடங்களுக்கு **31.03.2012** வரையில் தொடர் நீட்டிப்பு, **01.10.2006** முதல் அரசின் அனுமதியின்றி தக்க வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பு, மேலும் **30.09.2006** வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட வருவாய் துறையைச் சார்ந்த **29** பணியிடங்களுக்கு **01.10.2006** முதல் **31.12.2007** வரையில் தக்க வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பு.

(இ) சென்னை மாநகராட்சி வருவாய் துறையில் இணைப்பு பட்டியல் – **4** ல் குறிப்பிடப்பட்டுள்ள **108** தற்காலிக பணியிடங்களுக்கு **31.03.2012** வரையில் தொடர் நீட்டிப்பு மற்றும் **01.01.2010** முதல் அரசின் அனுமதியின்றி தக்க வைத்துக் கொண்டமைக்கு பின்னேற்பு.

(ஈ) சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையில் இணைப்பு பட்டியல் – **5** ல் குறிப்பிடப்பட்டுள்ள **5** தற்காலிக பணியிடங்களுக்கு **31.03.2012** வரையில் தொடர் நீட்டிப்பு மற்றும் **01.04.2008** முதல் அரசின் அனுமதியின்றி தக்க வைத்துக்கொண்டமைக்கு பின்னேற்பும் வழங்கி நிதித்துறையின் ஒப்புதலுடன் அரசு ஆணையிட்டுள்ளது.

இந்நிலையில் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட வட்டார அலுவலகங்கள், மண்டலங்கள் மற்றும் வார்டுகளுக்கு, அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் எண்ணிக்கை மற்றும் பதவி தேவை குறித்து பதவி வாரியாக பட்டியல் தயார் செய்யப்பட்டு அரசுக்கு விரிவான செயற்குறிப்பு அனுப்பப்பட்டதில் **14.10.2012** நாளிட்ட அரசாணையில் சென்னை மாநகராட்சிக்கு கூடுதலாக **784** பணியிடங்களுக்கு அனுமதி மற்றும் **969** பணியிடங்களுக்கு ஒப்புவிப்பு ஆணையும் அரசு வழங்கப்பட்டுள்ளது.

அரசு கூடுதலாக வழங்கிய **784** பணியிடங்கள் மற்றும் **969** பணியிடங்களை ஒப்புவிப்பதற்கு ஆணை வழங்கப்பட்ட நிலையில் சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளிலும் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்ட **1896** பணியிடங்களில் நடப்பு கோப்பு பக்க எண்.**1623** முதல் **1630** வரை கலம் **6**ல் குறிப்பிடப்பட்டுள்ள **1150** தற்காலிக பணியிடங்கள் தற்போதைய நிலையில் அவசியமில்லாததாக கருதப்படுவதால் மீதமுள்ள **746** தற்காலிக பணியிடங்களுக்கு மட்டும் தொடர் நீட்டிப்பு ஆணை வேண்டி **08.11.2012** நாளிட்ட கடிதத்தின் மூலம் அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. அதற்கான விவரங்கள் அடங்கிய பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சென்னை மாநகராட்சியில் பணிகள் தொய்வின்றி மேற்கொள்வதற்கு அவசியமாகயிருப்பதால் **1896** தற்காலிக பணியிடங்களுக்கான காலத்தினை **01.04.2012** முதல் **30.11.2012** வரை நீட்டிக்கவும், **746** தற்காலிக பணியிடங்களுக்கு மட்டும் **(1896–1150 = 746)** **01.12.2012** முதல் **31.03.2013** வரை தொடர் நீட்டிப்பு ஆணை வேண்டி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு ஆணை வேண்டியும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது .”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்7/2431/2010**
**ஆணையாளர் அவர்களின் 22.10.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.529/2012 **பொருள் எண்.34**

**திறம்பட பணியாற்றிய ஓட்டுநர்களுக்கு பரிசு வழங்க மன்றத்தின் அனுமதி**

**10.05.2012** நாளிட்ட மன்ற தீர்மானத்தின்படி ரூ. **500/–** சிறுசேமிப்பு பத்திரம் சிறப்பு பரிசு பெற தகுதியுள்ள ஓட்டுநர்களுக்கு அந்தந்தத் துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் தலைமையில் **10** வருடங்கள் பணிநிறைவு செய்த ஓட்டுநர்களுக்கு வயது முதிர்வு ஓய்வு பெறும் மாதத்திலேயே வழங்கவும், **20** வருடங்கள் பணி நிறைவு செய்து ஓய்வு பெறும், தகுதியுள்ள ஓட்டுநர்களுக்கு **4** கிராம் தங்கக் காசு சிறப்பு பரிசாக வயது முதிர்வு ஒய்வு பெறும் மாதத்திலேயே வழங்கவும் ஆணை பெறப்பட்டது.

**22.08.2012** நாளிட்ட சென்னை மாநகராட்சி ஊதிய ஒட்டுநர்கள் சங்க பொது செயலாளர் அவர்களின் கடிதத்தின் கடந்த **10.05.2012** நடை பெற்ற மாமன்ற கூட்டத்தில் ரூ. **500/–** சிறுசேமிப்பு பத்திரம் சிறப்பு பரிசாக பெற தகுதியுள்ள ஓட்டுநர்களுக்கு அந்தந்த துறை தலைவர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் தலைமையில் **10** வருடங்கள் பணிநிறைவு செய்து ஒய்வு பெறும் மாதத்திலேயே வழங்கவும், **20** வருடங்கள் பணி நிறைவு செய்து ஓய்வு பெறும் தகுதியுள்ள ஓட்டுநர்களுக்கு **4** கிராம் தங்கக் காசு சிறப்பு பரிசாக வயது முதிர்வு ஒய்வு பெறும் மாதத்திலேயே வழங்கவும் மன்ற கூட்டத்தில் தீர்மான எண். **156/2012** –ன்படி ஆணை பெறப்பட்டது . இதனை ஒய்வு பெறும் மாதத்தில் வழங்க என்ற வார்த்தை நீக்கிவிட்டு **10** ஆண்டுகள் மற்றும் **20** ஆண்டுகள் பணி நிறைவு செய்த நாளில் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நிகழ்வில், ஏற்கனவே பெறப்பட்ட மன்றத் தீர்மான எண்.**156/2012** நாள்.**10.5.2012** ன்படி விபத்தில்லாமல் பணி செய்யும் ஓட்டுநர்களுக்கு **10** ஆண்டுகள் மற்றும் **20** ஆண்டுகள் பணிநிறைவு செய்த ஓட்டுநர்களுக்கு அவர்கள் ஓய்வு பெறும் மாதத்தில் பரிசுகள் (ரூ.**500/–**க்கான சிறுசேமிப்பு பத்திரம் / **4** கிராம் தங்கக்காசு) மன்றத் தீர்மான எண். **156/2012** நாள்.**10.05.2012** ல் தீர்மானம் பெறப்பட்டது எனவும், ஆனால் அரசாணையில் **10** ஆண்டுகள் மற்றும் **20** ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளதால், அதனடிப்படையில், மன்றத் தீர்மானத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அடிப்படையில் **10** ஆண்டுகள் சிறப்பாக பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு (ரூ.**500/–** சிறுசேமிப்பு பத்திரம்) **10** ஆண்டுகள் பணி நிறைவு செய்தவுடன் பரிசு வழங்கவும் மற்றும் **20** ஆண்டுகள் சிறப்பாக பணிபுரிந்த ஓட்டுநர்களுக்கு (**4** கிராம் தங்கக் காசு) **20** ஆண்டுகள் பணி நிறைவு செய்தவுடன் பரிசுகள் வழங்கலாம் என்று மன்றத்தீர்மானம் பெற்றிருக்க வேண்டும். ஆனால், பெறப்பட்ட மன்ற தீர்மானத்தில் தவறுதலாக இடம்பெற்ற ஓய்வு பெறும் மாதத்தில் என்ற வார்த்தையை நீக்கிவிட்டு திருத்தம் செய்யும் பொருட்டு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**மா.கு.ந(ம) ம.கு.ந.க.எண் எப் 22/ 1301 /2011**
**ஆணையர் அவர்களின் 12.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.530/2012 **பொருள் எண்.35**

**சென்னை மாநகராட்சி – மாவட்ட குடும்ப நலத்துறை– 2012– 13 ஆண்டுக்கான தமிழக அரசின் நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கையின்படி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சி பகுதியில் 16 எண்ணிக்கை தீவிர சிசு கண்காணிப்பு பிரிவுகள் அமைப்பதற்கு வெளியிடப்பட்டுள்ள அரசாணையினை செயல்படுத்த மன்றத்தின் அனுமதி.**

தமிழக அரசின் , நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி , விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பதினாறு **(16)** எண்ணிக்கையில் **24** மணி நேர அவசர பேறுகால கவனிப்பு மருத்துவமனைகள் ஒவ்வொன்றிலும் ஒரு தீவிர சிசு கண்காணிப்பு பிரிவு வீதம் மொத்தம் **16** தீவிர சிசு கண்காணிப்புபிரிவுகள் ரூபாய். **10** கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

சென்னை மாநகராட்சியின் மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் தற்சமயம் **10** எண்ணிக்கை அவசர பிரசவ பேறுகால சிகிச்சை மையங்கள் செயல்படுகின்றன. சென்னை மாநகரில் மொத்தமாக **2010–11** ஆண்டில் **82,000** பிரசவங்கள் நடைபெற்றன, இவற்றில் மாநகராட்சியின் மருத்துவமனைகளில் மட்டும் **18,000 (22%)** பிரசவங்கள் நடைபெற்றன. இவற்றில் சுமார் **6000** எண்ணிக்கை அறுவை சிகிச்சை மூலமான பிரசவங்களாகும். இந்த பிரசவங்களை தொடர்ந்து பிறக்கும் குழந்தைகளுக்கான பராமரிப்பில் சிசு காலத்தில் **(28** நாட்களுக்குள்ளான குழந்தைகள்**)** தான் உடனடியான, கவனமான பராமரிப்பு தேவைப்படுகிறது. இந்த சிசு காலத்தில் தான் குழந்தை இறப்பு விகிதம் அதிகமாக உள்ளது. எனவே, தீவிர சிசு கால பராமரிப்பு முக்கியமாகிறது.

குழந்தை பிறப்பில் சிசு காலத்தில் ஏற்படும் பிரச்சனைகளான , குறைமாத குழந்தைப் பிறப்பு **(35–37** வாரங்களில்**)** , குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகள் **(2 – 2.5** கிலோ**)** , பிறப்பின்போது ஏற்படும் மூச்சுத்திணறல், நோய் தொற்று (சிறிதளவுகளிலிருந்து மிதமான அளவு வரை) , உடல் கூற்றினால் ஏற்படும் மிதமான மற்றும் மிகத்தீவிரமான மஞ்சள் காமாலை, தாதுப்பொருள் குறைவினால் ஏற்படும் பாதிப்பு, மற்றும் தாய்ப்பால் மறுக்கும் சிசுவிற்கான பராமரிப்பு ஆகியவற்றிற்கான சிறப்பு கண்காணிப்பு மற்றும் சிகிச்சைகள் தேவைப்படுகின்றன.

இந்த வகையான தீவிர சிசுகால பராமரிப்பு மற்றும் சிறப்பு கவனிப்பினால் குழந்தை இறப்பு விகிதம் கணிசமாக குறையும். குழந்தைகளின் இறப்பு விகிதத்தினை குறைக்கும் நோக்குடன், தமிழக அரசின், நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் மானியக் கோரிக்கை அறிவிப்பின்படி, விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியின் பகுதிகளில் பதினாறு எண்ணிக்கை தீவிர சிசு கண்காணிப்பு பிரிவுகள் அமைப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்காக அரசாணை பெறும்பொருட்டு மன்றத் தீர்மான எண்.**136/2012**, நாள்.**07.05.2012**ன் ஒப்புதலுடன் செயற்குறிப்பு அரசுக்கு அனுப்பப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக முதன்மைச் செயலாளர், சுகாதாரத்துறை அவர்களுடன் **13.07.12** அன்று தலைமைச்செயலகத்தில் நடந்த ஆலோசனையின்படி, திருத்திய செயற்குறிப்பு அனுப்பி வைக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சியின் திருத்திய செயற்குறிப்பின் மீது தமிழக அரசின் கவனமான ஆய்வுக்குப்பின், அதனை ஏற்று கீழ்க்கண்டவாறு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.**1)** துறை, அரசாணை (ப) எண் – **265**, நாள்.**22.10.2012** வெளியிடப்பட்டுள்ளது.

1. சென்னை மாநகராட்சியின் மாவட்ட குடும்ப நலத்துறையின் கீழ் தற்சமயம் இயங்கி வரும் **10** அவசர பேறுகால மையங்களில் முதற்கட்டமாக கீழ்க்கண்ட **5** மண்டலங்களிலும் **(1.** சஞ்சீவராயன்பேட்டை, **2.**புளியந்தோப்பு , **3.** அயனாவரம், **4.** வடபழனி, **5.** சைதாப்பேட்டை) இரண்டாம் கட்டமாக கீழ்க்கண்ட ஐந்து மண்டலங்களிலும் **(1.**டாக்டர் இராதாகிருட்டிணன் நகர் **2.** செனாய் நகர், **3.** மீர்சாகிப்பேட்டை, **4.** பெருமாள்பேட்டை . **5.** சாந்தோம் மண்டலம் (அடையாறு மருத்துவமனை)) மூன்றாம் கட்டமாக புதியதாக விரிவாக்கப்பட்டுள்ள பகுதிகளான ஆறு மருத்துவமனைகளிலும் அதாவது திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், ஆலந்தூர் ஆகிய மண்டலங்களைச் சார்ந்த **4** மகப்பேறு மையங்கள், மேலும் வளசரவாக்கம் மற்றும் பெருங்குடி ஆகிய மண்டலங்களின் **2** மகப்பேறு மையங்களிலும் ஆக ஆறு சிசு சீராக்கும் பிரிவுகளும், மொத்தமாக **16** சிசு சீராக்கும் பிரிவுகள் New Born

Stabilisation Unit (NBSU) அமைப்பதற்கு சென்னை மாநகராட்சி ஆணையாளருக்கு அனுமதி அளிக்கப்படுவதாகவும்,

2. மேற்குறிப்பிட்ட 16 புதிய சிசு சீராக்கும் பிரிவுகள் அமைக்க அந்தந்த இடங்களில் தேவைப்படும் உட்கட்டமைப்பினை ஏற்படுத்த (ஒரு கண்காணிப்புப் பிரிவிற்கு ரூ 7 இலட்சங்கள் வீதம்) 16 பிரிவுகளுக்கு தோராயமாக திருத்திய மதிப்பீடாக தேவைப்படும் ரூ 1.12 கோடி அரசு மானியமாக ஒப்பளிப்பதாகவும்,
3. பிரிவிற்கு ரூ 5 இலட்சங்கள் வீதமும் மற்றும் மைய பிராணவாயு மையம் (அல்லது) (Compressed air) அமைக்க ஒரு பிரிவிற்கு ரூ 3 இலட்சங்கள் வீதமும் மொத்தமாக ரூ 8 இலட்சங்கள் வீதம்) 16 பிரிவுகளுக்கு தோராயமான செலவு மதிப்பீடாக தேவைப்படும் ரூ 1.28 கோடி அரசு மானியமாக ஒப்பளிப்பதாகவும்,
4. தேவையான பணியாளர்களை ( ஒவ்வொரு கண்காணிப்பு பிரிவிற்கும் தேவைப்படும் செவிலியர் 4 பேர் மற்றும் ஆயா 2 பேர்) நியமனம் செய்யவும் மற்றும் தொடர்ந்து ஆண்டுதோறும் பணியாளர்களுக்கான சம்பள செலவுத்தொகையினை (தோராயமாக தேவைப்படும் ரூ 1.12 கோடி) மாநகராட்சி நிதியிலிருந்து செலவு செய்ய சென்னை மாநகராட்சியின் ஆணையருக்கு அனுமதியும்,
5. சிசு சீராக்கும் பிரிவினை பராமரிக்க தேவையான பணியாளர்களுக்கு தமிழ்நாடு நலவாழ்வு அமைப்பு (Tamilnadu Health System Project) மூலமாக பயிற்சியினை அளிக்க சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வகையில் பதினாறு இடங்களில் தீவிர சிசு கண்காணிப்பு பிரிவுகள் அமைப்பதற்கு கீழ்க்கண்ட வகையில் செலவாகலாம்.

| எண் | விபரம் | செலவு தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மருத்துவமனை உட்கட்டமைப்பு வசதிகளுக்காக (ஒரு மருத்துவமனைக்கு ரூ 7 இலட்சங்கள் வீதம் 16 மருத்துவமனைகளுக்கு தோராயமான செலவு மதிப்பீடு) (அரசிடமிருந்து மானிய ஒப்பளிப்பு மூலமான செலவு) | 1.12 கோடிகள் |
| 2 | மருத்துவமனைகளுக்கான உபகரணங்கள் கொள்முதல் செய்ய ( ஒரு பிரிவிற்கு ரூ 5 இலட்சங்கள் வீதமும் மற்றும் மைய பிராணவாயு மையம் (அல்லது) ( Compressed air) அமைக்க ஒரு பிரிவிற்கு ரூ 3 இலட்சங்கள் வீதமும் மொத்தமாக ரூ 8 இலட்சங்கள் வீதம்) 16 பிரிவுகளுக்கு தோராயமான செலவு மதிப்பீடு(அரசிடமிருந்து மானிய ஒப்பளிப்பு மூலமான செலவு | 1.28 கோடிகள் |
| 3 | பணியாளர்கள் செலவினம் (ஒரு மருத்துவமனைக்கு ஆண்டொன்றிக்கு ரூ 7 இலட்சங்கள் வீதம் 16 மருத்துவமனைகளுக்கு ஆண்டொன்றிற்கான தோராய மான செலவு மதிப்பீடு)(மாநகராட்சி நிதியிலிருந்து செலவு ) | 1.12 கோடிகள் (ஆண்டொன்றிற்கு) |

எனவே இவவகையில் 16 மண்டலங்களிலும் மொத்தமாக உட்கட்டமைப்பு வசதிகள் செய்யவும் மற்றும் உபகரணங்கள் மற்றும் மைய பிராணவாயு அமைக்கவும் தேவைப்படும் செலவுத் தொகையாக ரூ 2.40 கோடிகளை, அரசின் மானிய ஒப்பளிப்பாக பெற்று செலவு செய்யவும், பணியாளர்களுக்கு ஆண்டொன்றிக்கு தோராயமான ஊதியச் செலவுத் தொகையான ரூ 1.12 கோடிகளை சென்னை மாநகராட்சியின் வரவு செலவு திட்ட நிதியிலிருந்து செலவு செய்து செயல்படுத்தவும் அரசாணை அனுமதி அளிக்கிறது.

சென்னை மாநகராட்சியின் புதியதாக விரிவாக்கப்பட்டுள்ள பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கப்பட வேண்டியுள்ளதால் காலத்தினை கருத்திற்கொண்டு, அரசின் மொத்த மானியத் தொகையான ரூ 2.40 கோடியினை ( ஒரு சிசு சீராக்கும் பிரிவிற்கு ரூ 15 இலட்சம் வீதம் 16 சீராக்கும் பிரிவுகளுக்கும் ரூ 2.40 கோடிகள்) மூன்று கட்டங்களாக வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. முதற்கட்ட 5 சிசு சீராக்கும் பிரிவுகளை (ஒவ்வொரு பிரிவிற்கும் ரூ 15 இலட்சங்கள் வீதம்) செயலாக்க 2012–13 ஆண்டில் ரூ 75 இலட்சங்களும், இரண்டாம் கட்டமாக 5 சிசு சீராக்கும் பிரிவுகளுக்காக 2012 –13 ஆண்டிலேயே ரூ 75 இலட்சங்களும் மேலும் மூன்றாம்கட்டமாக 6 பிரிவுகளுக்கு 2013–14 ஆண்டில் ரூ 90 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே , தமிழக அரசாணையின்படி சென்னை மாநகராட்சியின் மாவட்ட குடும்ப நலத்துறையில் முதற்கட்டமாக 5 மண்டலங்களிலும் (1.சஞ்சீவராயன்பேட்டை, 2. புளியந் தோப்பு, 3.அயனாவரம் ,4. வடபழனி, 5.சைதாப்பேட்டை) 5 எண்ணிக்கை சிசு சீராக்கும் பிரிவுகளை தொடங்கி செயல்படுத்தலாம்.

தமிழக அரசின் பரிந்துரையின்படியும் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறையின் மருத்துவர்கள் குழுவின் பரிந்துரையின்படியும், ஒவ்வொரு பிரிவிற்கும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை சிசு சீராக்கும் பிரிவிற்கான வகையிலே கட்டிட வடிவமைப்புகள் மற்றும் மாற்றங்களை ஏற்படுத்த மாநகராட்சியின் கட்டிடத்துறை மூலமாக ஏற்படுத்தலாம், மேலும் கீழ்க்கண்ட மருத்துவமனை சார்ந்த உபகரணங்களை முறைப்படி கொள்முதல் செய்து வழங்கலாம்.

| S.No | Name of Items | Req. per unit |
|---|---|---|
| 1 | Air Conditioner ( 2 ton) | 1 |
| 2 | Fan 2 Nos and necessary Electrical Fittings | |
| 3 | Open care system (Radiant Warmer) | 5 |
| 4 | Photo- theraphy unit | 2 |
| 5 | Pulse oximeter | 2 |
| 6 | Suction Apparatus Manual (Foot operated) | 3 |
| 7 | Neonatal transcutaneous bilirubinometer | 1 |
| 8 | Table Chair & Furniture items | 1 set |
| 9 | Other medical Instruments and equipments | 1 set |

மேற்கண்ட வகையில் தேவைப்படும் சாதனங்களில் குளிர்சாதனம் மற்றும் தேவைப்படும் மின்சார உபகரணங்களை மாநகராட்சியின் மின்சாரத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்கலாம். மற்ற ஏனைய மருத்துவமனை சார்ந்த சாதனங்கள் மற்றும் மேசை நாற்காலிகளையும் மாவட்ட குடும்பநலத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்கலாம்.

அரசாணையின்படி ஒவ்வொரு சிசு சீராக்கும் பிரிவிற்கும் செவிலியர் 4 பேர் மற்றும் ஆயா 2 பேர்கள் வீதம், 16 பிரிவிற்கும் மொத்தமாக 64 செவிலியர்களையும் மற்றும் 32 ஆயாக்களையும் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யலாம்.

எனவே,

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.1) துறை, அரசாணை (ப) எண் – 265, நாள்.22.10.2012ஐ சென்னை மாநகராட்சியின் மாவட்ட குடும்ப நலத் துறையில் முதற்கட்டமாக 5 மண்டலங்களிலும்(1.சஞ்சீவராயன்பேட்டை,2.புளியந்தோப்பு, 3.அயனாவரம், 4.வடபழனி, 5. சைதாப்பேட்டை) 5 எண்ணிக்கை சிசு சீராக்கும் பிரிவுகளை தொடங்கவும்,
2. இரண்டாம் கட்டமாக 5 மண்டலங்களிலும் (1.டாக்டர். இராதா கிருட்டிணன் நகர் 2. செனாய் நகர், 3. மீர்சாகிப்பேட்டை, 4. பெருமாள்பேட்டை . 5. சாந்தோம் மண்டலம் (அடையாறு மருத்துவமனை) 5 எண்ணிக்கை சிசு சீராக்கும் பிரிவுகளை தொடங்கவும்,
3. மூன்றாம் கட்டமாக புதியதாக விரிவாக்கப்பட்டுள்ள திருவொற்றியூர், மாதவரம், அம்பத்தூர், ஆலந்தூர் ஆகிய மண்டலங்களைச் சார்ந்த 4 மகப்பேறு மையங்கள், மேலும் வளசரவாக்கம் மற்றும் பெருங்குடி ஆகிய மண்டலங்களின் 2 மகப்பேறு மையங்களிலும், ஆக ஆறு சிசு சீராக்கும் பிரிவுகளை தொடங்கவும்,
4. தமிழக அரசு முதற்கட்டமாக 5 பிரிவுகளுக்காக (ஒவ்வொரு பிரிவிற்கும் ரூ 15 இலட்சம் வீதம்) ரூ 75 இலட்சங்களும் (2012 –13), இரண்டாம்கட்டமாக 5 பிரிவுகளுக்காக ரூ 75 இலட்சங்களும் (2012 –13) மேலும் மூன்றாம் கட்டமாக 6 சிசு பிரிவுகளுக்காக ரூ 90 இலட்சங்களையும் (2013 –14) ஒதுக்கீடு செய்து, மானிய ஒப்பளிப்பு செய்துள்ள தொகையினை அந்தந்த ஆண்டில் தமிழக அரசிடமிருந்து பெற்று மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துவதற்கும்
5. அனைத்து 16 சிசு சீராக்கும் பிரிவுகளிலும், தேவையான கட்டிட வடிவமைப்புகள் மற்றும் மாற்றங்களையும் மாநகராட்சியின் கட்டிடத்துறை மூலமாக அந்தந்த காலகட்டங்களில் செயல்படுத்தவும், மேலும் இதற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் ரூ 7 இலட்சம் வீதம் மொத்தம்

16 சிசு சீராக்கும் பிரிவிற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ 1.12 கோடியினை அந்தந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று உரிய கணக்கின்கீழ் செலவு செய்யவும்,

6. அனைத்து 16 சிசு சீராக்கும் பிரிவிற்கும் தேவையான குளிர்சாதனங்கள் மற்றும் தேவைப்படும் மின்சார உபகரணங்களை மாநகராடசியின் மின்சாரத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்கவும், தேவையான ஏனைய மருத்துவமனை சார்ந்த சாதனங்கள் மற்றும் மைய பிராணவாயு மையம் முதலியவற்றை மாவட்ட குடும்பநலத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்கவும், இவற்றிற்காக ஒவ்வொரு சிசு சீராக்கும் பிரிவிற்கும் ரூ 8 இலட்சம் வீதம் மொத்தமாக 16 சிசு சீராக்கும் பிரிவிற்கும் ரூ 1.28 கோடியினை அந்தந்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு பெற்று உரிய கணக்கின்கீழ் செலவு செய்யவும்,

7. ஒவ்வொரு சிசு சீராக்கும் பிரிவிற்கும் செவிலியர் 4 பேர் வீதம் 16 சிசு சீராக்கும் பிரிவிற்கும் மொத்தம் 64 செவிலியர்களையும் மற்றும் ஒவ்வொரு பிரிவிற்கும் ஆயா 2 பேர் வீதம் 16 சிசு பிரிவிற்கும் மொத்தமாக 32 ஆயாக்களையும் மூன்று கட்டங்களிலும் தேவைப்படும் காலங்களில் ஒப்பந்த அடிப்டையில் நியமனம் செய்யவும்,

8. சிசு சீராக்கும் பிரிவினை பராமரிக்க தேவையான பணியாளர்களுக்கு தமிழ்நாடு நலவாழ்வு அமைப்பு (Tamilnadu Health System Project) மூலமாக பயிற்சியினை வழங்க அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 8 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"15.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.47/2012, நாள்..15.11.2012ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) நிலைக்குழு (வ.வி.ம.நி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"21.11.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி) கூட்டத்தின் தீர்மான எண். 343 /2012 நாள் 21.11.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

" இதனை நியமனக்குழு பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ3 / 43511 / 2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 15.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.531/2012 **பொருள் எண்.36**

**<u>பணியமைப்பு</u>**

அரசாணை (நிலை) எண்.3087, பொது (சிறப்பு – அ) துறை, நாள் 27.09.2012 ன்படி டாக்டர். சி.என்.மகேஸ்வரன், இ.ஆ.ப., மாவட்ட ஆட்சியர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆக 15.10.2012 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

“ இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
பதிவிற்காகவும் , தகவலுக்காகவும் சமர்ப்பிக்கின்றது .”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

<u>பே.சா.து.ந.க.எண்.பி1/3650/2012</u>

<u>ஆணையர் அவர்களின் 27.11.2012 நாளிட்ட குறிப்பு</u>

தீர்மான எண்.532/2012 பொருள் எண்.37

<u>மண்டலம் 6, வார்டு எண் 64, 66, 68 மற்றும் 69ல் உள்ள பேருந்து தட சாலையான பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலையை அகலப்படுத்தும் பணிக்காக – தனியார் நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு அனுமதி.</u>

வார்டு எண்–68, 69, 66 மற்றும் 64 மண்டலம் –6ல் அமைந்துள்ள பேப்பர்மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலை, பெரம்பூர் நெடுஞ்சாலையையும், ஜவஉறர்லால் நேரு சாலையையும் இணைக்கும் முக்கியமான பேருந்து சாலையாகும். இச்சாலையில் ஜவஹர் நகர், பெரியார் நகர், குமரன் நகர், ராம்நகர், எஸ்.ஆர்.பி. காலனி மற்றும் திரு.வி.க.நகர் போன்ற முக்கிய குடியிருப்பு பகுதிகள் உள்ளடங்கி உள்ளது. இப்பகுதியில் பெருமளவில் மக்கள் தொகை உள்ளதால் இச்சாலைகள் பெருமளவில் உபயோகிக்கப்படுகின்றன. மேலும் இச்சாலை குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பெருமளவில் நெரிசலுக்கு உள்ளாகிறது.

பேப்பர்மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலை குறுகலாக இருப்பதனாலும் போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளதாலும் இச்சாலையில் மழைநீர் கால்வாய் தொடர்ச்சியாக அமைக்க இயலாத நிலை ஏற்பட்டு, இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் இச்சாலைகள் பருவமழையால் பாதிக்கப்பட்டு சாலை நிலைக்குலைந்து போக்குவரத்து இடையூறாக அமைகின்றது.

மேலும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் இரண்டாவது முழுமை திட்டத்தின் (Master Plan) படி பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலைகள் 18 மீ. என வரையறுக்கப்பட்டுள்ளது. எனவே, போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும்பொருட்டு இச்சாலைகளை 18 மீ. அளவிற்கு அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டு பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலைகளை பெரம்பூர் நெடுஞ்சாலை முதல் ஜவஹர்லால் நேரு நெடுஞ்சாலை வரை சாலையின் இருபுறமும் உள்ள தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி சாலை விரிவாக்கப் பணிக்கு உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவாக்கத்தின் மூலம் பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலைகளில் வாகனங்கள் நெரிசலின்றி செல்ல ஏதுவாக அமையும்.

இச்சாலைகளில் மொத்தம் 4015 மீட்டர் நீளத்திற்கு நில அளவு மேற்கொள்ளப்பட்டு சாலையின் இருபுறமும் சுமார் 2.20 மீட்டர் அகலத்திற்கு அகலப்படுத்த உத்தேசித்து மொத்தம் சுமார் 17700 சதுர மீட்டர் விஸ்திரணம் உள்ள நிலம் கையகப்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இதுகுறித்த வரைபடம் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வரையுறுத்தியுள்ள இரண்டாம் முழுமைத் திட்டத்தின் படி (Second Master Plan – D.R.No.9.2) சாலைகள் அகலப்படுத்த வேண்டி கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்களை, மாற்றத்தக்க வளர்ச்சி விதிமுறைகள் முறையில் (Transferable Development Rights) நடைமுறைப்படுத்தலாம் என்று உள்ளது.

இம்முறையில் சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் நிலங்களை மனை உரிமையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு அந்நிலத்திற்கு வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Transferable Development Rights Certificate) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மூலமாக வழங்கலாம். அவ்வாறு சான்றிதழை பெறும் மனை உரிமையாளர் அதனை வேறு நபருக்கு விற்கவோ அல்லது சம்மந்தப்பட்ட மனையிலேயே பயன்படுத்திக்கொள்ளலாம்.

எனவே,

1. பேப்பர் மில்ஸ் சாலை மற்றும் செம்பியம் ரெட்ஹில்ஸ் சாலையை 18மீட்டர். அகலத்திற்கு சாலை அமைக்க வேண்டி மனை உரிமையாளர்களிடமிருந்து நிலத்தினை பெறவும்,
2. சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர்களுக்கு சாலை விரிவாக்கத்திற்கு என்று பெறப்படும் நிலத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Transferable Development Rights Certificate) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு நேரிடையாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>பே.சா.து.ந.க.எண்.பி1/3663/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 27.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.533/2012 **பொருள் எண்.38**

**<u>மண்டலம் 8, வார்டு எண் 106 மற்றும் மண்டலம் 9, வார்டு எண் 109ல் உள்ள பேருந்து தட சாலையான நெல்சன் மாணிக்கம் சாலையை அகலப்படுத்தும் பணிக்காக – தனியார் நிலங்களை கையகப்படுத்துதல் மற்றும் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு நெல்சன் மாணிக்கம் சாலையை 18 மீட்டர் அகலத்திலிருந்து 24 மீட்டராக வரையறுக்க பரிந்துரை செய்யவும் – நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு அனுமதி.</u>**

வார்டு எண்–106, மண்டலம்–8 மற்றும் வார்டு எண்.109 மண்டலம்–9ல் அமைந்துள்ள நெல்சன் மாணிக்கம் சாலை, நுங்கம்பாக்கம் பகுதியையும் அண்ணா நகர் பகுதியையும் இணைக்கும் முக்கியமான பேருந்து சாலையாகும். இச்சாலையில் சூலைமேடு, மேத்தா நகர், கில் நகர், ரயில்வே காலனி போன்ற முக்கிய குடியிருப்பு பகுதிகள் மற்றும் வணிக வளாகங்கள் உள்ளடங்கி உள்ளது. இப்பகுதியில் பெருமளவில் மக்கள் தொகை உள்ளதாலும் இச்சாலை பல முக்கிய பிரதான சாலைகளை இணைப்பதாலும் இச்சாலை பெருமளவில் உபயோகிக்கப்படுகின்றது. மேலும் இச்சாலை குறுகலாக இருப்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பெருமளவில் நெரிசலுக்கு உள்ளாகிறது.

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த நெல்சன் மாணிக்கம் சாலைக்கும் அண்ணா நகருக்கும் இடையில் மேம்பாலம் அமைக்கும் பணி நெடுஞ்சாலைத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மேலும் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் இரண்டாவது முழுமை திட்டத்தின் (Second Master Plan)படி நெல்சன் மாணிக்கம் சாலை 18 மீட்டர் என வரையறுக்கப்பட்டுள்ளது. நெல்சன் மாணிக்கம் சாலையில் மிகுதியான பகுதிகளில் 18 மீட்டருக்கும் அதிகமாக அகலம் இருப்பினும் இச்சாலையில் முழு நேரத்திலும் நெரிசல் அதிகமாக உள்ளதால் இச்சாலையை 24 மீட்டர் அகலத்திற்கு அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவாக்கத்தின் மூலம் நெல்சன் மாணிக்கம் சாலையில் வாகனங்கள் நெரிசல் குறைந்து பொது மக்களுக்கு ஏதுவாக அமையும்.

இச்சாலையில் மொத்தம் 1526 மீட்டர் நீளத்திற்கு நில அளவு மேற்கொள்ளப்பட்டு சாலையின் இருபுறமும் சுமார் 2.00 மீட்டர் அகலத்திற்கு அகலப்படுத்த உத்தேசித்து மொத்தம் சுமார் 5200 சதுர மீட்டர் விஸ்திரணம் உள்ள நிலம் கையகப்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இதுகுறித்த வரைபடம் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வரையுறுத்தியுள்ள இரண்டாம் முழுமைத் திட்டத்தின் படி (Second Master Plan – D.R.No.9.2) சாலைகள் அகலப்படுத்த வேண்டி கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்களை, மாற்றத்தக்க வளர்ச்சி விதிமுறைகள் முறையில் (Transferable Development Rights) நடைமுறைப்படுத்தலாம் என்று உள்ளது.

இம்முறையில் சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் நிலங்களை மனை உரிமையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு அந்நிலத்திற்கு வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Transferable Development Rights Certificate) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மூலமாக வழங்கலாம். அவ்வாறு சான்றிதழை பெறும் மனை உரிமையாளர் அதனை வேறு நபருக்கு விற்கவோ அல்லது சம்மந்தப்பட்ட மனையிலேயே பயன்படுத்திக்கொள்ளலாம்.

எனவே,

1. நெல்சன் மாணிக்கம் சாலையை 18 மீட்டர் அகலத்திலிருந்து 24 மீட்டர் அகலம் என மாற்றி வரையருக்க சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு பரிந்துரை செய்யவும்,
2. நெல்சன் மாணிக்கம் சாலையை 24மீட்டர் அகலத்திற்கு சாலை அமைக்க வேண்டி மனை உரிமையாளர்களிடமிருந்து நிலத்தினை பெறவும்,
3. சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர்களுக்கு சாலை விரிவாக்கத்திற்கு என்று பெறப்படும் நிலத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Transferable Development Rights Certificate) வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு நேரிடையாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/4008/2012**
**ஆணையர் அவர்களின் 27.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.534/2012 **பொருள் எண்.39**

**மண்டலம் 10, வார்டு எண் 127 மற்றும் 128ல் உள்ள பேருந்து தட சாலையான காளியம்மன் கோயில் தெருவை அகலப்படுத்தும் பணிக்காக – தனியார் நிலங்களை கையகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு அனுமதி.**

வார்டு எண்–127 மற்றும் 128, மண்டலம் –10ல் அமைந்துள்ள காளியம்மன் கோயில் தெரு, என்.எஸ்.கே.சாலையையும் ஜவஹர்லால் நேரு சாலையையும் (உள்வட்ட சாலை) இணைக்கும் முக்கியமான பேருந்து தட சாலையாகும். இச்சாலையில் விருகம்பாக்கம், நடேசன் நகர், சின்மயா நகர் போன்ற முக்கிய குடியிருப்புகள் மற்றும் கோயம்பேடு மார்கெட், கோயம்பேடு புறநகர் பேருந்து நிலைய மேற்குப்புற நுழைவாயில் போன்ற முக்கிய பகுதிகள் உள்அடங்கி உள்ளன. இப்பகுதியில் பெருமளவில் மக்கள் தொகையுள்ளதாலும் முக்கிய பகுதிகளான கே.கே.நகர், வளசரவாக்கம் போரூர், வடபழனி போன்ற பகுதிகளை இணைப்பதாலும் இச்சாலை பெருமளவில் உபயோகப்படுத்தப்படுகின்றது. இதன் நீளம் சுமார் 3.10 கி.மீ ஆகும். இச்சாலை குறுகலாக இருப்பதால், போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வாகனங்கள் பெருமளவில் நெரிசலுக்கு உள்ளாகிறது. இதன் தற்போதைய அகலம் 5.90மீட்டர் முதல் 27.00 மீட்டர் வரை கொண்டது. மேலும் இச்சாலை குறுகலாக இருப்பதால் மழைநீர் கால்வாய் அமைக்க இயலாத நிலை ஏற்பட்டு இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் பருவ மழையினால் சாலை பாதிக்கப்பட்டு போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் இரண்டாவது முழுமை திட்டத்தின் (Second Master Plan) படி காளியம்மன் கோயில் தெரு ஜவஹர்லால்நேரு சாலை (உள்வட்ட சாலை) முதல் சென்னை பெருநகர் குடிநீர் (ம) கழிவுநீர் வாரியத்திற்கு சொந்தமான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தெற்கு எல்லை வரை (1140 மீட்டர் நீளத்திற்கு) 27 மீட்டர் அகலம் எனவும், பின்னர் அதன் தொடர்ச்சியாக என்.எஸ்.கே சாலை வரை (1950 மீட்டர் நீளத்திற்கு) 24 மீட்டர் அகலம் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

எனவே, போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் பொருட்டு மேற்கண்ட அளவிற்கு அகலப்படுத்த உத்தேசிக்கப்பட்டு இச்சாலையில் இருபுறமும் உள்ள தனியாருக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்தி சாலை விரிவாக்க பணிக்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விரிவாக்கத்தின் மூலம் காளியம்மன் கோயில் தெருவில் வாகனங்கள் நெரிசலின்றி செல்ல ஏதுவாக அமையும்.

இச்சாலையின் மொத்த 3090 மீட்டர் நீளத்திற்கு நில அளவு மேற்கொள்ளப்பட்டு சாலையின் இருபுறமும் ஜவஹர்லால்நேரு சாலை (உள்வட்ட சாலை) முதல் சென்னை பெருநகர் குடிநீர் (ம) கழிவுநீர் வாரியத்திற்கு சொந்தமான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தெற்கு எல்லை வரை (1140 மீட்டர் நீளத்திற்கு) 27 மீட்டர் அகலம் எனவும், பின்னர் அதன் தொடர்ச்சியாக என்.எஸ்.கே சாலை வரை (1950 மீட்டர் நீளத்திற்கு) 24 மீட்டர் அகல அளவிற்கு விரிவுபடுத்த உத்தேசித்து சுமார் 37600 சதுர மீட்டர் விஸ்திரணம் உள்ள நிலம் கையகப்படுத்த வேண்டிய நிலை உள்ளது. இதுகுறித்த வரைபடம் கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் வரையுறுத்தியுள்ள இரண்டாம் முழுமைத் திட்டத்தின் படி (Second Master Plan – D.R.No.9.2) சாலைகள் அகலப்படுத்த வேண்டி கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்களை, மாற்றத்தக்க வளர்ச்சி விதிமுறைகள் முறையில் (Transferable Development Rights) நடைமுறைப்படுத்தலாம் என்று உள்ளது.

இம்முறையில் சாலை விரிவாக்கத்திற்கு தேவைப்படும் நிலங்களை மனை உரிமையாளர்களிடம் இருந்து பெற்றுக்கொண்டு அந்நிலத்திற்கு வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Transferable Development Rights Certificate) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் மூலமாக வழங்கலாம். அவ்வாறு சான்றிதழை பெறும் மனை உரிமையாளர் அதனை வேறு நபருக்கு விற்கவோ அல்லது சம்மந்தப்பட்ட மனையிலேயே பயன்படுத்திக்கொள்ளலாம்.

எனவே,

1. காளியம்மன் கோயில் தெரு ஜவஹர்லால்நேரு சாலை (உள்வட்ட சாலை) முதல் சென்னை பெருநகர் குடிநீர் (ம) கழிவுநீர் வாரியத்திற்கு சொந்தமான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தெற்கு எல்லை வரை (1140 மீட்டர் நீளத்திற்கு) 27 மீட்டர் அகலம் எனவும், பின்னர் அதன் தொடர்ச்சியாக என்.எஸ்.கே சாலை வரை (1950 மீட்டர் நீளத்திற்கு) 24 மீட்டர் அகல அளவிற்கு சாலை விரிவுபடுத்த வேண்டி மனை உரிமையாளரிடம் நிலத்தினை பெறவும்,
2. சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர்களுக்கு சாலை விரிவாக்கத்திற்கு என்று பெறப்படும் நிலத்திற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் வளர்ச்சி உரிமை சான்றிதழ் (Transferable Development Rights Certificate) வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு இப்பணியின் அவசியம் மற்றும் அவசரத்தை கருத்தில் கொண்டு நேரிடையாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.5.ந.க.எண்.இ4/7421/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 21.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.535/2012 **பொருள் எண்.40**

**<u>தானப்பத்திரம்</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–5ல் தி சால்வேஷன் ஆர்மி, வார்டு – **58**, எண்.**15**, ரித்தர்டன் ரோடு, வேப்பேரி, சென்னை– 7, பள்ளிக் கட்டிடம் கட்ட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளனர். அவர் கட்டட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்தை ஒட்டிய சாலை ''சென்னை முழுமை வளர்ச்சித் திட்டம் II'' ன் மூலம் இச்சாலையை **12.10** மீட்டர் அகலத்திலிருந்து **24.00** மீட்டர் அகலமாக விரிவாக்கம் செய்யப்பட வேண்டும். இதில் மனையின் உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக **5.95** மீட்டர் அகலத்திற்கும் **29.25** மீட்டர் நீளத்திற்கான இடம் மற்றும் **3**மீ X **3** மீ Splay பகுதியினையும், தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும். இது சம்பந்தமாக கட்டட உரிமையாளர் அவர்கள் தனது மனையின் முன் பக்கத்தில் **5.95** மீ அகலத்திற்கு **29.25** நீளத்தற்கும் மற்றும் **3**மீ X **3** மீ Splay பகுதியினையும், **174.28** ச.மீ. பரப்பளவு நிலத்தினை தானமாக கொடுக்க இசைவு தெரிவித்துள்ளார். மேலும் அவர் வழங்கிய தான பத்திரத்தின் வரைவை வார்டு குழு, மண்டலம்–5ல் பரிந்துரைத்து (தீர்மான எண்.**43/2012**) **20.09.2012** அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

எனவே, மேற்கூறிய நிலத்தினை தானமாக பெற கீழ்கண்ட **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1) கட்டட உரிமையாளர் தி சால்வேஷன் ஆர்மி, அவர்களின் மூலம் இசைவு பெற்ற தான பத்திரம் மூலம் **174.28** ச.மீ. பரப்பளவு நிலத்தினை சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெறவும்,
2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் செலவீனம் ரூ.**1,10,000/–** கட்டட உரிமையாளரிடம் '' ஆணையர் சென்னை மாநகராட்சி'' என்ற பெயரில் காசோலையாக பெறவும்,
3) கட்டட உரிமையாளருக்கு தானமாக பெறப்படும் இடத்திற்கு '' வளர்ச்சி உரிமை சான்றிதழ்'' சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் மூலம் வழங்க பரிந்துரை செய்யவும்.

''ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் **14.11.2012** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**26/2012**–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.10.ந.க.எண்/9848/2012**
**ஆணையர் அவர்களின் 12.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.536/2012 **பொருள் எண்.41**

**மண்டலம்–10 – நகர நில அளவை எண் 4/3 (பகுதி) பிளாக் 63, மற்றும் நகர அளவை எண்.1/9 (பகுதி) பிளாக் 64, கோயம்பேடு கிராமத்தில் உள்ள 60 அடி அகலம் சாலையினை சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திடம் இருந்து எடுத்துக் கொண்டு பொது சாலையாக அறிவிப்பதற்கு அனுமதி.**

31.08.2010 நாளிட்ட கடிதத்தில் உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்கள் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு சொந்தமான நிலங்களுக்கு வழிபாதை உருவாக்க வேண்டி திருவாளர்கள் ஆர்.பி.என். தங்கவேலு மற்றும் பலர்களிடமிருந்து 670 ச.மீ நிலத்தினை பரிமாற்றம் (Exchange of Lands) செய்யப்பட்டது என்றும் அவ்வாறு பரிமாற்றம் செய்யும் பொழுது அந்நிலத்தினை பொது பயன்பாட்டிற்கு என்று அறிவிப்பதாக ஒத்துக் கொள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறு பொது பயன்பாட்டிற்கு இந்நிலத்தினை பயன்படுத்த வேண்டி, சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் கூட்டத்தில் இப்பொருள் சமர்ப்பிக்கப்பட்டு, தீர்மான எண். 237/2005–ன்படி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர் பழைய மண்டலம்– 5 அவர்களின் 06.10.2010 நாளிட்ட கடிதத்தில், இந்நிலம் சம்மந்தமான வரைபடத்தையும், இவ்விடத்தை ஆய்வு செய்து எல்லைகள் வரையுறுத்துவதற்கு சென்னை பெருநகர் வளர்ச்சி குழும அதிகாரிகளை அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

உறுப்பினர் – செயலர் – சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண். Lr.No.K1/6667/2010 நாள் – 12.09.2012 கடிதத்தில் இந்நிலத்திற்கு வரைபடத்தை இணைத்து உறுப்பினர் – செயலர் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்கள் அனுப்பியுள்ளார். மேலும் இந்நிலத்தினை சென்னை மாநகராட்சி எடுத்துக் கொண்டு பொது சாலையாக அறிவிக்க வேண்டி தெரிவித்துள்ளார்கள்.

உறுப்பினர் – செயலர் – சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்களின் கடித எண். பிசி1/8842/2010, நாள்–18.09.2012 கடிதத்தில் நகர நில அளவை எண்.4/5, 6 பிளாக் எண்.63 மற்றும் 1/13, பிளாக் எண்.64, கோயம்பேடு கிராமத்தில் அமைந்துள்ள மனையில் கல்யாண மண்டபம் கட்ட வேண்டி, திட்ட அனுமதியினை உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ளார். அவ்வாறு வழங்கிய ஒப்புதலில் இந்த மனைக்கு உட்பட்ட அணுகு சாலையை சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திடமிருந்து ஒப்பேற்பு செய்து "பொது சாலையாக" அறிவித்துப் பின்னர் மனுதாரருக்கு கட்டிட அனுமதி வழங்க வேண்டும் என்று நிபந்தனையோடு வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் – செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்கள் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு சொந்தமான நிலங்களுக்கு வழிபாதை உருவாக்க வேண்டி திருவாளர்கள் ஆர்.பி.என். தங்கவேலு மற்றும் பலர்களிடமிருந்து இந்நிலம் நகர நில அளவை எண்.4/3 (பகுதி) பிளாக் 63 மற்றும் நகர நில அளவை எண் 1/9 (பகுதி) பிளாக் 64 கோயம்பேடு கிராமத்தில் 18 மீட்டர் அகலத்திலும் 35.4 மீட்டர் நீளத்திலும் 670 சதுர மீட்டர் பரப்பளவும் கொண்டுள்ள நிலம் தற்போது எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லாமல் உள்ளது.

இந்த நிலத்தில் சாலை உருவாக்குவதற்கு தேவையான நிதியினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் இருந்து பெற்றுக் கொண்டு, இந்நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடமிருந்து ஒப்பேற்பு பெற்று, சாலைகளை உருவாக்கி பொது சாலையாக அறிவிக்கலாம் என்று கருதப்படுகிறது.

10வது வார்டு குழுவின் பரிந்துரையும் பெறப்பட்டுள்ளது. (தீர்மான எண். 750, நாள்– 31.10.2012)

எனவே,

1. நில அளவை எண் 4/3 (பகுதி) பிளாக் 63 மற்றும் நில அளவை எண் 1/9 (பகுதி) பிளாக் 68, கோயம்பேடு கிராமத்தில் உள்ள 670 சதுர மீட்டர் (18மீ x 35.4மீ) நிலத்தினை சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திடம் இருந்து ஒப்பேற்பு பெறவும்,
2. அவ்வாறு பெறப்படும் இடத்தினை சாலை மற்றும் அடிப்படை வசதிகளை செய்வதற்கு தேவைப்படும் தொகையான ரூபாய்.5,56,300/– சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினை வழங்குமாறு தெரிவிப்பதற்கும்,
3. இந்நிலத்தில் சாலைகள், தெரு விளக்கு, ஆகியவற்றை உருவாக்கிய பிறகு சென்னை நகர முனிசிபல் சட்டம், 1919 பிரிவு 219–ன் படி இச்சாலையை பொது சாலையாக அறிவிக்கவும்,
4. சென்னை பெருகர வளர்ச்சிக் குழுமத்திடம் இருந்து இந்நிலத்தை ஒப்பேற்பு மற்றும் தேவையான நிதியினை பெற்ற பிறகு, நகர நில அளவை எண்.4/5, 6 பிளாக் எண்.63, 1/13, பிளாக் எண்.64 கோயம்பேடு கிராமத்தில் கல்யாண மண்டபம் கட்டுவதற்கு கட்டிட அனுமதி வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டி நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு(நகரமைப்பு) கூட்டம் 14.11.2012 அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு 28.11.2012 அன்று தீர்மான எண்.27/2012–ன்படி நிலைக்குழு (நகரமைப்பு) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**சு.து.ந.க.எண். பி1 /6228 / 2012**
**ஆணையர் அவர்களின்28.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.537/2012 **பொருள் எண்.42**

**சென்னை மாநகராட்சி பொது சுகாதாரத் துறை பல்வேறு சுகாதாரப் பகுப்பாய்வு க் கூடங்களுக்கு பணியாளர் நியமனம் (வெளி நிறுவனங்களிடமிருந்து ) ஒப்பம் மூலம் இரண்டு ஆண்டிற்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர் மித்ரா பவுண்டேஷன் அவர்களுக்கு 1.2.2011 முதல் 31.1.12 வரை மற்றும் 1.2.2012 முதல் 31.1.2013 வரை (இரண்டு ஆண்டுகளுக்கு) பணி ஆணை வழங்கப்பட்டது 31.1.2013 உடன் இரண்டு ஆண்டு நிறைவு பெறுகிறது. மேலும் இப்பணி தொடர்ந்து நடைபெறுவதற்கு ஒப்பம் கோர மன்றத்தின் அனுமதி.**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத் துறையில் பல்வேறு நிலையங்களில் **(1)** பரிசோதனை மையம் **(2).** கண் சிகிச்சை மையம் **(3).** மது விலக்கு மையங்கள் (De-Addiction Center) **(4).** டயாலிசிஸ் மையங்கள் **(5)** முதியோர் இல்லம், வெளி நிறுவனங்களிடமிருந்து தேவையான பணியாளர்களை இரண்டு ஆண்டிற்கு ஒப்பம் வரவேற்கப்பட்டு நியமனம் செய்யப்பட்டது.

**01.02.2011** முதல் **31.01.12** வரை மற்றும் **01.2.2012** முதல் **31.1.2013** வரை (இரண்டு ஆண்டு) ஆணையர் அவர்களின் ஆணை பெற்று குறைந்த விலைப்புள்ளி அளித்த திருவாளர் மித்ரா பவுண்டேஷன் அவர்களுக்கு பணியாணை வழங்கப்பட்டது. இதற்காக மன்றத்தின் தீர்மானம் **31.05.2011** மற்றும் **21.01.2012**ல் பெறப்பட்டது.

இப் பணியாணை **31.1.2013**வுடன் முடிவு பெறுகிறது.

இந்நிலையில் சென்னை வாழ்மக்களின் நலன் கருதி மேற்குறிப்பிட்டுள்ள **5** மையங்களில் பணி தொய்வின்றி நடைபெற வெளி நிறுவனங்களிடமிருந்து பணியாளர்களை நியமனம் செய்ய வேண்டியுள்ளது. கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர்கள் நியமனம் ஒப்பம் முறையில் செய்ய வேண்டியுள்ளது.

| Sl. No. | Name of the facility | Required Post | No.of Man power Req. | Cost / Month |
|---|---|---|---|---|
| 1. | 6 Diagnostic Centres | Receptionist | 6 | 45,000/- |
| | | Sonologist | 6 | 1, 12, 500 |
| | | Lab. Technician | 12 | 1,05,000 |
| | | X-Ray Technician | 5 | 35,000 |
| | | ECG Technician | 6 | 52,000 |
| | | Clerk Cum Assistant | 6 | 45,000 |
| | | Security Cum Gardner( 3 Shifts) | 18 | 1,12,500 |
| 2. | Eye Clinic | Optometrician | 2 | 20000 |

| Sl. No. | Name of the facility | Required Post | No.of Man power Req. | Cost / Month |
|---|---|---|---|---|
| 3. | De-Addiction Center | Councellor | 2 | 20000 |
| | | Male Nursing Assistant | 2 | 20000 |
| | | Assistant Cum Clerk | 1 | 7500 |
| | | Lab. Technician | 1 | 9000 |
| 4. | Dialysis Center | Dialysis Technician | 4 | 40,000 |
| 5. | Home for Aged | Physio Therapists | 2 | 25,000 |
| | | Yoga Teachers | 2 | 20,000 |
| | | Total | 75 | 6,69,000 or 6,70,000/- |

**மேலே குறிப்பிட்டுள்ள பணிகளுக்குத் தேவைப்படும் கல்வித் தகுதி**

| Sl.No. | Designation | Required Qualification (MIN) |
|---|---|---|
| 1. | Sonologist | MBBS with DMRD/Experience in Scan & Radiology for 2 years |
| 2. | Physiotherapists | Bachelor Degree in Physiotherapy with 2 years experience |
| 3. | Optometrician | Diploma in Optometri from a Govt. Recognised Institution with 2 years experience |
| 4. | Dialysis Technician | Training in Hemodyalysis from a Govt. Recognised Institution with 2 years experience |
| 5. | Lab Technician | DMLT from a Govt. Recognised Institution with 2 years experience |
| 6. | X-Ray Technician | X-Ray Technician course from a Govt. Recognised Institution with 2 years experience |
| 7. | ECG Technician | ECG Technician course from a Govt. Recognised Institution with 2 years experience & Training in Vibration perception threshold training |
| 8. | Yoga Teacher | Certificate of Degree in Yoga with 2 years experience |
| 9. | Receptionist | Any Degree with experience in using Computer. |
| 10. | Clerk Cum Assistant | Any Degree with experience in using Computer |

இதற்கான மாதம் ஆகும் தோராய செலவு ரூ. 6,70,000/– ஆகும். ஓராண்டிற்கான செலவு ரூ.80,40,000/– ஆகும். இதற்காகும் செலவினங்களை 2012–13ம் நிதியாண்டு சுகாதாரத் துறை வரவு செலவுத் திட்டம் Function Code 30–35–01, DP.Code 210–10–06–05 ன் கீழ் மேற்கொள்ளலாம்.

எனவே,

1. ஐந்து மையங்களுக்கு வெளி நிறுவனங்களிடமிருந்தும் பணியாளர்கள் ஒப்பம் முறையில் பணி நியமனம் செய்யவும்,
2. இதற்காக தோராயமாக ஆகும் ஓராண்டு செலவு ரூ.80,40,000/– 2012–13ம் நிதியாண்டு சுகாதாரத் துறை வரவு செலவுத் திட்டம் Function Code 30–35–01, DP.Code 210–10–06–05 ன் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 இனங்களுக்கு நிலைக்குழு(பொது சுகாதாரம்) மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

"ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டம் 15.11.2012 அன்று கூட்டம் முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 28.11.2012 அன்று தீர்மான எண்.50/2012–ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது".

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.ஈ3/49282/2012**
**ஆணையாளர் அவர்களின் 21.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.538/2012 **பொருள் எண்.43**

**இரண்டு உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பதவி தோற்றுவிக்க அரசுக்கு முன்மொழிவு அனுப்ப அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் சென்னை மாநகராட்சி மக்கள் தொடர்பு அதிகாரிக்கு உதவியாக இரண்டு உதவி மக்கள் தொடர்பு அதிகாரி பணி நியமனம் செய்ய அறிவுறுத்தியுள்ளார். இப்பொருளின் மீது நடவடிக்கை எடுக்க மக்கள் தொடர்பு அலுவலர் அவர்கள் 22.11.2012 நாளிட்ட குறிப்பின் மூலமாக கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை மாநகராட்சியின் எல்லை தற்போது 174 சதுர கிலோ மீட்டரிலிருந்து 426 சதுர கிலோ மீட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால், சென்னை மாநகராட்சியில் அனைத்து துறைகளில் பணிகள் அதிகரித்துள்ளதாலும், எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டது தொடர்பாக அனைத்து பிரிவுகளில் நடைபெறும் பணிகளின் விவரம் குறித்து தெரிந்து கொள்ள பொதுமக்கள் ஆர்வம் தெரிவித்து வருவதாலும், அநேக பொதுமக்கள் தற்போது சென்னை மாநகராட்சியில் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் அணுகி புகார் தெரிவிப்பதும், தகவல் பெறுவதும் அதிகரித்து வருவதாலும், மக்கள் தொடர்பு அலுவலர் பொறுப்பில் 24 மணி நேரமும் புகார் பிரிவு இயங்கி வருவதால் ஒரு மக்கள் தொடர்பு அலுவலர் அளவில் இப்பணியை சிறப்பாக செய்ய இயலாத சூழ்நிலை உள்ளதால், சென்னை மாநகராட்சி மக்கள் தொடர்பு அலுவலருக்கு உதவியாக இரண்டு உதவி மக்கள் தொடர்பு அலுவலரை (Assistant Public Relations Officer) நியமனம் செய்தால் சென்னை மாநகராட்சியில் மக்கள் தொடர்பு அலுவலகம் இன்னும் சிறப்பாக செயல்படும்.

சென்னை மாநகராட்சியில் மக்கள் தொடர்பு அலுவலகத்தில் மக்கள் தொடர்பு அலுவலர் பதவிக்கு ஒரு பணியிடம் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடம் தொன்றுதொட்டு அயற்பணி மூலமாக மட்டும் நிரப்பப்பட்டு வருகிறது. புதியதாக இரண்டு உதவி மக்கள் தொடர்பு அலுவலரை நியமனம் செய்ய சென்னை மாநகராட்சியில் இப்பதவிக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடமோ நியமன விதிகளோ இல்லை.

எனவே, புதியதாக இரண்டு உதவி மக்கள் தொடர்பு அலுவலரை நியமனம் செய்ய புதியதாக இரண்டு பணியிடங்கள் நிரந்தர அடிப்படையில் தோற்றுவிக்கப்பட வேண்டும். மேலும் இப்பதவிக்கு வரையறுக்கப்பட்ட பணி விதிகள் ஏதும் இல்லை. எனவே, சென்னை மாநகராட்சியில் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பதவி இரண்டு புதியதாக தோற்றுவிக்கப்பட மன்றத்தின் ஒப்புதல் பெற்று அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பப்பட வேண்டும்.

மேலும், இப்பதவிக்கு பணிவிதிகள் இயற்றப்பட செயலர், தமிழ் வளர்ச்சி துறை, அறநிலையங்கள் மற்றும் செய்தி துறை அவர்களிடம் அத்துறையில் உள்ள உதவி மக்கள் தொடர்பு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட பணிவிதிகள் மற்றும் ஊதிய விகிதம் ஆகிய விவரம் பெறப்பட வேண்டும். சென்னை மாநகராட்சியில் இப்பணியிடம் தோற்றுவிக்கவும், இப்பணியிடத்திற்கு அயற்பணி அடிப்படையில் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறையிலிருந்து இரண்டு உதவி மக்கள் தொடர்பு அலுவலரை நியமனம் செய்ய கோரி அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

'' இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/48587/2012**
**ஆணையாளர் அவர்களின் 23.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.539/2012 **பொருள் எண்.44**

**கலந்தறிதற்குரியர் பணியமர்த்த அனுமதி**

சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளுக்கு அடிப்படை வசதிகள் உள்ளிட்ட மேம்பாட்டுப்பணிகளை மேற்கொள்ளுவதற்காக, சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் , (The Chennai Mega City Development Mission) மூலமாக தமிழக அரசு 2011 – 12ஆம் ஆண்டிற்கு ரூ.366கோடி நிதி ஒதிக்கீடு செய்தும் நடப்பு ஆண்டிற்கு ரூ. 426 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதி ஒதுக்கீட்டில் சாலை மேம்பாட்டு பணிகள், தெரு விளக்கு பணிகள் மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட மழைநீர் வடிகால்வாய்கள் கட்டுமானப்பணி மேற்கொள்வது போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL) திடக்கழிவு மேலாண்மை பணிகளை தனியார் நிறுவனம் மூலமாக செய்து முடிக்கவும், இந்த பணிகளை செய்ய திட்ட மேம்பாட்டாளர்களை தெரிந்து கொள்வதற்கும் சென்னை மாநகராட்சிக்கு ஆலோசனை வழங்கிவருகிறது.

சென்னை மாநகராட்சியின் எல்லை 174ச.கிமீ லிருந்து 426.ச.கிமீ ஆக விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதால், சென்னை நகரத்தின் மேம்பாட்டு பணிகள் அதிகரித்துள்ளதாலும், சென்னை பெருநகர வளர்ச்சி திட்டத்தின் மூலமாக நிறைவேற்றப்படும் பணிகளை பிரத்தியோகமாக கவனித்திட சென்னை மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் பணியாற்றி அனுபவம் வாய்ந்த ஒய்வு பெற்ற மூத்த பொறியியல் அலுவலர்களில் ஒருவரை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை(TNUIFSL) மூலமாக சென்னை மாநகராட்சிக்கு ஆலோசகராக நியமனம் செய்ய பரிந்துரைக்கலாம்.

எனவே சென்னை மாநகராட்சியில் பொறியியல் பிரிவில் பணியாற்றி ஒய்வு பெற்ற மூன்று மூத்த பொறியியல் அலுவலர்களின் பட்டியலை அனுப்பி இதில் சென்னை மாநகராட்சிக்கு அலுவலர் ஒருவரை தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனம், சென்னை (TNUIFSL)மூலமாகஆலோசகராக (Consultant/Advisor) பணியமர்த்தக்கோரி முன்மொழிவுகள் அனுப்புவதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>சு.து.ந.க.எண்.சி12/1588/2003</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 28.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.540/2012 **பொருள் எண்.45**

**<u>நீதி மன்றத்திற்கு தவறான தகவல் அளித்தது – வழக்கு கட்டணமாக செலவழிக்கப்பட்ட ரூ. 40,000/– தணிக்கைத் தடை எழுப்பப்பட்டுள்ளது – பதிவழித்தல் செய்ய – மன்றத்தின் அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் பணியாற்றி ஒய்வு பெற்ற உதவி சுகாதார அலுவலர் டாக்டர். கே.வி. சீனிவாசலு என்பவர், தனக்கு 01.04.1998 முதல் நிரப்பப்படாமல் இருந்த கூடுதல் சுகாதார அலுவலர் பதவி அளிக்கப்படாததை எதிர்த்து தமிழக அரசு மற்றும் சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கு எதிராக நீதிப் பேராணை எண். 9815/97 மூலம் வழக்கு தொடுத்தார். மேலும் கூடுதல் சுகாதார அலுவலர் பதவியில் 10.12.02 முதல் ஊதிய நிலுவையும் வழங்கப்பட வேண்டும் என்று கோரியிருந்தார். இதன் பேரில் அப்போதைய சுகாதார அலுவலர் (பொ) பதவி வகித்த டாக்டர். செ. வாசுதேவன், அவர்கள் நீதிமன்றத்திற்கு அளித்த தனது 29.08.1997 நாளிட்ட பத்திவாரியான பதிலில் கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தேர்ந்த பெயர் பட்டியல் (Panel) தயாரிக்கும்போது டாக்டர்.கே.வி. சீனிவாசலுக்கு தகுதியிருக்கும் பட்சத்தில் மனுதாரரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று எதிர் உறுதி ஆவணத்தின் (Affidavit) மூலம் தெரிவித்தார். ஆனால் உண்மையில் கூடுதல் சுகாதார அலுவலர் பதவி காசநோய் திட்டம் முடிவிற்கு வந்ததையடுத்து 28.02.1995 முதல் தொடரப்படாமல் அப்பதவி முடிவிற்கு வந்ததாக, பின்னர் மாநகராட்சி சார்பாக உதவி ஆணையர் (பொது நிர்வாகம் மற்றும் பணி) அவர்களால் திருத்தியமைக்கப்பட்ட எதிர் உறுதி ஆவணத்தின் மூலம் நீதிமன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டது. இதற்கிடையில் நீதிமன்றம் தனது 22.04.1998 தேதியிட்ட ஆணையில் (ஏற்கனவே சுகாதார அலுவலரால் தவறாக அளிக்கப்பட்ட பதிலின் அடிப்படையில்) இரண்டு மாதங்களுக்குள் கூடுதல் சுகாதார அலுவலர் பணியிடம் நிரப்பப்பட வேண்டும் என ஆணையிட்டது. இதற்குள் டாக்டர். கே.வி. சீனிவாசலு என்பவர் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு (வழக்கு எண். சி. ஏ. 458/98) தொடர்ந்ததின் அடிப்படையில் நீதிமன்றம் தனது 23.09.98 நாளிட்ட தீர்ப்பில் மாநகராட்சிக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு செய்ததாக தீர்ப்பளித்தது. நீதிமன்ற அவமதிப்பு தீர்ப்பினால், இவ்வழக்கு முக்கியத்துவம் அடைந்ததால் இவ்வழக்கினை திறம்படவாதிட தனியார் வழக்குரைஞர் திரு. வி.டி. கோபாலன் என்பவர் மாநகராட்சி சார்பாக நியமிக்கப்பட்டார். இவரும் மாநகராட்சியின் சுகாதார அலுவலரால் தாக்கல் செய்யப்பட்ட பத்திவாரியான பதில்கள் தவறானவை என்பதை வாதிட்டு மாநகராட்சிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட அவமதிப்பு தீர்ப்பினை 04.11.1998 அன்று நீதிமன்றம் மூலம் ரத்து செய்து ஆணை பெற்றார். இவ்வழக்கிற்காக திரு.வி.டி. கோபாலன் அவர்களுக்கு ரூ.30,000/–ம், இவருக்கு உதவியாளராகப் பணிபுரிந்த நிலை வழக்கறிஞர், திரு.டி. சந்திரசேகர் அவர்களுக்கு (மூன்றில் ஒருபங்கு ரூ.10,000/–)ம் ஆக மொத்தம் ரூ.40,000/–ஐ வழக்குரைஞர் கட்டணமாக வழங்கப்பட்டுள்ளது.

இதனை பிடித்தம் செய்ய நிர்வாக ரீதியாக நடவடிக்கை எடுக்கலாம் என தணிக்கைத் துறை துணை இயக்குநர் தெரிவித்திருந்தார். மேலும், இத்தொகையைத் தனியாரிடமிருந்து பிடித்தம் செய்திட வேண்டும் என உதவி சட்ட அலுவலர் அவர்களின் கருத்துரையின் படி ஒய்வு பெற்ற சுகாதார அலுவலர் (பொ) வகித்த டாக்டர்.செ.வாசுதேவன், அவர்களுக்கு மேற்கண்ட பொருள் குறித்து காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்க அனுமதி கோரி அரசுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இதற்கிடையில் தனியருக்கு ஒய்வூதியப் பயன்கள் அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன.

மேலும், இந்நிகழ்வு தொடர்பாக அரசுக்கு செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டதில் அரசு தனது 11.03.2011 நாளிட்ட கடிதத்தில் தனியருக்கு ஒய்வூதியப் பயன்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் வழக்கு கட்டணத்திற்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 40,000/–ஐ தனியாரின் ஒய்வூதியப் பணிக் கொடையிலிருந்து வசூலிக்க காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு அரசின் அனுமதி வழங்க இயலாது எனவும் தனியர் மீது ஒய்வூதிய விதிகளின்படி நடவடிக்கை எடுக்க இயலுமா ? என்பது குறித்து குறிப்பான குறிப்பினை தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஆணையர் அவர்களின் **24.06.2011** நாளிட்ட ஆணையின்படி வழக்கு கட்டணமாக செலவிடப்பட்ட தொகை ரூ. **40,000/–** ஐ ஒய்வூதிய விதிகளின் படி ஒய்வு பெற்ற அலுவலரின் ஒய்வூதிய அகவிலைப்படியிலிருந்து தவணை முறையில் பிடித்தம் செய்வது குறித்து அரசாணை வேண்டி அரசுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டதில் அரசு தனது **07.09.2012** நாளிட்ட கடிதத்தில் இவ்வழக்கு கட்டணமாக செலவிடப்பட்ட தொகை ரூ. **40,000/–** ஐ ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வு பெற்ற அலுவலரின் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து தவணை முறையில் பிடித்தம் செய்ய இயலாது என அரசு தனது கடிதத்தில் தெரிவித்துள்ளது.

எனவே அரசு கடிதம் எண். **20951**/மா.ந.**3/2003–36** நாள். **7.9.2012**ல் தெரிவித்துள்ளபடி வழக்கு கட்டணமாக செலவிடப்பட்ட தொகை ரூ. **40,000/–** ஐ ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வு பெற்ற அலுவலரின் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து தவணை முறையில் பிடித்தம் செய்ய இயலாது என்பதால், இவ்வழக்கு கட்டணமாக செலவிடப்பட்ட தொகை ரூ.**40,000/–**ஐ பதிவழித்தல் செய்ய நிலைக்குழு (சுகாதாரம்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டம் **15.11.2012** அன்று கூட்டம் முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**48/2012–**ன்படி நிலைக்குழு (பொது சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் **21.11.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**360/2012–**ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/ 5330/2012**

**ஆணையர் அவர்களின் 28.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.541/2012 **பொருள் எண்.46**

**சென்னை மாநகராட்சியில் இயங்கி கொண்டிருக்கும் வாகன மற்றும் உபகரணங்களுக்கான பராமரிப்பு பணி, வேலை வீதத்தொகை ஒப்பந்தம் (Labour Contract) மூலமாக மேற்கொள்ள அனுமதி**

சென்னை மாநகராட்சியில் கீழ்கண்ட வெவ்வேறு பணிகளை மேற்கொள்ள, பலவித மாதிரிகளில் பல்வேறு வாகன மற்றும் உபகரணங்கள், இயக்கி பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவையாவன:—

- துப்புரவு பணி
- கட்டிட இடிபாடுகள் அகற்றும் பணி
- சுகாதாரத்துறை சார்ந்த பணிகள்
- தெரு விளக்கு பராமரிப்பு பணி
- கள ஆய்வு பணிகள்
- மற்றும் பிற

சென்னை மாநகராட்சியில், பராமரிக்க பட்டுவரும் வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் வகைகள், கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

| வ. எண். | வாகன மற்றும் உபகரணங்கள் | கனரகம் / இலகுரகம் | தற்போதுள்ள வாகனங்களின் மொத்த எண்ணிக்கை | பெறப்படவுள்ள வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | பெரிய காம்பெக்டர்கள் | கனரகம் | 148 | 13 |
| 2. | கழிவுகள் சேகரிக்கும் பெரிய வாகனம் (Big Refuse collector) | கனரகம் | 3 | – |
| 3. | சிறிய காம்பெக்டர்கள் | இலகுரகம் | 133 | 27 |
| 4. | கழிவுகள் சேகரிக்கும் சிறிய வாகனம் (Small Refuse collector) | இலகுரகம் | 3 | – |
| 5. | டாரஸ் | கனரகம் | 37 | 22 |
| 6. | யுனிட் வாகனம் (Unit Lorry) | கனரகம் | 87 | – |
| 7. | டிப்பர் லாரிகள் | கனரகம் | 18 | – |
| 8. | யுனிட் லாரிகள் (Unit Lorry) | இலகுரகம் | 72 | – |
| 9. | மின்சார எணிகள் | கனரகம் | 3 | 18 |
| 10. | மின்சார எணிகள் | இலகுரகம் | 23 | 15 |
| 11. | தண்ணீர் லாரிகள் | கனரகம் | 17 | – |
| 12. | தண்ணீர் லாரிகள் | இலகுரகம் | 11 | – |
| 13. | புகை தெளிப்பான் வாகனம் | இலகுரகம் | 25 | – |
| 14. | மாடுபிடி வாகனங்கள் | இலகுரகம் | 11 | – |
| 15. | முன்பளு தூக்கிகள் | EQPT | 21 | 11 |
| 16. | ஸ்கிட் டீர் லோடர் | EQPT | 57 | – |
| 17. | மற்ற துறைகள் | கனரகம் | 11 | – |
| 18. | மற்ற துறைகள் | இலகுரகம் | 16 | – |
| 19. | ஆய்வு வாகனங்கள் | இலகுரகம் | 162 | – |
| 20. | புல்டோசர் வாகனம் | EQPT | 2 | – |
| 21. | இயந்திர பெருக்கி | கனரகம் | 11 | 2 |
| 22. | கடற்கரை சுத்தம் செய்யும் வாகனங்கள் | இலகுரகம் | 2 | – |
| 23. | எக்ஸ்கவேட்டர் | EQPT | 17 | – |

| | | | | |
|---|---|---|---|---|
| 24. | ஹட்ரகான் | கனரகம் | 2 | – |
| 25. | டம்பர் பிளேசர்ஸ் | இலகுரகம் | 14 | – |
| 26. | சுகாதாரத் துறை | இலகுரகம் | 36 | 17 |
| 27. | ஆட்டோ | இலகுரகம் | 27 | – |
| 28. | டிராக்டர் மற்றும் டிரெய்லர் வாகனங்கள் | கனரகம் | 38 | – |
| 29. | பவர் டில்லர் | இலகுரம் | 2 | – |
| 30. | ரோடு ரோலர் | EQPT | 33 | 7 |
| 31. | மற்ற உபகரணங்கள் | –– | 35 | – |
| | மொத்தம் | | 1077 | 132 |

வாகனங்கள்தற்போது கீழ்கண்ட வகைகளில் பராமரிப்பு பணி செய்யப்பட்டு வருகிறது.

| வ.எண். | வாகன வகைகள் | மொத்த எண்ணிக்கை | வாகன பிரிவு |
|---|---|---|---|
| 1. | பெரிய காம்பெக்டர்கள் | 148 | இயக்குதல் மற்றும் உதிரிபாகங்களுடன் கூடிய பராமரிப்பு |
| 2. | சிறிய வகை காம்பெக்டர்கள் | 133 | இயக்குதல் மற்றும் உதிரிபாகங்களுடன் கூடிய பராமரிப்பு |
| 3. | அதிக கொள்ளளவு கொண்ட டிப்பர் லாரிகள்(Haulage Trucks) | 37 | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி |
| 4. | டிப்பர் வாகனம் | 177 | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி |
| 5. | மின்சார ஏணி மற்றும் தண்ணீர் தொட்டிகள் | 54 | பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பணி |
| 6. | இயந்திர பெருக்கிகள் | 11 | இயக்குதல் மற்றும் உதிரிபாகங்களுடன் கூடிய பராமரிப்பு |
| 7. | மணல் ஜலிக்கும் இயந்திரம் | 2 | இயக்குதல் மற்றும் உதிரிபாகங்களுடன் கூடிய பராமரிப்பு |
| 8. | எக்ஸ்கவேட்டர் | 17 | பராமரிப்பு பணி |
| | மொத்த வாகனங்கள் | 579 | |

மேற்குறிப்பிட்டுள்ளபடி, 281 காம்பெக்டர்கள், காம்பெக்டர்கள் விநியோகஸ்தர்களான திருவாளர்கள். காம் அவிடா என்விரோ இன்ஜியர்ஸ் (பி) லிமிடெட் , திருவாளர்கள். அந்தோணி மோட்டார்ஸ் (பி) லிமிடெட் மற்றும் திருவாளர்கள். வி.இ. கமர்ஷியல் லிமிடெட் ஆகிய நிறுவனங்கள் மூலம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதிக கொள்ளளவு கொண்ட டிப்பர் லாரிகள், கட்டிட இடிபாடுகளை அகற்ற பயன்படும் கனரக லாரிகள்மற்றும் இதர வகைகளை சார்ந்த தண்ணீர் லாரிகள், கொசு மருந்து தெளிக்கும் புகை பரப்பி இயந்திரம் பொருத்தப்பட்ட வாகனங்கள், மாடுபிடி வாகனங்கள், தெரு விளக்குகளை பராமரிக்கும் வாகனங்கள் ஆகியவைகளை, மோட்டார் வாகன பராமரிப்பு நிறுவனத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர்களின் மூலம் (ஒரு ஒப்பதாரருக்கு இரண்டு மண்டலங்களுக்கு மிகாமல்) பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதர வகைகளை சார்ந்த வாகனங்களான ஆம்புலன்ஸ், பள்ளி வாகனங்கள், ஆய்வு வாகனங்கள் மற்றும் இதர உபகரணங்கள், ஆகியவைகளுக்கு பழுதுகள் ஏற்படும்போது மட்டும் போட்டியுடன் கூடிய விலைப்புள்ளிகள் (Competitive quotations) பெறப்பட்டு உரிய அனுமதியுடன் குறைந்த விலைப்புள்ளி அளித்தவருக்கு ஆணை வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்படுகிறது. தொடர்ந்து இப்பணிக்கான பின்னேற்பு ஆணை ஆணையரிடமிருந்து பெறப்படுகிறது.

பல வித தயாரிப்புகள் மற்றும் 61 வகையான மாதிரிகளுடன் கூடியதாக உள்ளதால் அனைத்து வாகனங்களையும், பழுதுபார்த்து பராமரித்து பணியில் ஈடுபடுத்த மிகுந்த சிரமங்கள் உண்டாகிறது.

61 வகையான மாதிரிகள் மற்றும் தயாரிப்புகள் கீழ்வருமாறு:–

| **Make** | | **Models** | |
|---|---|---|---|
| அசோக் லேலண்டு | – | 08 | |
| டாட்டா | – | 04 | |
| எய்ச்சர் | – | 05 | |
| சுராஜ் மஸ்தா | – | 03 | |
| மெட்டாடர் | – | 03 | |
| ஆய்வு வாகனங்கள் | – | 15 | |
| உபகரணங்கள் | – | 13 | |
| ஏனையவை. | – | 10 | |
| மொத்தம் | – | 61 | வாகன மாதிரிகள் ஆகும். |

மேலும், சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்தை தொடர்ந்து சுமார் 230க்கும் மேலான எண்ணிக்கையில் வாகனங்கள் பெறப்பட்டுள்ளன. அவையாவன:

1. ஆட்டோக்கள்
2. டிராக்டர் டிரைலர்ஸ்
3. குவாலிஸ் போன்ற ஆய்வு வாகனங்களின் வகைகள்.

இவ்வாறு, வெவ்வேறு வகையான வாகனங்கள் பராமரிப்பை 9க்கும் மேலான ஒப்பந்ததாரர்கள் மேற்கொண்டு வருகின்றனர். மேலும், இயக்குதலுடன் கூடிய பராமரிப்பு மற்றும் பராமரிப்பு மட்டும் கூடிய வாகனங்களை தவிர்த்து முக்கியமாக ஆய்வு வாகனங்கள் மற்றும் உபகரணங்களின் அன்றாட பழுதுகளை நீக்க பல்வேறு தனியார் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு பழுதுநீக்கி பெறப்படுகின்றன.

தற்சமயம், B.S.IV emission norms –கொண்ட வாகனங்களை மட்டுமே சென்னை நகரில் நிரந்தர பதிவு செய்யப்படுகின்றன. B.S.IV emission norms – கொண்ட கனரக வாகனங்கள் வெளிசந்தைக்கு வராத நிலையில் B.S.IV emission norms கொண்ட இலகுரக வாகனங்கள், சென்னை மாநகராட்சியில் கொள்முதல் செய்யப்பட்டு, பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வகை B.S.IV emission norms- கொண்ட புதிய வாகனங்களை பழுதுபார்த்து பராமரிக்க சென்னை மாநகராட்சியில் பழுதாளர்கள் இல்லை என்பது தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேலும், சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் சுமார் 230 பழுதாளர்களைக் கொண்டு வருடாந்திர வாகன புதுப்பித்தலை (F.C. Works) தற்சமயம் மேற்கொண்டு வருவதைப்போல் வருங்காலங்களிலும், மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

சென்னை மாநகராட்சியில், திறமை வாய்ந்த இயந்திர பழுதாளர்கள் போதுமானதாக இல்லாமையாலும் தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பராமரிப்பு பணிகளும் திருப்திகரமாக இல்லாததாலும், சமீபகாலமாக பழுது ஏற்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மேலும், வாகங்களின் பராமரிப்பு சரியாக மேற்கொள்ளப்படாததால் ஒவ்வொரு நாளும் வாகனங்கள் அடிக்கடி பழுதுக்குள்ளாகின்றன.

பல்வேறு மாதிரிகளைக்கொண்ட அனைத்து வகை வாகன உபகரணங்களையும், மிக உயர்ந்த தரமிக்க, போட்டியில் சிறந்த, தொழில் நுட்பத்தில் மற்றும் அதிக எண்ணிக்கையில் பராமரிப்பாளர்கள், சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் மிகுந்த நிதிச் சொத்துடன் கூடிய பராமரிப்பு நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளலாம் என வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

ஆகவே, வாகன பராமரிப்பில் திறமைமிக்க பிரசித்திப்பெற்ற அனுபவம் வாய்ந்த மற்றும் மிகுந்த நிதிச்சொத்துடன் கூடிய நிறுவனங்கள் மூலம் சென்னை மாநகராட்சியில் இயங்கி கொண்டிருக்கும் அனைத்து வாகனங்களின் பராமரிப்பையும், மண்டல இயக்கூர்தி நிலையங்கள், வடசென்னை மற்றும் தென் சென்னை லாரி நிலையங்களில் மேற்கொள்ளும்பொருட்டு, திறந்த ஒப்பம் கோரி முடிவெடுக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதன்படி, பராமரிப்பு தேவைப்படும் வாகனங்களின் எண்ணிக்கை = தற்போது உள்ள 1077 வாகனங்கள் மற்றும் சென்னை மாநகராட்சியின் விரிவாக்கத்தை தொடர்ந்து பெறப்பட்டுள்ள / பெறப்படும் 132 வாகனங்கள் = 1209 வாகனம் மற்றும் உபகரணங்கள் ஆகும்.

மேலும், அந்தந்த வாகனம் மற்றும் உபகரணங்கள் தயாரிப்பாளர்கள் / விநியோகஸ்தர்களிடமிருந்து அசல் உதிரிபாகங்களை பெற்று வாகனங்களின் பராமரிப்புப் பணியை வேலைவீதத்தொகைஒப்பந்தம்(Labour Contract ) மூலம் மேற்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப் படுகிறது.

இவ்வாகனங்களை, அன்றாடம் பழுதுநீக்கி பராமரித்து பணியில் ஈடுபடுத்த தேவைப்படும் தொகை கீழ்கண்டவாறு விளக்கப்படுகிறது.

**ஒரு மெக்கானிக் மாத சம்பளம்**

ஒரு மெக்கானிக் மாத சம்பளத்தை பின்வரும் சூத்திரங்கள் மூலம் கணக்கீடு செய்ய முடியும்.

i ) ஒரு மெக்கானிக் மாத சம்பளம் = குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் + (அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் / 2 )

ஊதிய விகிதம் (6வது ஊதியக்குழுவின் பரிந்துரைக்கு முன்) = 3200–85– 4900

ஊதிய விகிதம் (6வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி) =5200–20200 +2000 தர ஊதியம்.

6வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி பரிந்துரையின்பேரில் திருத்தப்பட்ட ஊதியத்தின்படி =

ரூ. 3200 x 1.86 = ரூ. 5952/– அல்லது ரூ. 5960/–,

தர ஊதியம் = ரூ. 2000/–

குறைந்த அடிப்படை ஊதியம் = ரூ. 5960 + ரூ. 2000 = ரூ. 7960/–

ஒரு மெக்கானிக் மாத சம்பளம் = குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் + ( அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் / 2 )

இதன்படி, ஒரு மெக்கானிக் மாத சம்பளம் = ரூ.7960 + {(20200 + 2000) – ரூ. 7960 ) }/ 2

= ரூ. 7960 + 7120 = ரூ. 15080

| | |
|---|---|
| 73 % அகவிலைப்படி | = ரூ. 11008 |
| வீட்டு வாடகைப்படி | = ரூ. 1800 |
| நகர ஈட்டுப்படி | = ரூ. 600 |
| மொத்தம் | = ரூ. 28488 |

ii ) ஒரு மெக்கானிக் மாத சம்பளம் = குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் + வித்தியாசம் ( அதிக பட்சம் – குறைந்த பட்சம் ) x 3 / 4 - ஆண்டு ஊதிய உயர்வு எண்ணிக்கை –5 / 60 )

= 7960 + ( 20200 + 2000 – 7960 ) x (¾) - (20-5) / 60

=7960 + ( 20200 + 2000 – 7960 ) x (¾ - ¼ )

=7960 + ( 20200 + 2000 – 7960 ) x ( ½ )

=7960 + 7120 = ரூ. 15,080 ஆகும்.

| | |
|---|---|
| குறைந்த பட்ச அடிப்படை ஊதியம் | =ரூ. 15080 |
| 73 % அகவிலைப்படி | = ரூ. 11008 |
| வீட்டு வாடகைப்படி | = ரூ. 1800 |
| நகர ஈட்டுப்படி | = ரூ. 600 |
| மொத்தம் | = ரூ. 28488 |

ஒரு வாகன பராமரிப்பிற்கு 0.7 வேலையாட்கள் ( Labourers) தேவைப்படும் என்கின்ற நெறிமுறையின்படி இதற்கு தேவையான நிதி கீழ்கண்டவாறு கணக்கிடப்படுகிறது.

1077 வாகன மற்றும் உபகரணங்களை பழுதுபார்த்து பராமரிக்க தேவைப்படும் மெக்கானிக்குகளின் எண்ணிக்கை = 1077 x 0.7 = 753.9 = 754 ( say)

**ஆகவே, 754 மெக்கானிக்குகளின் மொத்த வருடாந்திர ஊதியம் =**

**754 x 28488 x 12= 25.78 கோடி.**

மேலும், மேற்பார்வையாளர்கள் ஒரு வாகன பராமரிப்பிற்கு 0.16 எனும் நெறிமுறையின்படி, தேவைப்படுபவர்கள் = 1077 x 0.16 = 172.32 = 173 (say)

**ஆகவே 173 மேற்பார்வையாளர்களின் மொத்த வருடாந்திர ஊதியம்**

**= 173 x 34000 x 12= 7.06 கோடி.**

**ஆக மொத்தம் 1077 வாகனங்களை பழுதுபார்த்து பராமரிக்க ஆக மொத்த செலவு =**
**= 25.78 கோடி + 7.06 கோடி = 32.84 கோடி ஆகும்.**

ஒரு வாகனம் பழுதுபார்க்க **0.86** தொழில் நுட்ப பணியாளர்கள் தேவைப்படுகிறார்கள் என்கிற சென்னை பெருநகர் போக்குவரத்துக் கழகத்தில் (MTC) பின்பற்றப்பட்டுவரும் நெறிமுறையின் படி கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள விதிமுறைகளின்படி, சென்னை மாநகராட்சியில் நடைமுறையில் இருந்துவரும் மற்றும் பெறப்படும் மொத்தம் **1077** வாகன மற்றும் உபகரணங்களை ஒரு வருட காலத்திற்கு பழுதுபார்த்து பராமரிக்க சுமார் **33.00** கோடி என கணக்கிடப்பட்டு உள்ளது.

சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் **1919** பிரிவு **78**ன் படி ரூ.**10** கோடிக்கு மேல் செலவாகும் பணிகளுக்கு அரசின் நிர்வாக அனுமதி பெறப்பட வேண்டும் என்பதால் இப்பிரேரணையை மன்றம் மூலமாக அரசுக்கு அனுப்பி நிர்வாக அனுமதி பெற கோப்பு சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே,

1. சென்னை மாநகராட்சியில் இயங்கும் **1077** எண்ணிக்கை வாகன மற்றும் உபகரணங்களை ஒரு வருட காலத்திற்கு சுமார் **33.00** கோடி மதிப்பீட்டில் தனியார் நிறுவனங்களின் மூலம் பழுதுபார்த்து பராமரிக்க ( Labour contract only) மன்றத்தின் வழியாக தமிழ்நாடு அரசின் நிர்வாக அனுமதி வேண்டி பெறவும்,
2. பல்வேறு மாதிரிகளைக்கொண்ட அனைத்து வகை வாகன உபகரணங்களையும், மிக உயர்ந்த தரமிக்க, போட்டியில் சிறந்த, தொழில் நுட்பத்தில் மற்றும் அதிக எண்ணிக்கையில் பழுதாளர்களைக் கொண்டு சிறந்த உட்கட்டமைப்பு மற்றும் மிகுந்த நிதிச் சொத்துடன் கூடிய பராமரிப்பு நிறுவனங்களின் மூலம் பழுதுபார்த்து பராமரிக்கும் பணியை மேற்கொள்ள திறந்த வெளி ஒப்பம் கோரி முடிவெடுக்கவும்,
3. வருங்காலங்களில் கொள்முதல் செய்யப்படும் **132** எண்ணிக்கை வாகன மற்றும் உபகரணங்களை பழுதுபார்த்து பராமரிக்க இவ்வொப்பத்தில் முடிவு செய்யப்படும் விலைகளுக்கே பணிமேற்கொள்ளவும்,

மேற்குறிப்பிட்டுள்ள **1** முதல் **3** வரை உள்ள இனங்களுக்கு தமிழ்நாடு அரசிதழ் எண். **301**, நாள் **30.10.2003**ல் வெளியிடப்பட்டுள்ள தமிழக அரசின் சட்டம் எண். **9/2003**, சென்னை மாநகராட்சியின் சட்டம் விதி **1919**ல் விதிகள் **78** மற்றும் மன்றத்தின் தீர்மான எண். **639/2003**, நாள் **21.11.2003**ல் அளிக்கப்பட்டுள்ள கூடுதல் அதிகாரங்களின்படியும், இப்பொருள் அவசியம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ7/2304/2007**
**ஆணையாளர் அவர்களின் 28.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.542/2012 **பொருள் எண்.47**

**அரசாணை(நிலை) எண்.92, நாள்.03.07.2007–ல் தெரிவித்துள்ள 9 ஆண்டுகள் குத்தகை கால அளவை நடைமுறை படுத்தும் போது ஏற்படும் குறைபாடுகளை களையும் வண்ணம் 3 ஆண்டுகள் குத்தகை காலமாக மாற்றிட அரசாணையில் திருத்தம் கொண்டுவர மன்றத்தின் அனுமதி வேண்டி**

சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் கடைகள் தொடர்பாக குத்தகையை புதுப்பித்தல் திருத்திய நடைமுறைகள் அரசாணை(நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நகராட்சி கடைகள் ஒரே நேரத்தில் மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடப்படலாம் மூன்று ஆண்டுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு கால அளவு முடிவடைவதன் பேரில் அக்குத்தகை தன்னியல்பாகவே (Automatically) புதுப்பிக்கப்படும் இவ்வாறாக ஒன்பது ஆண்டுகள் வரை புதுப்பிக்கப்படும் மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை தொகை 15 விழுக்காடு உயர்த்தப்படும்.

ஒன்பது ஆண்டுகளுக்கு பின்னர் குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யப்பட வேண்டும் தற்போதைய குத்தகைதாரருக்கு அப்போதைய அங்காடி மதிப்பின் அடிப்படையிலான திருத்தியமைக்கப்பட்ட குத்தகை வீதத்தில் மேற்கொண்டு 9 ஆண்டுகளுக்கு குத்தகைக்கால அளவை நீட்டித்து கொள்ள முன்னுரிமை அளிக்கலாம். அவர் ஒப்புக் கொள்ளவில்லையானால் அச்சொத்து பொது ஏலத்தின் மூலம் குத்தகை விடவேண்டும்.

மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ள இந்த அரசாணையை நடைமுறைபடுத்தியபோது ஒன்பது ஆண்டுகள் நீண்டகாலமாக குத்தகை விடும் போது கடைகாரர்கள் வாடகை தொகையினை சரிவர செலுத்தாமல் நிலுவை வைத்துள்ளனர். சென்னை மாநகராட்சி அனுமதியின்றி கடையினை மேல் வாடகைக்கு விடுகின்றனர் இதுபோன்ற நடைமுறை சிக்கல்கள் ஏற்படுகின்றன. மேலும் வாடகை நிலுவை வசூலிக்க இயலாத நிலை ஏற்படுகின்றது. இக்குறைபாடுகளை களையும் வண்ணம் 9 ஆண்டுகள் குத்தகை கால அளவை குறைத்து 3 ஆண்டுகள் குத்தகையாக குறைத்து 3 ஆண்டு குத்தகை முடிவடைந்தவுடன் அச்சொத்தினை பொது ஏலத்தில் கொண்டு வர அரசாணை(நிலை) எண்.92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை, நாள்.03.07.2007–ல் திருத்தம் கொண்டுவர அரசிற்கு பரிந்துரைக்க நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) முலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் 21.11.2012 அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 28.11.2012 அன்று தீர்மான எண்.358/2012–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ3/4709/2012**
**ஆணையாளர் அவர்களின் 28.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.543/2012 **பொருள் எண்.48**

**டி.யு.சி.எஸ். நிறுவனத்தின் கீழ் இயங்கும் நியாய விலை கடைக்கு மாற்று இடம் வேண்டியும், வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டி**

தனி அலுவலரின் 9.10.2012 நாளிட்ட கடிதத்தில் டி.யு.சி.எஸ் நிறுவனத்தின் கீழ் இயங்கும் நியாய விலை கடை எண்.45/2 தேரடி தெரு, 2, துளசிங்க பெருமாள் கோயில் தெரு முதல் சந்து, திருவல்லிக்கேணி பகுதியில் செயல்பட்டு வருவதாகவும் அக்கட்டடத்தின் உரிமையாளர் கட்டிடத்தின் பழமையினை தெரிவித்து உறுதியின்றி உள்ளதால் எந்த நேரத்திலும் இடிந்து விழும் அபாயம் உள்ளது என தெரிவித்து கடையினை காலி செய்து கட்டிடத்தை திரும்ப ஒப்படைக்குமாறு கோரி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் நியாய விலை கடை அதே பகுதியில் தொடர்ந்து இயங்கிடவும் மண்டலம்–9 வார்டு–116ல் சிவராஜபுரத்தில் உள்ள சென்னை மாநகராட்சி உடற்பயிற்சிக்கூடம் காலியாக உள்ளதெனவும் தெரிவித்து அக்கட்டிடத்தை மாற்று இடமாக நியாய விலை கடைக்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்–9 அவர்களின் 09.11.2012 நாளிட்ட குறிப்பில் திருவல்லிக்கேணி கிராமம், தொகுதி எண்.33இல் நிலஅளவை.1666/9இல் அமைந்துள்ள 99.00 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட உடற்பயிற்சி கூட கட்டடத்தை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக நியாய விலை கடை எண். என்சி 047–க்கு மாத வாடகைக்கு ஒதுக்கீடு செய்ய தேனாம்பேட்டை 9வது மண்டல வார்டு குழு பரிந்துரைத்துள்ளது என தெரிவித்துள்ளார்.

எனவே, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்திற்கு நியாய நிலை கடைக்காக மேற்கண்ட கட்டிடத்தை மன்றத்தால் பின்னர் நிர்ணயிக்கப்படும் வாடகை செலுத்துவதற்குட்பட்டு ஒதுக்கீடு செய்ய நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் 21.11.2012 அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 28.11.2012 அன்று தீர்மான எண்.359/2012–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘அப்பகுதியில் வசூலிக்கப்படும் அதிகப்பட்ச வாடகையை
நிர்ணயம் செய்யலாம் என்ற கருத்தின் அடிப்படையில்
இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ச.கு.ந.க.எண்.எல்சி1/6725/2012.**
**ஆணையர் அவர்களின் 27.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.544/2012 **பொருள் எண்.49**

**சென்னை நகர நகர் ஆணையம் சட்டம் 1919 – விதிகளில் சில திருத்தங்கள் – மேற்கொள்ளல் – மன்றத்தின் ஒப்புதல் வேண்டி.**

சென்னை மாநகராட்சி தொடங்கப்படும்போது அதற்கேற்ப சட்ட விதிகள் இயற்றப்பட்டு சென்னை நகர நகர் ஆணையம் 1919 விதி என்கின்ற சட்டம் ஒன்று இயற்றப்பட்டது. அச்சமயத்தில் சென்னை மாநகராட்சியின் எல்லை மிக குறைந்த அளவே இருந்தது. காலபோக்கில் சென்னை மாநகராட்சியில் எல்லை கடந்த 1988 ஆம் ஆண்டு பத்து மண்டலங்களாக பிரிக்கப்பட்டு 176 ச.கி அளவு பரப்பாக மாற்றப்பட்டது.

இன்றைய தேதியில், சென்னை மாநகராட்சியுடன் அதன் சுற்றியுள்ள பல நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர பஞ்சாயத்துக்கள் ஆகிய இணைக்கப்பட்டு, தற்சமயம் சென்னை மாநகராட்சியின் எல்லை 176 ச.கி. லிருந்து 426 ச.கி ஆக மாறி உள்ளது. சென்னை மாநகராட்சியின் எல்லை விரிவாக்கப்பட்டதால், சென்னை மாநகராட்சியின் தலைமையக(ரிப்பன் கட்டிடம்)த்திலிருந்து நிர்வாகத்தினை கவனிப்பது மிகவும் கடினமான செயல்பாடு என்பதால், சென்னை மாநகராட்சியினை மூன்று வட்டார அலுவலகங்களாக (வடக்கு, தெற்கு மற்றும் மத்திய) பிரித்து, ஒவ்வொரு வட்டார அலுவகத்திற்கும் ஓர் வட்டார ஆணையாளர் நியமனம் செய்யபட்டு நிர்வாக அலுவலக முறை பிரித்து வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் 1919–ல் கீழ்கண்ட விதிகளில் குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு திருத்தம் மேற்கொள்வது அவசியமாகிறது.

| t.vz;. | gphpT | jpUj;jg;glNtz;ba gphpT |
|---|---|---|
| 1. | 7 | Mizahsh; kw;Wk; ,ju mjpfhhpfs; |
| 2. | 16 | Mizahshpd; rhjhuz mjpfhuk; gfph;e;jspj;jy; |
| 3. | 74(c) | nrhj;Jf;fis ifafg;gLj;Jjy; kw;Wk; mjw;Fz;lhd tpisTfs; |
| 4. | 75 | nrhj;Jf;fis KbT nra;jy; kw;Wk; mjw;Fz;lhd tpisTfs; |
| 5. | 78 | kjpg;gPl;il xg;gjyspf;f efuhl;rp mikg;GfSf;F mjpfhuk; |
| 6. | 81(2) | xg;ge;jq;fis Vw;gLj;Jk; Kiw |
| 7. | 82(1) | xg;ge;jg;Gs;spfs; mioj;jy; |
| 8. | 85 | gzpaikg;G |
| 9. | 137gp | kjpg;gPl;bypUe;J tpLgl;l ,dq;fSf;F kjpg;gPL nra;யவும; mjpfhuk; |
| 10. | 351 | rl;l tpjpfs; kPwy;fSf;fhd mguhjk; |
| 11. | 357(1) | ml;ltiz VII rhjhuz mguhjk; |
| 12. | 357(2) | ml;ltiz VIII njhlh;e;J tpjp kPwy;fSf;fhd mguhjk; |
| 13. | 379A | chpkk; ngwj;jtwpajd; tpisTfs; kw;Wk; gy |

மேற்கண்ட திருத்தங்களை குறிப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கொள்ள பொருளின் அவசரம் மற்றும் அவசியத் தன்மையை கருத்தில் கொண்டு அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்ப நேரடியாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>க.து.ந.க.எண். பி7/4527/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 28.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.545/2012 **பொருள் எண்.50**

**<u>மதிப்பீடு</u>**

வார்டு எண் : 87 மண்டலம் : 7

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–7, வார்டு–87, டி.எம்.பி.நகர், சர்ச் சாலையில் உள்ள அவசர மகப்பேறு மையம் (EOC) வளாகத்தில் பழைய கட்டடத்தை இடித்துவிட்டு கூடுதல் கட்டடம் மற்றும் ஏற்கனவே உள்ள கட்டடத்திற்கு கூடுதல் வசதிகள் அமைக்கும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை ...../ மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.188.00 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2012-2013 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | மூலதனநிதி – கட்டடத்துறை 2012-2013 |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண். மற்றும் நாள் | – |

எனவே, மேற்கண்ட பணிக்கான திட்ட மதிப்பீடு ரூ.1,88,00,000/–க்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்), (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு பொது (சுகாதாரம்) கூட்டம் **15.11.2012** அன்று கூட்டம் முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**49/2012**–ன்படி நிலைக்குழு பொது (சுகாதாரம்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி.ம.நி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் **19.11.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**301/2012**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் **21.11.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**362/2012**–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>தி.க.மே.து.பொ.ப.சா.ந.க.எண்.அ3/106/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 28.11 . 2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.546/2012 **பொருள் எண்.51**

**<u>2012–2013 சென்னை மாநகராட்சி துப்புரவு பணிகளுக்கு தேவையான 1100 லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் வாங்க வருடாந்திர விலை நிர்ணயம் செய்ய (Annual rate contract basis) ஒப்பங்கள் கோரப்பட்டு பெறப்பட்டன – இறுதி நிர்ணயம் செய்த விலைப்புள்ளியை ஏற்பதற்கு அனுமதி.</u>**

திடக்கழிவு மேலாண்மை துறை – பொது பண்டகசாலை – **2012–13** – சென்னைமாநகராட்சி துப்புரவு பணிகளுக்கு தேவையான **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டிகள் வாங்க வருடாந்திர விலை நிர்ணயம் செய்ய (Annual rate contract basis) ஒப்பங்கள் கோரப்பட்டன – **23.11.2012** அன்று பிற்பகல் **3.00** மணிக்கு ஒப்பம் பெறப்பட்டது. இவ்வொப்பந்தத்தில் கீழ்கண்ட மூன்று ஒப்பந்ததாரர்கள் பங்கேற்றனர்.

1) சின்டெக்ஸ் இண்டஸ்டிரிஸ் லிமிடெட்,
2) ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிட்.,
3) ரவி மெட்டல் வொர்க்ஸ்,

இவர்கள் சமர்ப்பித்த தொழில் நுட்ப ஆவணங்களை பரிசீலனை செய்ததில், திருவாளர் ரவி மெட்டல் வொர்க்ஸ் நிறுவனம் விலைப்புள்ளியை திறப்பதற்கு தகுதியற்றவராகிறார். மற்ற இரண்டு நிறுவனங்கள் விலைப்புள்ளியை திறப்பதற்கு தகுதியுடையவராகிறார்கள்.

எனவே **27.11.2012** அன்று திறக்கப்பட்ட நிதி ஆவண ஒப்பந்தத்தில் தகுதி பெற்ற மேற்கண்ட **2** ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர்.

| வ.எண். | ஒப்பந்ததாரரின் பெயர் | கடந்த கொள்முதல் விலை (2012–13) | ஒப்ப தொகை (ஒன்றின் விலை) | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1) | சின்டெக்ஸ் இண்டஸ்டிரிஸ் லிட்., | ரூ. 14,200/- | ரூ. 17,500/– | (+) 23.23 % |
| 2) | ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிட்., | ரூ. 14,200/- | ரூ. 17,500/– | (+) 23.23 % |

இந்த ஒப்பந்ததாரர்களில் திருவாளர் சின்டெக்ஸ் இண்டஸ்டிரிஸ் லிட்,. மற்றும் திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிட்., நிறுவனங்கள் **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டி ஒன்றின் விலை ரூ.**17,500/-** (வரிகள் உட்பட) என ஒரே மாதிரியாக விலைப்புள்ளி அளித்துள்ளார்கள். இவ்வொப்பத் தொகையானது கடந்த கொள்முதல் **(2012–2013)** விலையை விட (+) **23.23** % அதிகம் ஆகும்.

குறைந்த ஒப்பவிலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுடன் விலை குறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. திருவாளர் சின்டெக்ஸ் இண்டஸ்டிரிஸ் லிட்,. மற்றும் திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிட்., நிறுவனங்கள் இரண்டு விலை குறைப்பு பேச்சுவார்த்தைக்கு பின் **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டி ஒன்றின் விலை ரூ.**16,100/-** என இறுதியாக விலை அளித்துள்ளார்கள்.

எனவே **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டி ஒன்றின் விலை ரூ.**16,100/–** கடந்த கொள்முதல் **(2012–13)** விலையை விட (+) 13.38 % அதிகமான விழுக்காட்டில் இறுதியாக்கம் செய்யப்பட்ட வருடாந்திர விலைக்கு **(Annual rate contract)** ஒப்புக் கொண்ட ஒப்பந்ததாரர்கள் முறையே திருவாளர் ஜி.எஸ்.பாடி பில்டர்ஸ் (பி) லிட்., மற்றும் திருவாளர் சின்டெக்ஸ் இண்டஸ்டிரிஸ் லிமிடெட் ஆகியோர் ஒராண்டிற்கு மண்டலங்களின் தேவைக்கேற்ப **1100** லிட்டர் கொள்ளளவுடைய இரும்பு உலோகத்திலான காம்பாக்டர் குப்பை தொட்டி வழங்கும் பணி மேற்கொள்ள ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி அளிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)யின் மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் **19.11.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**300/2012**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வ.வி.ம.நி.) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் **21.11.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.**361/2012**–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தம்
கோருவதற்கு பின்னேற்பு வழங்கியும், ஒப்பந்த புள்ளியை ஏற்று இந்த
திருத்தத்துடன் மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>க.து.ந.க.எண்.இ4/ 18758 / 2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 21.11.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.547/2012 **பொருள் எண்.52**

**<u>கல்வித்துறை –சென்னை மாநகராட்சியில் மாணவ/மாணவியர்களுக்கு உடற்கல்வி திறம்பட போதிக்க புதியதாக 7 மண்டல உடற்கல்வி பயிற்றுநர்கள் (Zonal Physical Educational Instructors) பணியிடங்கள் தோற்றுவிக்க அனுமதி.</u>**

சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை (2012–13) அறிவிப்பு எண்.20–ல் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் விளையாட்டில் சிறந்து விளங்க உரிய பயிற்சிகள் அளிக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. சிறந்த உடற்தகுதி வாய்ந்த மாணவர்களை உருவாக்க நவீன உக்திகளைக் கொண்ட உடற்கல்வியில் சிறந்த பயிற்சியாளர்கள் அவசியம் அவர்கள் உடற்கல்வியில் M.Tech., போன்ற மேற்படிப்பு படித்தவர்களாக இருந்தால் மேலும் பயிற்சி சிறப்பாகவும் பயனுள்ள பலனை அளிக்க அது ஏதுவாக இருக்கும்.

இதன் தொடர்பாக கீழ்காண் விவரங்கள் சமர்ப்பிக்கப்படுகிறது.

- ❖ தற்போது சென்னை மாநகராட்சியின் கீழ் 284 சென்னைப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. (122 தொடக்கப்பள்ளிகள், 92 நடுநிலைப்பள்ளிகள், 38 உயர்நிலைப் பள்ளிகள், 32 மேல்நிலைப்பள்ளிகள்)
- ❖ இதில், 95,000ற்கு மேல் மாணவ/மாணவிகள் பயின்று வருகின்றனர்.
- ❖ இந்த மாணவ/மாணவியர்களுக்கு உடற்கல்வியில் அதிக அக்கறை உண்டாக்கும் வண்ணமும், சென்னைப்பள்ளி மாணவ/மாணவியர்களை விளையாட்டு துறையில் தலைசிறந்தவர்களாகவும், மாணவர்களுக்கு உடற்கல்வி மூலம் ஆரோக்கியமான உடல்வாகு ஏற்படவும் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் அறிவிப்பில் உடற்கல்வியில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.
- ❖ சென்னைப்பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு தற்கால உத்திகளை பயன்படுத்தி நவீன முறையில் நுணுக்கங்களை புகுத்தி உடற்கல்வி போதித்தும், மாணவ/மாணவியர்களின் உடற்வாகுக்கேற்பவும், ஈடுபாடிற்கேற்பவும் விளையாட்டினை தேர்வு செய்து, சர்வதேச அளவில் மாணவர்களை உயர்த்துவது மாணவர்களின் முன்னேற்றதினை மேம்பட வழிவகுக்கும்.
- ❖ அதற்கேற்ப உரிய உடற்கல்வியியல் பயிற்சிகளை நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முறையில், மாணவர்களின் உடற்சக்திக்கு ஏற்ப உடற்கூறுகளின் சக்திகளை கண்டறிந்து கற்பிப்பதும் மிகவும் அவசியமாகும்.
- ❖ இவ்வாறு உடற்கல்வியினை நவீன முறையில் கற்பிக்க புதியதாக உடற்கல்வி பயிற்றுநர் (Physical Educational Instructor) பணியாளர்களை தோற்றுவிக்கலாம்.
- ❖ எனவே, ஏற்கெனவே செயல்படும், உடற்கல்வி ஆசிரியர், உடற்கல்வி இயக்குநர் நிலை–I, II பதவிகளோடு கூடுதலாக, சென்னைப்பள்ளிகள் செயல்படும் 7 மண்டலங்களில் 1 மண்டலத்திற்கு 1 உடற்கல்வி பயிற்றுநர் வீதம் 7 மண்டல உடற்கல்வி பயிற்றுநர் பணியிடங்களை தோற்றுவிக்கலாம்.
- ❖ இந்த புதிய மண்டல உடற்கல்வி பயிற்றுநர்களுக்கு தற்போதைய உடற்கல்வி இயக்குநர்களுக்கு இணையான ஊதிய விகிதம் ரூ.9300–34300+4800 GP என நிர்ணயம் செய்யலாம்.
- ❖ உடற்கல்வியில் சிறந்த பயிற்சியாளர்கள் அவசியம். அவர்கள் உடற்கல்வியில் M.Tech., போன்ற மேற்படிப்பு படித்தவர்களாக இருந்தால் மேலும் பயிற்சி சிறப்பாகவும் பயனுள்ள பலனை அளிக்க ஏதுவாக இருக்கும்.
- ❖ தற்போது சென்னை மாநராட்சியின் கீழ் இயங்கி வரும் சென்னைபள்ளிகளில் கீழ்குறிப்பிட்டுள்ள பட்டியலில் கண்டுள்ளவாறு உடற்கல்வி ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர்.

| வ.எண் | பதவி | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | தற்போது பணிபுரிபவர் | ஊதிய விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | உடற்கல்வி ஆசிரியர் (Physical Educational Teacher) | 83 | 72 | 5200–20200 + 2800 GP |
| 2 | உடற்கல்வி இயக்குநர் நிலை–II | 5 | 5 | 9300–34800 + 4600 GP |
| 3 | உடற்கல்வி இயக்குநர் நிலை–I | 5 | 1 | 9300–34800 + 4800 GP |

- புதியதாக தோற்றுவிக்கப்படும் மண்டல உடற்கல்வி பயிற்றுநர்களின் கடமைகளும் பொறுப்புகளும் கீழ்வருமாறு.
    1. மாணவ/மாணவியர்களின் திறமையினை நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்ப முறையில் ஆய்வு செய்தல்.
    2. மாணவ/மாணவியர்களின் உடற்சக்திக்கு ஏற்ப உடற்கூறுகளின் சக்திகளை கண்டறிந்து அதற்கேற்ற பயிற்சியினை அளித்தல்
    3. விளையாட்டு சார்ந்த மென்பொருட்களை பயன்படுத்தி தலைசிறந்த வீரர்களை உருவாக்குதல்
    4. தேசிய மற்றும் உலகளவில் விளையாட்டில் மாணவ/மாணவியர்கள் பங்கு பெற்று பதக்கம் பெற சிறப்பு பயிற்சி அளித்தல்.

மேற்காண் கருத்துருக்களின் அடிப்படையில் கீழ்க்காண் இனத்திற்கு நிலைக்குழு (கல்வி), மற்றும் நியமனக்குழு மூலம் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

சென்னைப்பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு தற்கால உத்திகளை பயன்படுத்தி நவீன முறையில், உடற்கல்வி போதித்தும், அவர்களின் உடற்வாகுக்கேற்பவும், ஈடுபாடிற்கேற்பவும் விளையாட்டினை தேர்வு செய்து மாணவர்களின் முன்னேற்றத்தினை மேம்பட வழிவகை செய்ய, உரிய உடற்கல்வியியல் பயிற்சிகளை நவீன அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முறையில் மாணவர்களின் உடற்சக்திக்கு ஏற்ப உடற்கூறு சக்திகளை கண்டறிந்து கற்பிப்பது மிகவும் அவசியமான நிலையில், உடற்கல்வியினை நவீன முறையில் கற்பிக்க, சென்னைப்பள்ளிகள் செயல்படும் 7 மண்டலங்களில் 1 மண்டலத்திற்கு 1 மண்டல உடற்கல்வி பயிற்றுநர் என்ற புதிய பெயருடன் 7 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட அரசுக்கு கடிதம் அனுப்ப மன்றத்தின்ஒப்புதல் வேண்டப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் **16.11.2012** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று தீர்மான எண்.75/2012–ன்படி நிலைக்குழு (கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இம்மாத நியமனக்குழு கூட்டம் முடிவுற்ற நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தை கருத்தில் கொண்டு **28.11.2012** அன்று நியமனக்குழுவின் சுற்றின் மூலம் பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/016346/2012**

**ஆணையாளர் அவர்களின் 28.11.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.548/2012 **பொருள் எண்.53**

**கண்காணிப்பு பொறியாளர் – தெரிவுப்பட்டியல்**

சென்னை மாநகராட்சி கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது :—

| | | |
|---|---|---|
| 1 | பதவி உயர்வுக்கான பதவியின் பெயர் | கண்காணிப்பு பொறியாளர். |
| 2 | மைய நாள் | 01.02.2012 |
| 3 | ஊதிய விகிதம் | ரூ. 37400–67000 + 8700 தர ஊதியம் |
| 4 | காலிப்பணியிட மதிப்பீடு (Estimate of vacancies) | 1) அனுமதிக்கப்பட்ட பணியிடம் – 9<br>(அ) தற்காலிக பணியிடம் – –<br>(ஆ) நிரந்தர பணியிடம் – 9<br>(மேற்பார்வை பொறியாளர் 8 மற்றும்<br>மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) 1 )<br><br>2) பட்டியல் ஆண்டில் பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் – –<br>3) மைய நாளன்று உள்ள காலிப்பணியிடம் – 1<br>மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்)<br>4) 5 சதவீதம் விடுப்பு காலிப்பணியிடம் –<br>5) பட்டியல் ஆண்டில் பதவி உயர்வினால் ஏற்படும் காலிப்பணியிடம் – 3<br>அ) திரு.எம்.ராமமூர்த்தி<br>ஆ)திரு.ஆர்.குமரேசன்<br>இ)திரு.எம்.எஸ்.பிரேம்நாத்<br>6) பட்டியல் ஆண்டில் தோற்றுவிக்கப்படும் பணியிடம் (சென்னை மாநகராட்சி விரிவாக்கம்) – 1<br><br>மொத்தம் 5 |
| | வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | செயற் பொறியாளர்<br>(அ) செயற்பொறியாளர் பதவியில் இருந்து பதவி உயர்வு வழங்கப்படுவதன் மூலமாக.<br>(ஆ) செயற்பொறியாளர் பதவியில் ஆறு ஆண்டு காலம் தகுதி பணி முடித்தவராக இருக்க வேண்டும். |
| 6 | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா ? | முழுமையாக பயன்படுத்தப்பட்டது. |

கண்காணிப்புப் பொறியாளர் பதவி அனுமதிக்கப்பட்ட மொத்த பணியிடம் 9 ஆகும். இவ்வொன்பது பதவியில் கண்காணிப்புப் பொறியாளர் (மின்சாரம்) பதவியும் அடங்கும். கண்காணிப்புப் பொறியாளர் (மின்சாரம்) பதவி உயர்வுக்கு வளர்நிலை பதவி கோட்ட மின் பொறியாளர் பதவி என்பதால் கண்காணிப்புப் பொறியாளர் (மின்சாரம்) தெரிவுப்பட்டியல் தயாரிக்க தனியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

01.02.2012ஐ மைய நாளாகக் கொண்டு கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு தெரிவுபட்டியலின் ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மற்றும் பதவி உயர்வு அளித்து ஆணை வழங்கும் அதிகாரம் அரசின் வசம் உள்ளது. பணிமூப்பின்படி செயற்பொறியாளர்கள் மற்றும் மண்டல அலுவலர்கள் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | செயற் பொறியாளரின் பெயர் | செயற் பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | குறிப்புரை |
|---|---|---|---|
| 01. | யு. பெருமாள் | 08.07.2000 | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (கட்டுப்பாடு, வகைப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதி 1970 துணை விதி 10 (பி) ன்கீழ் கடும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார். |
| 02. | திரு. ஜி. ரமேஷ் | 07.07.2000 | தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (கட்டுப்பாடு, வகைபாடு மற்றும் மேல்முறையீடு) விதி 1970 துணை விதி 10 (பி) ன்கீழ் கடும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் இத்தெரிவுப்பட்டியலில் சேர தகுதியற்றவராகிறார். |
| 03. | திரு.ஜெ. வேணுகோபால் | 17.10.2002 | **தகுதி பெற்றுள்ளார்.** |
| 04. | திரு. ஆர். மகாலிங்கம் | 17.10.2002 | தனியர் தேதியில் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, 30.04.2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்படாமல் உள்ளார். எனவே, தனியர் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்க வேண்டிய அவசியமில்லை. இருப்பினும் தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி (கட்டுப்பாடு, வகைபாடு மற்றும் மேல்முறையீடு) விதி 1970 துணை விதி 10 (பி)ன்கீழ் கடும் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளது. |
| 05. | திருமதி ஆர். சுதா | 17.10.2002 | **தகுதி பெற்றுள்ளார்.** |
| 06. | திரு.ஏ.ஞானமனி | 29.09.2003 | **தகுதி பெற்றுள்ளார்.** |
| 07. | திரு.கே.வரதராஜீ | 29.09.2003 | **தகுதி பெற்றுள்ளார்.** |

மேற்படி பட்டியலில் வ.எண்.1 மற்றும் 2லிலுள்ள நபர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ளதால் இவ்விரண்டு செயற் பொறியாளர்களின் பெயர்களை இத்தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது என தனியர்களுக்கு தெரிவிக்கலாம்

வ.எண். 4லிலுள்ள திரு.ஆர்.மகாலிங்கம், செயற் பொறியாளர் அவர்கள் லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது செய்யப்பட்டு, ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு, 30.04.2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்கப்படாமல் தற்காலிக பணிநீக்கம் நீட்டிப்பு செய்து ஆணையிடப்பட்டுள்ளதால் இவரது பெயரினை தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது.

வ.எண்.3, 5, 6, மற்றும் 7ல் கண்டுள்ள செயற் பொறியாளர்கள்/மண்டல அலுவலர்கள் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. தனியர்கள் கடந்த 5 ஆண்டு காலங்களில் தண்டனை ஏதும் பெறவில்லை. தனியர்களின் மந்தன அறிக்கையில் எவ்வித குறைகளும் சுட்டிக்காட்டப்படவில்லை. எனவே தனியர்கள் கண்காணிப்பு பொறியாளர் பதவி உயர்வுக்கு அனைத்து தகுதிகளும் பெற்றுள்ளதால் இவர்களது பெயர்களை பரிசீலிக்கலாம்.

எனவே, **(1)** கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கு, **01.02.2012**ஐ மைய நாளாக கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள பின்வரும் செயற் பொறியாளர் / மண்டல அலுவலர்கள் பெயர்கள் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வேண்டி நியமனக்குழு மூலமாக மன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**1.** திரு. ஜெ.வேணுகோபால் – மண்டல அலுவலர்.

**2.** திருமதி.ஆர்.சுதா– செயற் பொறியாளர்.

**3.** திரு. ஏ.ஞானமணி– மண்டல அலுவலர்.

**4.** திரு.கே.வரதராஜீ–மண்டல அலுவலர்.

மன்றத்தீர்மான எண்.**288/2012**, நாள் **18.07.2012**ல் சென்னை மாநகராட்சியில் கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்கு (அதாவது மூன்று காலிப்பணியிடங்களுக்கு மட்டும் ) தெரிவுப்பட்டியல் தயாரிக்க அரசிடம் அனுமதி கோர தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனடிப்படையில் தெரிவுப்பட்டியலுக்கு அரசின் அனுமதி கோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டது. அரசின் ஆணைகள் எதிர்நோக்கப்படுகிறது.

இதற்கிடையில், சென்னை மாநகர எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதையொட்டி கண்காணிப்பு பொறியாளர் பதவிக்கு கூடுதலாக ஒரு பணியிடம் தோற்றுவித்து அரசாணை எண்.**95**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.**3**) துறை, நாள் **14.10.2012**ன்படி அரசு ஆணை வழங்கியுள்ளதால், கூடுதலாக தோற்றுவிக்கப்பட்ட ஒரு பணியிடத்தையும் சேர்த்து நான்கு பணியிடங்களுக்கு தெரிவுப்பட்டியலில் உள்ள மேற்படி நான்கு நபர்களுக்கு பதவி உயர்வு மூலம் பணி நியமனம் செய்திடலாம்.

**(2)** மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள திரு. ஜெ.வேணுகோபால், திருமதி ஆர். சுதா, திரு.ஏ.ஞானமணி மற்றும் திரு. கே.வரதராஜீ ஆகிய நான்கு நபர்களின் மந்தன அறிக்கை பெறப்பட்டுள்ளது. மந்தன அறிக்கையில் பெறப்பட்டுள்ள ஒட்டு மொத்த மதிப்பினைப் (Overall rating) பொறுத்து ரூ.**37400–67000**+ தர ஊதியம் **8700** என்ற காலமுறை ஊதிய விகிதத்தில் கண்காணிப்பு பொறியாளர் பதவியில் தற்போது காலியாக உள்ள பணியிடத்திலும் மற்றும் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட ஒரு பணியிடத்திலும் பணியமர்வு செய்து ஆணை வழங்கிட அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பவும் நியமனக்குழு பின்னேற்புக்குட்பட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**இ.பொ.து.ந.க.எண்.எம்1/1600/2012**

**ஆணையர் அவர்களின் 17.09.2012 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்.549/2012 **பொருள் எண்.54**

**12 மீட்டர் உயரத்தில் தெரு விளக்குகள் பழுதுபார்க்கும் பணிக்காக ( Boom type) 15 எண்ணிக்கைகளில் இலகுரக வாகனங்களின் மேல் பொருத்தப்பட்ட திரவ அழுத்த முறையில் (Hydraulic ) இயங்கும் ஏணி வண்டிகள் கொள்முதல் செய்ய அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் 2012—2013ஆம் நிதி ஆண்டின் அறிக்கையை 12.3.2012 அன்று சமர்ப்பிக்கையில் மின்சார துறை என்னும் தலைப்பின் கீழ் பத்தி– 68—ல் சென்னை மாநகர விரிவாக்கத்திற்கு பின் ஏற்பட்டுள்ள கூடுதல் தேவையினை கருத்தில் கொண்டு, டீசல் ஊர்தியில் பொருத்தப்பட்டு திரவ அழுத்த முறையில் இயங்கும் வகையிலான உபகரணங்கள் 12 மீட்டர் உயரமுள்ள தெரு மின் விளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்வதற்காக கொள்முதல் செய்யப்படும் அறிவித்திருந்தார்கள்.

ஆகவே, இவ்வகை மின் ஏணிகள் கொள்முதல் செய்யவேண்டி ஆணையரின் நிர்வாக அனுமதி 30.03.2012 அன்று பெறப்பட்டது. இதன்படி, ஒப்பத் திறப்பு 01.06.2012 என ஆங்கில நாளிதழ், தமிழ் நாளிதழ் மற்றும் சென்னை மாநகராட்சி ஒப்பந்த புள்ளி மலரில் இவ்வொப்பத்திற்கான விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு ஒப்பம் கோரப்பட்டது. மேலும் கணினியிலிருந்து இலவச இறக்கம் செய்துகொள்ளும்பொருட்டு ஒப்ப படிவங்கள் ஏற்றம் செய்யப்பட்டன. மேலும், மின்சார ஏணிகளின் பாதுகாப்பு கருதி, வெளிச் சந்தையில் காணப்படும் சிறப்பியல்புகளுடன் கூடிய தொழில் நுட்ப குறியீடுகள்—10 எண்ணிக்கைகள் ( 2 எண்ணிக்கை தொழில் நுட்பகுறியீடுகள் – விருப்பத்திற்கேற்ப ) மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, பிற்சேர்க்கை முறையில் கணினியில் ஏற்றம் செய்யப்பட்டன.

இதனிடையே, எதிர்கால வாய்ப்புகளை எதிர்நோக்கிய சில ஒப்பதாரர்களின் ( Prospective Bidders) வேண்டுகோளுக்கு இணங்க ஒப்ப விதிகளில், தொழில் நுட்ப குறியீடுகள் மற்றும் பண வழங்குமுறையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு ஒப்ப திறப்பு நாள் 15.06.2012 என தள்ளி வைக்கப்பட்டது. இம்மாற்றங்கள் கணினியில் பிற்சேர்க்கை முறையில் ஏற்றம் செய்யப்பட்டன.

ஒப்ப திறப்பு நாளான 15.06.2012 அன்று 10 ஒப்பங்கள், முறையே 1. திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட், 2. திருவாளர்கள். வைஷ்ணவி மோட்டார்ஸ் 3. திருவாளர்கள். டெக்னிக் ஃபேப்ரிகேஷன் லிமிடெட், 4. திருவாளர்கள். வான்ஜாக்ஸ் சேல்ஸ் பிரைவேட் லிமிடெட், 5. திருவாளர்கள். ராகுல் அன்ட் கோ, 6. திருவாளர்கள். என்.எஸ். ராமா ராவ் பாடி ஒர்க்ஸ், 7. திருவாளர்கள். எ.சி.டி. இந்தியா, 8. திருவாளர்கள். டி.பி.எஸ். இன்பிராஸ்ட்ரக்சர்ஸ், 9. திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட், மற்றும் 10. திருவாளர்கள். லிஃட் மேக் உத்யோக் பிரைவேட் லிமிடெட் ஆகியோர் பங்கேற்றனர்.

பங்கேற்ற 10 ஒப்பந்ததாரர்கள் சமர்ப்பித்த ஒப்பங்கள், தொழில் நுட்ப ரீதியாக சரிபார்க்கப்பட்டன. திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் B.S.III Emission norms கொண்ட வாகனங்களை வழங்குவதாக குறிப்பிட்டிருந்தனர். மேலும் ஒப்பத்தில், தற்போது சென்னையில் வாகன பதிவு செய்யும் மையங்களில் பின்பற்றப்படும் Emission norms கொண்ட வாகனங்களை வழங்கி நிரந்தர பதிவு செய்து தரவேண்டும் என விதிகள் ஒப்ப படிவத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.ஆனால் தற்சமயம் B.S. IV Emission norms கொண்ட வாகனங்களை மட்டுமே சென்னை மாநகரில் நிரந்தர பதிவு செய்ய முடியும். இதன்படி, திருவாளர்கள். அசோக் லேலண்டு லிமிடெட் நிறுவனம் அளித்த ஒப்பம் நிராகரிக்கப்பட்டது.

திருவாளர்கள். கிரிஸ்டல் மோட்டார்ஸ் (பி) லிமிடெட் அவர்கள் சமர்ப்பித்திருந்த ஒப்பத்தில், அரசு அங்கீகரிக்கப்பட்ட சிறுதொழில் நிறுவனமானதால் ஒப்ப வைப்பு தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்க கோரியிருந்தார்கள். ஆனால், அவர்கள் சமர்ப்பித்திருந்த ஆவணத்தில் மின்சார ஏணிகள் தயாரிப்பாளர்கள் என குறிப்பிடப்படாததால் அவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டது.

மேலும், திருவாளர்கள். ராகுல் அன்ட் கோ நிறுவனம் ஒப்ப விதிகளின்படி, இவ்வொப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த ஏணி உபகரணங்களை போன்று 20 எண்ணிக்கைகள் தயாரித்து விற்பனை செய்ததற்கான நிரூபணங்கள் இணைக்காததாலும், மற்றும் செல் நிலைச்சான்றிதழ் இணைக்காததினாலும், இவ்வொப்பம் நிராகரிக்கப்பட்டது.

ஏனைய 7 ஒப்பங்களும், தொழில் நுட்ப ரீதியாக சரிபார்க்கப்பட்டு, பிற்சேர்க்கை முறையில் குறிப்பிடப்பட்டிருந்த 10 எண்ணிக்கை தொழில் நுட்ப குறியீடுகள் அனைத்தும், ஒப்பதாரர்களால் பின்பற்றப்பட்டுள்ளதா என மீண்டும் ஒப்பதாரர்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டு, ஒப்பதாரர்களிடமிருந்து தொழில் நுட்ப குறியீடுகள் பின்பற்றப்பட்டுள்ளன என ஊர்ஜிதம் செய்துகொள்ளப்பட்டது. பின்னர் தகுதி பெற்ற 7 ஒப்பதாரர்களின் நிதி ஒப்பங்கள் 13.08.2012 அன்று திறக்கப்பட்டன. பெறப்பட்ட விலை விவரங்கள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**( Rates quoted for 12 Meters Height Hydraulic Lift platform)**

| Rates quoted by (Rs.) | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| M/s. Vaishnavi Motors Pvt. Ltd.(1) | | **M/s. TPS Infrastructure Ltd.(2)** | | M/s. Liftmak Udyog Pvt. Ltd.(3) | | M/s. ACT India (4) | |
| Rate | Amount for 15 Nos. | **Rate** | **Amount for 15 Nos.** | Rate | Amount for 15 Nos. | Rate | Amount for 15 Nos. |
| 2610000 | 39150,000 | **2175000** | **32625000** | 3957149 | 59357,235 | 2526501 | 37895515 |
| IV | | **I** | | VI | | III | |

| Rates quoted by (Rs.) | | | | | |
|---|---|---|---|---|---|
| Technic Fabrications Pvt. Ltd. (5) | | M/s. Ramarao Body Works(6) | | **M/s.Vanjax Sales Pvt. Ltd.(7)** | |
| Rate | Amount for 15 Nos. | Rate | Amount for 15 Nos. | **Rate** | **Amount for 15 Nos.** |
| 32,85,000 | 49275000 | 4741311 | 71119665 | **2267715** | **34015725** |
| V | | VII | | **II** | |

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின்படி, திருவாளர்கள். TPS Infrastructure Ltd நிறுவனம் அவர்கள் 12 மீட்டர் உயரத்தில் இருக்கும் தெரு விளக்குகள் பராமரிக்கும் பணிக்காக 15 எண்ணிக்கைகளில் திரவ அழுத்த முறையில் இயங்கும் உபகரணம் பொருத்தப்பட்ட இலகுரக வாகனங்கள் வழங்க, ஒரு வாகனம் ரூ. 21,75,000/– வீதம் 15 எண்ணிக்கைகளுக்கு ரூ.3,26,25,000/– என குறைந்த விலையாக குறிப்பிட்டிருந்தார்கள் என்பது தெரிய வருகிறது.

தமிழ்நாடு அரசு ஒளிவுமறைவில்லா ஒப்பவிதிகள் 2000 பிரிவு 29 (f)ன்படி, ஒப்பத்தில் பங்கேற்ற உள்நாட்டு சிறுதொழில் நிறுவனங்களால் தயாரிக்கப்படும் உற்பத்தி பொருள்களுக்கு 15 சதவிகிதம் விலையில் முன் உரிமையை அளித்து, ஒப்ப மதிப்பீடு செய்யும்போது, ஒப்பீட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பது தெரிய வருகிறது. (15% price preference for domestic Small Scale Industries)

